# சைவநீதி

# SAIVANEETHI

May - June 2001 விஷு வைகாசி




625.

Jai Shiv Shumbu

J.B. KHANNA & Co.,
10, DEVARAJA MUDALI St.

## 22-04-2001 அன்று நடைபெற்ற சைவ சமய உயர்தகைமைத் தேர்வுப் போட்டியில் தோற்றிப் பரிசு பெறுவோர் விபரம்.

1. **நா. நவராஜ்** — **தங்கப் பதக்கம்**
இல.3, பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, கொக்குவில்.

2. **க. முத்துவேலு** — **வெள்ளிப் பதக்கம்**
இமையாணன் கிழக்கு, வல்வெட்டித்துறை.

3. **திரு. கை. நமசிவாயக் குருக்கள்** — **வெண்கலப் பதக்கம்**
குருக்கள் குடியிருப்பு, கரணவாய் கிழக்கு, கரணவாய்.

### ஆறுதல் பரிசு பெறுவோர்

1. உருத்திராதேவி பரமநாதன் 2. செல்வி. ந. ரஞ்சிதா
3. சசிகலா செல்வராஜேஸ்வரன் 4. செல்வி. ந. ரஞ்சினி 5. பா. அனுராதா

## மாணவர்களுக்கு இடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர்:

### மேற்பிரிவு

1. கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி
**செல்வன். S. ரமணிகரன்**
2. மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி
**செல்வன். முத்தையா சேனாதிராசா**
3. மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி
**செல்வன். கனகரத்தினம் சதீஸ்குமார்**

### மத்தியபிரிவு

1. கொழும்பு கணபதி வித்தியாலம்
**செல்வன். சந்திரசேகரன் லரோஜன்**
2. கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
**செல்வி. ஸ்ரீ சுநந்தா**
3. மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
**செல்வி. ச. நித்தியபிரபா**

### கீழ்ப்பிரிவு

1. வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
**செல்வி. பவித்திரா மாணிக்கவாசகம்**
2. வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்
**செல்வி. பி. ருசாந்தன்**
3. மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
**செல்வி. கு. பிரதீபன்**

உ

சிவமயம்

# சைவநீதி

## ஐம்பதாவது இதழ்



அஞ்சு மஞ்சுமோ ராடி யரைமிசை

அஞ்சு போலரை யார்த்ததின் றத்துவம்

அஞ்சு மஞ்சுமோ ரோரஞ்சு மயாவன்

அஞ்சு மாமெம கத்துறை யாதியே.

சைவசித்தாந்த எழில் ஞானப் பெருவிழா

விஷு வைகாசி 19 அன்று மலரும்

## பொன் இதழ்

உ
சிவமயம்

# சைவநீதி

## ☞ உள்ளே....


1. வரவேற்கின்றோம் ....01
- செந்தில்வேள்

2. வாழ்த்துரை ....02
- சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிய பரமாசாரிய சுவாமிகள்

3. அருளாசிச்செய்தி ....03
- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

4. ஆசிச்செய்தி ....04
- சிவஸ்ரீ ச. சுப்பிரமணியப்பட்டர்

5. வாழ்த்துரை ....05
- D. M. சுவாமிநாதன்

6. கௌரவ ஆசிரியரின் பேனாவிலிருந்து ....06

7. மாகேசுர பூசையியல் ....10
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

8. நாரதர் ....12
- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

9. தமிழோடிசை பாடல் ....15
- கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி

10. பரம பக்தியாம் பக்குவப் பழம் ....18
- பண்டிதர் ச. சுப்பிரமணியம்

11. யோகம் கூறும் சைவநீதி ....21
- பேராசிரியர் கே.வி.கே. சிவசுவாமி

12. கலகமானிடப் பூச்சிகள் ....24
- முருகவே பரமநாதன்

13. அயரா முயற்சியால் அரன் அருள் பெற்ற அடியார் ....27
- சிவ. சண்முகவடிவேல்

14. சிவ வழிபாட்டின் தொன்மையும் சிறப்பும் ....31
- பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன்

15. **Kandha Shasti Viratham** ....34
- D. T. Senthilverl

16. சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம் ....39
- மட்டுவில் ஆ. நடராசா

17. மகேசுர வடிவங்கள் ....43

18. அர்த்த நாரீசுவர தத்துவம் ....44
- டாக்டர் தி. செந்தில்வேள்

19. குமரகுருபர சுவாமிகள் ....45
- வ. சிவராஜசிங்கம்

20. ஊழிற் பெருவலி ....53
- க. கணேசலிங்கம்

21. நிறைவான வாழ்வை அளிக்கும் சைவசமயம் ....57
- பேராசிரியர் பொன். சக்திவேல்

22. **Siva Weds Uma** ....59
- V. Sivarajasingam

23. திருத்தாண்டகம் ....62
- திருநாவுக்கரசு நாயனார்



சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். -இதழ் நிர்வாகிகள்.

## சைவநீதி விளங்கத் தமிழ் தந்த வள்ளலை

### வணங்குகின்றோம்!

### வரவேற்கின்றோம்!

### வாழ்த்துகின்றோம்!

திருவாசகம் தந்த திருநாட்டிலிருந்து
திருவாவடுதுறை ஆதீன இளவல்
மேன்மையாம் சைவநீதி விளங்கும் இலங்கைக்கு
ஆன்மீக அறிவுச் சீர்மிகுகாசி
விசுவநாத சுவாமிகள் விசு வைகாசியில்
வரலாற்றுத் தடம் பதிக்க வான்வழி
வருகை தந்த வாய்பினிற்காக விண்நோக்கி
வணங்குகின்றோம்.

ஆழ்கடல் அடியினின்றும் இமயமாமலை
முகிழ்க்க முன்னர் எம்பெருமானே
தலைமைப் புலவனுமாய் வீற்றிருந்து
தலைச்சங்கம் வளர்த்துத் தமிழாய்ந்த
சிவபூமிக்கு வருகை தந்துள்ள சுவாமிகளே
வருக வருகவே நும்வரவுநல்
வரவே என்று மனமார வரவேற்கின்றோம்.

கதிர்களிலே உதித்தவன் அமர்ந்தமலை கதிர்மலை, நம்பிராசனி டத்திலே வள்ளி நாச்சியார் வளர்ந்தமலை வள்ளி மலை, கதிர்களிலே உதித்தவன் வள்ளி நாச்சியாரிடம் காமம் கொண்டு நின்ற இடம் கதிர்காமம். பிறந்த பயனைப் பெற ஒரு முறையாகிலும் தரிசிப்போமா என்று தவமிருப்பார்களே இத்தலத்தில் காலங்காலமாக அள்ள அள்ளக் குறையாது திருநீறு விளைந்து கொண்டே இருக்கும் விபூதிமலை.

இதனையும் இன்னும் இன்னும் எத்தனையோ, அத்தனையும் அகத்தே கொண்ட புண்ணிய பூமிக்கு வருகை தந்த வள்ளலே வாழ்க நும்திருப்பணி வாழ்க சைவநீதி விளங்க வாழ்க வென்றே வணங்கி வரவேற்று வாயார வாழ்த்தும்

**செந்தில்வேள்**

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாடுதுறை ஆதீனம்
23வது குரு மகாசந்நிதானம்
**சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவாடுதுறை - 609 803. (நாகை மாவட்டம்)
தொலைபேசி எண்: 04364 32021

நாள்: 31-03-2001

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகள் இறைவன் அடிவாழ்க"

## வாழ்த்துரை

தங்கள் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி.

சைவநீதி சைவப் பெருமக்களுக்கு நீதியைப் பன்னெடுங்காலமாக நல்கி வந்து பொன் இதழ் வெளிவர இருப்பதறிந்து கொண்டோம். பொன் இதழ் பொலிவுறவும் இன்னும் பல ஆண்டு விழாக்கள் கொண்டாடி மகிழவும் நமது வழிபடு மூர்த்தியாகிய ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி: 2870

**நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.**

## அருளாசிச் செய்தி

அன்பு நெஞ்சத்தீர்,

மாதம் தோறும் வெளிவரும் வைநீதி சஞ்சிகை ஐம்பதாவது இதழ் வெளிவருவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். காலத்துக்கேற்ற நல்ல சிந்தனைகளைத் தாங்கி வரும் சமய சஞ்சிகையான சைவநீதி மலர்ந்த நாற்பத்தொன்பது இதழ்களும் பலவிதமான நறுமணங்களை கொண்டதாக அமைந்திருந்தது. இதுபோல் தொடர்ந்து வரும் இதழ்கள் நறுமணமுள்ளதாக அமைய வேண்டும் என்பது நம்மவர் விருப்பம். சைவ மக்கள் சமய, கலாசார ரீதியாக பல நெருக்குதல்களை கொண்டு வாழும் காலத்தில் எழுத்து வடிவத்தில் சமய விழுமியங்களையும் கலாசாரப் பண்பாடுகளையும் தாங்கி வந்த சைவநீதி மக்கள் மத்தியில் நல்லதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டது. கணணி மயமான இக்காலத்தில் சிறுவர் தொடக்கம் முதியவர் வரை சிந்தனை தெளிந்திருக்கும் இந்நேரத்தில் வரப் போகும் கட்டுரைகளும் செய்திகளும் தெளிவானதாகவும் அமையவேண்டும் என்பது அனைவரது விருப்பாகும். இப்பணிக்கு அர்ப்பணித்திருக்கும் ஆசிரியரும் அவரைச் சார்ந்தவர்களையும் சைவமக்கள் சார்பில் வாழ்த்துகின்றோம். சைவநீதி மலர்ந்து சைவ மக்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

உ
சிவமயம்

# ஆசிச்செய்தி

திருக்கேதீஸ்வரம்
## சிவஸ்ரீ ச. சுப்பிரமணியபட்டர்

யானைமுகத்தான் பொருவிடையான் சேய்அழகார்
மான மணிவண்ணன் மாமருகன் - மேனிகழும்
வெள்ளைக் குமிழி மதத்து விநாயகன் என்
உள்ளக் கருத்தின் உளன்.

அரிதான மானிடப்பிறவியினும் அரிதான சைவராய்ப் பிறந்திட்ட நற்புண்ணிய ஆத்மாக்களாகிய சைவமக்களின் தோற்றத்தின் தொன்மைச்சிறப்பு எண்ணுந்தோறும் பெருமை கொள்ளுகின்ற நாம் இந்த சைவசமயத்தின் வளர்ச்சியில் "தண்மை நிழலுக் கேற்ற பசுந்தளிர் இலை"களாகவாவது இருக்கவேண்டும்.

முனிசிரேஷ்டர்கள், ஞானிகள், சமயகுரவர் நாயன்மார்கள், சைவப்புலவர்கள், வித்துவ சபைகள், மன்னாதிமன்னர்கள், ஆதீனங்கள் நாவலர் போன்றே அறிஞர்கள் சித்தர்கள் அவ்வப்போது சைவமும் தமிழும் வளர்ந்துவர அரும்பாடுபட்ட தன்மையை எவரும் அறிவர்.

அன்றைய காலகட்டத்தில் - மதமாற்றம் ஒரு இடர்ப்பாடாக இருந்ததுடன் மதப் புரட்சிகளையும் தாண்டிவந்த வண்ணம் போன்று இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான வளர்ச்சி ஒருபுறம் மெஞ்ஞானத்தை எம்மக்கள் அறிவதற்கு இடர்பாடாக இருப்பது மட்டுமல்லாது புலன்களைச் சிதைக்கும் ஊடகங்களின் பரிணாமவளர்ச்சிக்குப் புறம்பே சைவநீதியை நிலைநாட்ட சைவ அறிஞர்கள் காட்டும் அக்கறை போற்றுதற்குரியது.

இவ்வகையில் இந்தச் "சைவநீதி" எனும் சஞ்சிகையானது தன் நோக்கத்தில் சிறிதும் பிசகாது பல இடர்ப்பாடுகளைக் கடந்து 50 வது இதழை இன்று வெளிவரச்செய்யும் கைங்கரியம் சைவர்களுக்கோர் வரப்பிசாதமாகும்.

"சைவநீதியின்" போக்கு என்றும் நிற்காத லோகக் கடிகாரமான ஆதவனைப் போன்று, அதன்பாட்டுக்கு அதன் கடமையைச் செய்துவரும் என்பது திண்ணம். அதற்கு எம்பெருமான் கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரப் பெருமானின் திருவருளுடன் எமது நல்லாசிகள் உரித்தாகுக.

# வாழ்த்துரை

**D. M. சுவாமிநாதன்**

*அறங்காவலர், பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்*

சைவநீதி என்ற மாத இதழ் கடந்த நாலு வருடமாக வெளிவருகிறது. சைவ சமய மக்கள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய சமய உண்மைகள், தத்துவங்கள், விளக்கங்கள் என்பனவற்றைத் தாங்கி வெளிவருகிறது சைவநீதி.

ஆலயங்களின் வரலாறுகளை உள்ளடக்கி சிறப்பு மலராகவும் வெளிவந்து அவ்வாலயத்தின் பெருமைகளை மக்களுக்கு அறியச் செய்துள்ளது சைவநீதி.

இலங்கையில் மட்டுமல்லாது கடல் கடந்த நாடுகளிலும் சைவநீதி மணம் பரப்பி வருகிறது.

சைவ மக்கள் சைவநீதி சந்தாதாரராகிப் படித்துப் பயன் பெற வேண்டும்.

இம்மாதம் சைவநீதி ஐம்பதாவது இதழ் பொன் இதழாக வெளி வருகின்றது. இவ்விதழ் “சைவ சித்தாந்த எழில் ஞானப் பெருவிழா”வில் வெளிவருவது சிறப்பானது.

“சைவநீதி” சிறப்புற வாழ்த்துகின்றேன்.

# கௌரவ ஆசிரியரின் பேனாவிலிருந்து...

நாட்டைவளமாக்கும் உழவர்களின் சிறப்பைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் "ஏர்எழுபது" என்னும் நூலில் நன்கு பாடியிருக்கிறார். அவரும் ஓர் உழவரே. அவர் சொல்லேர் உழவர். முன்னவரை விட இரு உழவர்களைத் திருவள்ளுவரும் தம் திருக்குறளில் அறிமுகம் செய்து வைத்திருக்கிறார். அதனை நாம் நினைவு கொள்வது நன்று. ஒரு பகுதியினர் நான் முன்னர் குறிப்பிட்ட சொல்லேர் உழவர். அவர்கள் தான் புலவர்கள். மற்றயவர் வில்லேர் உழவர்கள் - இவர்கள் அரசர்கள்.

"வில்லேர் உழவர் பகை கொள்ளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை"

என்று கூறுகிறது திருக்குறள். இதனை வழிமொழிந்து கம்பரும் வில்லை விடுத்து அதனிற் தொடுத்துவிடும் அம்பாய்க் காணுகிறார். அதனையும் இங்கு காண்போம்.

"சொல்லம்பு வில்லம்பு என்றிரண்டம்புண் டிந்தமேதினிமேல்
வில்லம்பு சொல்லம்பை வெல்லாவாம்...."

என்று பாட்டுத் தொடர்கிறது. இங்ஙனம் பேசப்படும் அரசர்களும், புலவர்களும், மருவியும் பொருதும் (வாதிட்டும்), வாழ்ந்து வந்தமையைச் சங்க இலக்கிய காலத்திலிருந்து, மன்னராட்சி (முடியாட்சி) வரை அறியலாம்.

புலவர்களுடைய படைப்புக்கள் என்றும் அழியாது நின்று நிலவுவன. படைப்புக் கர்த்தாக்களும் இருவர். ஒருவகையினர் புலவர்கள். மற்றவர் ஒரு தனிநபர். அவர்தன் பிரம்மா. இருவகையினரும் கலைமகளை நாவில் இருத்தியே படைப்புத்தொழிலைச் செய்கின்றனர். என்று ஒரு பாவல்லவரே கூறுகின்றார். இதனை

"கலைமகள் வாழ்க்கை முகத்தெனினும்
மலரான் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாழ்போல் மாயாவே புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"

என்ற பாவால் அறியலாம். இங்கு மலரவன்-பிரமன். இவன் செய்யும் உடம்பு உயிர் நீங்க வெற்றுடம்பாகி அழிந்து போகிறது. வண்டமிழோர்-புலவர்கள். இவர்கள் புனையுமுடம்பு பாக்கள். புகழும் பொருளுடைமையால் என்றும் அழியாது நின்று நிலவி மக்களுக்குப் பயன்படுகிறது. இவற்றால் கற்றோன் மன்னனைக் காட்டிலும் சிறப்புடையவன். பிரமனைக் காட்டிலும் உயர்வுடையவன். அவன் படைப்பு என்றும் வேண்டியது என்று அறிக.

இன்று இந்தப்படைப்புப் பல்வகையாகவும் பெருகிச்சிறக்கிறது. கவிவளம் உடையோர், உரைநடைவளம் உடையோர் என்று வளர்கிறது. எழுத்தாளர்களும் இவ்வகையில்

அடங்குவர். பத்திரிகைத் துறையும் ஒரு தனித்துறையாகி மிளிர்கிறது. எனவே பத்திரிகை யாளர்களும் ஒரு படைப்பாளிகளே. தினக்குரல் பிரதம ஆசிரியர் தங்கள் வர்க்கத்தினரைச் "சொல்லேர் உழவர்" என்று ஒருசமயம் குறிப்பிட்டிருந்தார். அதுவும் சாலப்பொருத்தமானதே.

பத்திரிகைகளுள் நாளேடுகளாகவும், வாரமலர்களாகவும், மாதசஞ்சிகைகளாகவும் வெளிவந்து மக்களின் அறிவுவிருத்திக்குப் பயன்படுகின்றன. இத்துறையில் பயன்படுவோர் பலராவர். இவர்களை ஊடகவியலாளர்கள் என்று இக்கால வழக்கில் அழைப்பர். இத்துறையை விருத்தி செய்ய நாட்டுக்கு நாடு பல ஸ்தாபனங்களும் உண்டு. இத்துறைக்கு சர்வகலாசாலைகளும் போதனை மூலம் வசதிகள் செய்து கொடுக்கின்றன. இத் துறையாளர்களின் படைப்புக்களே நாட்டின் உயர்வுக்கும் அழிவுக்கும் காரணமாகின்றன. இதற்கு உதாரணங்கள் இருநூற்றாண்டுக்கு முற்பட்ட ஐரோப்பிய வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம்.

இந்நெறியில் நான் எடுத்துக் கொண்ட விஷயம் மாதசஞ்சிகைகள் பற்றியவையே. இக்காலத்தில் மாதசஞ்சிகைகள் பல நாடுகளிலும் பல்கிப்பெருகி வெளிவருகின்றன. நம் நாட்டிலும் இவற்றுக்குக் குறைவில்லை. ஆங்காங்கு சஞ்சிகைகள் தோன்றி, மறைவனவாய்ச் சில நின்று நிலவிப் பயன்தருவனவாகவும் உள்ளன. ஈழநாட்டைப் பொறுத்தவரையில் சஞ்சிகைகள் வளர்ந்து நின்று நிலைக்க ஆதரவு மிகமிகக் குறைவே. வாசிப்பு வட்டம் குறைவு. ஆதரிப்போர் வட்டம் அதனிலும் குறைவே.

தமிழ் மொழியில் ஒரு நூலை எழுதினால் அதைவாங்கிப் படிக்க யாரும் முன்வருவ தில்லை. சமயத்தில் என்றாலே (சைவம்) கேட்பானேன். யாரும் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை. இவ்வகைச் சஞ்சிகைகள் என்றால் யாரும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள். பொதுவாக நம் தமிழர், சைவர்கள் கூறும் வார்த்தைகள், எங்களுக்கு வாசிக்க நேரமில்லையென்பதே. இதனை என் காதாரக் கேட்டிருக்கிறேன். நல்ல படைப்பு நல்ல பணியென்று கொண்டு தன்பங்களிப்பை நல்கி அதனை வாங்கிவைத்துத் தான் படிக்காவிட்டாலும் தன் பின்சந்த திக்காவது இதனைச் சேகரித்து வைக்கலாமே. அதுதான் நடக்காத காரியம். அதனால் தமிழ், சமய நூல்களும் சஞ்சிகைகளும் வளர்ச்சிபெறுவதில்லை. நின்று நிலைப்பதில்லை.

நான் ஒரு படைப்பாளி, அத்துடன் சமய மாத இதழின் கௌரவ ஆசிரியர் முன்னரும் சஞ்சிகைகளை நூல்களை வெளியிட ஆதரவும் கொடுத்து வந்திருக்கிறேன். இவ்விடயங்களில் என் அனுபவங்களைச் சிறிது குறிப்பிட விரும்புகிறேன். எனது வரலாற்றாசிரியர் தமிழில் வரலாற்றுப் பாடநூல் ஒன்றினை எழுதி வெளியிட்டார். அவர் ஒரு சிறந்த வரலாற்றாசிரியர். அத்துறைப் பட்டதாரியுமாவார். பெருந்தொகைப் பணம் கடன்பட்டு நூல்வெளியிட்டும் விற்பனையான தொகை குறைவே. கடன் தீர்க்க முடியாமல் காணி விற்றுக் கொடுத்தார். இதனைத் தெரிந்திருந்த நான் நூல் எழுதும் ஆற்றல் இருந்தும் அதனைத் தவிர்த்தே வந்தேன். பின்னர் எழுதி வெளியிடவேண்டி வந்துவிட்டது. கைவசம் பல நூல்களுக்குரிய பிரதிகளிருந்தும் அதனை நூலாக்கும் எண்ணமின்றி இருக்கிறேன். பிள்ளைகளையும் இப்பணியில் முயலவேண்டாம், யாரும் விரும்பிக் கேட்டால் கொடுங்கள் என்று கூறியுள்ளேன்.

ஆயினும் ஒரு சமய சஞ்சிகை மாதஇதழ் நடாத்திவருகின்றோம். அதுதான் "சைவநீதியாகும்" இதனால் வந்த அனுபவங்களையும் சிறிது பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் சமய மாதஇதழ் நடத்துவோம் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. தொண்ணூறு நடுப்பகுதியில் எனது "செயாஉலகநீதிக் கதை"களை அச்சேற்றி வெளியிட்டோம். அதனை அச்சிட்டுத்தந்த அச்சக உரிமையாளர் ஒரு மாத சமய இதழை நடாத்த எண்ணியிருந்தார். அவர் எனது மகனிடம் தன் கருத்தினை வெளியிட்டு நடாத்தித்தரும்படி வேண்டினார்.

வரவு செலவு விநியோகம் தன்னோடு, நடாத்தும் பொறுப்பு உங்களோடு, வருவாயில் பங்குண்டு என்று கூறினார். மகன் என்னிடம் இதனைத் தெரிவித்தார். நான் சம்மதங் கொடுக்கவில்லை. இங்ஙனம் ஒன்றைச் செயற்படுத்துவது கஷ்டம். இது வேண்டவே வேண்டாம் என்று கூறினேன். பல தடைகள் வரும் அதனைத் தாண்டி நடத்த வேண்டும். தொடங்கினவர் சில சமயம் விட்டு விடலாம். எம்மால் தொடர்ந்து நடத்தமுடியுமா? என்று கூறினேன். மகன் விட்டபாடில்லை. நடத்தத் தொடங்கினோம். சில மாதங்கள் தான் கடந்திருக்கும் அச்சுக்கூடம் மின்னொழுக்கால் எரிந்து போயிற்று. நான்காவது இதழ் அச்சேறி வெளியிட ஆயத்தமாகவும் இருந்தது. அதுவும் தீப்பற்றிச் சாம்பலாயிற்று. எழுத் துப் பிரதிகளும் மிஞ்சவில்லை. மனம் சோர்ந்தாலும் மகன் முயற்சியைக் கைவிடவில்லை. தொடங்கினவர் தன் பெருமுதலை இழந்து பரிதவித்தார். அவரும் மனம் தளர்ந்து சைவநீதி இதழைக் கைவிட்டார். அவரால் வேறு என்ன செய்ய முடியும், அதுவும் சரியே என்று கொண்டு மகனும் பணியில் தொடர்ந்தார். எத்தனை அச்சுக்கூடங்களுக்கு ஏறி இறங்கினார். எத்தனை பேரின் உதவியை நாடினார் என்பது அவருக்கே வெளிச்சம். "நாமறியோம்", "ஒரு பொல்லாப்புமில்லை", "எப்பவோ முடிந்த காரியம்" என்ற சிவயோக சுவாமிகளின் மகா வாக்கியங்கள் தான் இதற்கு ஆறுதல் தரத்தக்கன. ஆனால் ஒன்று மாத்திரம் நாமறிந்த உண்மை. சைவ மாத இதழ் ஒன்றை நடாத்திக் கொள்வது மகாகஷ்டம் என்பதே.

நிதிவளம், ஆள்வளம் உள்ள "இந்துசாதனம்", "சிவதொண்டன்" முதலாம் சைவ இதழ்கள் இடையிடையே நின்று நின்று இன்றும் தொடர்கின்றன. 32 வருடங்களுக்குமேல் தொடர்ந்து வந்த ஆத்மஜோதி சமய மாத இதழ் அச்சுக் கூடமிருந்ததும், ஆள்வளம் நீதிவளங்கூட இருந்தன. இனக்கலவரம் அதன் அழிவுக்குக் காரணமாகியது. எனவே சைவ மாத இதழ்களுக்கு எங்கே? எப்போது என்ன நேரும் என்று சோதிடர்களாலும் கணித்துச் சொல்லமுடியாது.

நாங்கள் பல கஷ்டங்களைக் கடந்து இறையருளால் 50 மாதங்களைக் கடந்து சாதனை புரிந்துள்ளோம். இந் நன்முயற்சிக்குச் சான்றாக சைவசித்தாந்த எழில்ஞானப் பெருவிழா எடுத்து இறைவனுக்கு இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம். இதில் சைவன் ஒவ்வொருவரும் பங்காளராகும் வண்ணம் அழைப்புவிடுக்கின்றோம்.

மேன்மைகொள் "சைவநீதி" உலகெலாம் விளங்கத் தாங்கள் எம்பணிக்கு ஆதரவு தருக என்று முகமலர்ந்து இருகரங்கூப்பி வேண்டுகின்றோம்.

"வாழ்க சீரடியாரெல்லாம்"

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் 5 விஷு வைகாசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாதஇதழ் 2

கௌரவ ஆசிரியர்:
ஞானசிரோமணி
சைவப்புலவர்மணி, வித்துவான்
**திரு. வ. செல்லையா**

மதியுரைஞர்:
**சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D. M. சுவாமிநாதன்**
அறங்காவலர்
ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
Chairman U.P.S.

**திரு. கு. மாகலிங்கம்**
Sivayougasami Trust Fund

துணை ஆசிரியர்:
**திரு. சு. சதாசிவம்**
தொ.பே.: 507325, 586013

பதிப்பாசிரியர்:
**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷ்மி அச்சகம்

விநியோகம்:
**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர்:
**திரு. செ. நவநீதகுமார்**

42, ஜானகி ஒழுங்கை,
கொழும்பு - 04.
தொ.பே: 078-626882, 595221
E-mail: saivaneethy@hotmail.com

சைவநீதி இம்மாத இதழ் ஐம்பதாவது இதழாக வெளி வருகிறது. நான்கு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள வேளையிலே கடந்த காலத்தை நோக்கினால் பல தடைகளைத் தாண்டிச் சைவநீதி தடம்பதித்துள்ளமை தெரிகிறது.

சைவநீதி தொடர்ந்து வெளிவருவதற்கு சைவசமயத்தின் மீது பற்றுக்கொண்ட பெரியவர்கள் ஆதரவும், வாசகர்களின் பங்களிப்பும் துணையாய் அமைந்துள்ளது.

காலத்தின் தேவைக்கேற்ப பல ஆக்கங்கள் வெளிவந்தன. சைவ சமயத்தவர் அனைவரும் சைவநீதியைப் பெற்றுப் பயனடைய வேண்டும். குறிப்பாக மாணவர்கள் மத்தியில் சமய அறிவைப் பெருகச் செய்ய வேண்டும். அவர்கள் மூலமாக சைவ மரபுபேணும் ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

பல இடங்களில் மாணவர்களுக்குச் சமயக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. போட்டிகள் நடத்தப்பட்டன. கடந்த மாதம் கட்டுரைப் போட்டி, உயர்தகமைத் தேர்வுப் போட்டி என்பனவும் நடத்தப்பட்டன. ஆர்வத்துடன் போட்டியில் பங்குகொண்ட அனைவரையும் பாராட்டுகின்றோம்.

இவ்விதழ் சைவசித்தாந்த எழில் ஞானப் பெருவிழாவில் வெளிவருகிறது. இவ்விழாவிற்கு எழுந்தருளிய திருவாவடு துறை ஆதீன இளைய சந்நிதானத்தின் திருவடிகளை வணங்குகின்றோம். வருங்காலத்தில் சைவநீதியின் சமயப் பணி விரிவடைய அனைவரதும் ஆதரவும், அரவணைப்பும் தேவை. "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்கைச் சிந்தித்துச் சமயப்பணி செய்வதும் பணிசெய்பவர் களுக்கு ஆதரவு வழங்குவதும் அனைவரது கடமையாகும்.

நன்றி!

சைவ வினா-விடை

# மாகேசுர பூசையியல்

- *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்*

**1. மாகேசுரபூசை யாவது யாது?**

ஆசாரியர், நிருவாணதீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், சமய தீக்ஷிதர் என்னும் நால்வகை மகேசுரர் களையும் விதிப்படி பூசித்துத் திருவமுது செய்வித்தலாம். (மாகேசுரர் = மகேசுரனை வழிபடுவோர்)

**2. மாகேசுரபூசையால் விளையும் பலம் ஏற்பவருடைய உயர்வு தாழ்வுகளினால் வேறுபடுமா?**

ஆம்; வைதிகப்பிராமணர் ஆயிரம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலமுஞ் சமயதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப் பிராமணர் பதினாயிரம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் விசேஷதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் லக்ஷம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் நிருவாணதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப் பிராமணர் கோடிபேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் சைவாசாரியார் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும்.

**3. மாகேசுரபூசைக்குப் பாகஞ் செய்பவர்கள் எப்படிப் பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்?**

சம சாதியர்களாய்ச், சிவதீக்ஷை பெற்றவர் களாய், நித்திய கருமந் தவறாது முடிப்பவர்களாய், சுசியுடையவர்களாய், மாகேசுர பூசைக்கு உபயோகப்படுபவைகளை மாகேசுர பூசை நிறைவேறு முன் புசிக்க நினைத்தலுஞ் செய்யாதவர்களாய் இருத்தல்வேண்டும். இவ் வியல்பில்லாதவர்களாலே சமைக்கப்பட்டவை தேவப்பிரீதியாகாது, இராக்ஷதப்பிரீதியாகும்.

**4. மாகேசுரபூசைக்கு விலக்கப்பட்ட பதார்த் தங்கள் யாவை?**

உள்ளி, வெள்ளுள்ளி, உருண்டைச் சுரைக் காய், கொம்மடிக்காய், செம்முருங்கைக்காய், தேற்றாங்காய், அத்திக்காய், வெண்கத்தரிக் காய், பசளை, வள்ளி, கொவ்வை என்ப வைகளாம்.

**5. மாகேசுரபூசை எப்படிச் செய்தல் வேண்டும்?**

மாகேசுரர்களைத் தூரத்தே கண்டவுடனே, சிரசின்மீது அஞ்சலி செய்து, விரைந்தெதிர் கொண்டு அழைத்து வந்து, அவர்களுடைய திருவடிகளைத் தீர்த்தத்தினால் விளக்கி, அத்தீர்த்தத்தை சிரமேற்றெளித்து, அவர் களைப் பந்தியாக இருத்தி, ஓதுவார்கள் தேவாரம் பண்ணுடன் ஓத, அன்னங் கறி முதலியவற்றைப் படைத்து, பத்திரபுஷ்பங்களால் அருச்சனை செய்து, தூப தீபங் கொடுத்து, அவர்களெதிரே பூக்களைத் தூவி, நமஸ்காரம் பண்ணி, எழுந்து நின்று, ஆசீர்வாதம் முற்றிய பின் திருவமுது செய்வித்தல் வேண்டும். அவர்கள் திருவமுது செய்து கரசுத்தி செய்து கொண்ட பின், அவர்களெதிரே இயன்ற தக்ஷிணை வைத்து நமஸ்காரஞ் செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, மீண்டும் நமஸ்காரஞ் செய்து, சேஷம் புசித்தல் வேண்டும்.

**6. மாகேசுரபூசைப் பந்திக்கு யோக்கியரல்லாதவர் யாவர்?**

சிவநிந்தகர், குருநிந்தகர், சங்கமநிந்தகர், சிவசாத்திர நிந்தகர், சிவத்திரவியாபகாரிகள், அதீக்ஷிதர், நித்திய கருமம் விடுத்தவர் முதலாயினார்.

---

**பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல். 141**

வேறொருவன் உடைமையாகவுள்ளவளைக் காதலித்து வாழும் மடமை, உலகத்தில் அறநூலையும் பொருள் நூலையும் கற்றுத் தெளிந்தவரிடம் இல்லை.

**7. மாகேசுரபூசையிலே மாகேசுரரை யாராகப் பாவித்துப் பூசித்தல் வேண்டும்?**

மாகேசுரபூசை எந்தத் தேவரைக் குறித்துச் செய்யப்படுகின்றதோ, அந்தத் தேவராகப் பாவித்துப் பூசித்தல் வேண்டும்.

**8. பூசை செய்யப்படும் போது மாகேசுரர்கள் யாது செய்தல் வேண்டும்?**

பூசிப்பவன் எத்தேவரைக் குறித்துப் பூசிக்கின் றானோ அத்தேவரைத் தாம் இடையறாது மெய்யன்போடு தியானித்துக் கொண்டிருந்து அப்பூசையை அவருக்கு ஒப்பித்தல் வேண்டும்.

**9. பந்தி வஞ்சனை செய்து புசித்தவரும் படைத் தவரும் படைப்பித்தவரும் யாது பெறுவர்?**

கண்டமாலையால் வருந்துவர்; ஊர்ப்பன்றி களாய்ப் பிறந்து மலத்தைத் தின்பர்; நரகங் களிலில் விழுந்து நெடுங்காலம் வருந்துவர். ஆதலினால், வஞ்சனை ஒரு சிறிதும் இன்றி எல்லாருக்குஞ் சமமாகவே படைத்தல் படைப் பித்தல் வேண்டும். பந்தி வஞ்சனை செய்து படைக்கப் பட்டவைகள் பிசாசுகளுக்கும் இராக்ஷதர்களுக்கும் அசுரர்களுக்குமே பிரீதி யாகும்; தேவப் பிரீதியாகா.

**10. மாகேசுர பூசா காலத்திலே மாகேசுரரல்லா தவர் வரின், யாது செய்தல் வேண்டும்?**

குருடர், முடவர், குழந்தைகள், வயோதிகர், வியாதியாளர், வறியவர் என்பவர்கள் வரின், அவர்களை விலக்காது இன்சொற்களினாலே மிக மகிழ்வித்து, அவர்களுக்கும் அன்னங் கொடுத்தல் வேண்டும். வறியவருக்குக் கொடுத் தலே கொடை; செல்வருக்குக் கொடுத்தல் திரும்பவாங்குதற் பொருட்டுக் கடன் கொடுத் தல் போலும்.

**11. மாகேசுரபூசை ஆவசியமாக எவ்வெக் காலங்களிலே செய்தல் வேண்டும்?**

தீக்ஷை பெற்றுக்கொண்ட பொழுதும். சிவ லிங்கப் பிரதிட்டை செய்வித்துக்கொண்ட பொழுதும், உபவாசஞ் செய்து பாரணம் பண்ணும் பொழுதும், சிவசாத்திர சிவபுரா ணங்கள் படிக்கத் தொடங்கிய பொழுதும், படித்து முடித்தபொழுதும், புண்ணிய ஸ்த லத்தை அடைந்த பொழுதும், யாத்திரை செய்து திரும்பி வீடு சேர்ந்த பொழுதும், திருக்கோயிலிலே பிரதிட்டை சம்புரோக்ஷணம் மகோற்சவம் முதலியவை நடக்கும் பொழுதும், வியாதியினாலே பீடிக்கப்பட்டு மருந்து உட் கொள்ளத் தொடங்கும் பொழுதும், வியாதி நீங்கிய பொழுதும் மாகேசுரபூசை ஆவசிய மாகச் செய்தல் வேண்டும்.

**12. அவ்விசேஷ தினங்களின் மாகேசுரபூசை செய்பவர்களும் மாகேசுர பூசையிலே அருச் சனை ஏற்று அமுது செய்யப் புகும் மாகேசு ரர்களும் அத்தினத்திலே எப்படிப்பட்டவர் களாய் இருத்தல் வேண்டும்?**

மாகேசுர பூசைக்கு முன்னே யாதொன்றும் புசிக்கலாகாது. அன்றிரவிலே பசித்ததாயின், அன்னம் புசியாது பால் பழம் முதலியவற்றுள் இயன்றது உட்கொண்டு சுத்தர்களாகிச் சிவபெ ருமானையே சிந்தித்துக்கொண்டு, நித்திரை செய்தல் வேண்டும். முதல்நாள் இராத்திரியும் அப்படியே செய்தல் வேண்டும்.

**13. முன்செய்த பாவங்களினால் வந்த மகா ரோகங்களினாலே பீடிக்கப்படுவோர் மாகேசுர பூசை எப்படிச் செய்தல் வேண்டும்?**

ஒரு மண்டலமாயினும், பாதி மண்டலமாயினும், விதிப்படி சிரத்தையோடு புண்ணிய ஸ்த லத்திலே புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, சிவலிங்கப் பெருமானுக்கு விசேஷ பூசை செய்வித்து, மாகேசுரபூசை பண்ணிச் சேஷம் புசித்துக்கொண்டு வரல் வேண்டும். அதன் பின்னரே மருந்து உட்கொள்ளல் வேண்டும்.

*The folly of desiring her who is the property of another will not be found in those who know (the attributes of) virtue and (the rights of) property.* *141*

# நாரதர்

இலக்கியகலாநிதி,
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

கந்தபுராணம் பதினாயிரஞ் சொன்ன கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின், பதினாயிரத்து முந்நூற்று நாற்பத்திரண்டாஞ் செய்யுள், 'பெய்யற்ற கீரன்' என்று தொடங்குகின்றது. தம் வழிபடு தெய்வமாகிய திருமுருகன்பால் ஆற்றுப்படை அருளிய நக்கீ ரனாரை, 'பொய்யற்ற' என்ற விசேடணத்தை வழங்கிச் சிறப்பிக்கின்றார் சிவாசாரிய சுவாமிகள்.

திருமுருகாற்றுப்படையிலே திருவாவினன்குடியிலே, திருமாலுக்கும் இந்திரனுக்கும் மத்தியில் உருத்திர மூர்த்தியை உள்ளிட்டதொரு மகா திருக்கூட்டம், பிரமதேவரைச் சிறை வீடு குறித்து, திருமுருகனிடம் அணிவகுத்துச் செல்லுகின்றது. அந்த அணிவகுப்பின் முன்னணியில், முருகு இனிது முகஞ்செய்யும் பொருட்டுப்போலும் முனிவர் குழாத்தை அமைத்துக்கொண்டது அந்த மகா திருக்கூட்டம். முனிவர்களை முன்னிட்டுச் செல்லும் கூட்டம் அக்கூட்டம்.

முன்னணியிலே திருமுருக சந்நிதிக்குச் செல்லும் பாக்கியம் படைத்த அம்முனிவர்களை, 'துனியில் காட்சி முனிவர் முற்புக' என்று, 'துனியில் காட்சி' என்ற விசேடணத்தை வழங்கிச் சிறப்பித்தருளுகின்றார், பொய்யற்ற கீரனார்.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், 'பொய்யற்ற' என்ற விசேடணத்தை வழங்கியதற்கு, கீரனார் 'துனியில் காட்சி' என்ற விசேடணத்தை முனிவர்களுக்கு வழங்கியதொன்றே போதுமானது என்றார் சிந்தனையாளராகிய பெரியார் ஒருவர்.

துனி - வெறுப்பு. வெறுப்பற்ற நோக்குடையவர்கள் முனிவர்கள். உலக சிருஷ்டியாகிய திருவருள் விளையாட்டின் நீதியை அறிந்தவர்கள் அவர்கள். 'மேன்மை கொள் சைவநீதி' யைக் கண்டுகொண்டிருப்பவர்கள் அவர்கள். அவர்களுக்குத் திருவருள் நடத்துகின்ற, உலக நிகழ்ச்சிகளாகிய உலக நீதியில் வெறுப்பேது.

**"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு."**

என்றார் நாயனார்.

இருவினையொத்த சமத்துவ புத்திமான்கள் முனிவர்கள்.

நாரத முனிவர், துனியில் காட்சி முனிவர் குழாத்தில் வைத்துப் போற்றத்தக்க பெருமை படைத்த மகாமுனிவர். எப்படிப்பட்ட தெய்வ சந்நிதியிலும், முற்புகும் பரிபக்குவர் அவர்.

துனியில் காட்சி மகா முனிவரான நாரதரைத் திரிலோக சஞ்சாரி என்பார்கள். அவர் திரிலோகத்திலும் திருவருள் நீதியைக் கண்டு களித்துப் பாடுவர்.

இத்துணைச் சிறந்த அந்த மகா முனிவர், கந்தபுராணத்திற் பல இடங்களிற் காட்சியளிக்கின்றார். தக்ஷகாண்டத்தில் ஐந்துமுறை, அம் மகா முனிவரின் காட்சி நமக்குக் கிடைக்கின்றது.

* குளிக்கும்போது புனித நதிகளின் பெயரை கங்கா, யமுனா, சரஸ்வதி, கோதாவரி, சிந்து, காவேரி, நர்மதா, வைகை, தாம்ரவருணி என்று மனதில் தியானித்துக் குளிக்கவேண்டும். குளிக்கும்போது ஒருவரிடமும் பேசக் கூடாது.

**அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.** 142

தீ நெறியில் நின்றவர் எல்லாருள்ளும், பிறன் மனைவியை விரும்பி அவன் வீட்டுவாசலில் போய் நின்றவரைப் போல் அறிவிலிகள் இல்லை.

தக்கன் புதல்வர் ஈராயிரவர்; தக்கன் கட்டளைப்படி சிருட்டித் தொழிலைச் செய்யும் பிராமணர்களாகும் பொருட்டுத் தவஞ் செய்துகொண்டிருந்தவர்கள். அவர்களிடம் நாரத முனிவர் இரண்டு முறை சென்று, 'அரும் பெருந் தவஞ்செய்து நீவிர் விரும்புவதாகிய உத்தியோகத்தைப் பெறுதல் புத்தியாகாது; அது மயக்கத்தைப் பெருக்கிப் பிறவிக்கும் வித்தாகும்; முத்தியைப் பெறுவதே புத்தியாகும்' என்று உபதேசித்தார். அவர்கள் நாரத முனிவரின் உபதேசத்தின் வழிநின்று, முத்திபெற்றார்கள். அங்கே நாரதரின் தோற்றவரவு, நாம் அவரைக் காணும் முதலாம் இரண்டாம் காட்சிகள்.

மூன்றாவது காட்சி, திருக்கைலாசத்திற் கிடைக்கின்றது. பூமியிலே நிகழுகின்றதொரு புதுமையை, விரைந்து சென்று கைலாசபதிக்கு முறையிடுகின்றார் நாரத மகா முனிவர். புதுமை யாவது; சிவபெருமானை விலக்கி வீண் செயலாகியதொரு யாகத்தைத் தக்கன் துணிந்து நடத்துவதாம்.

நான்காவது காட்சி, புளகம் உறுதற்குரியதொரு காட்சி. நாரதர் விண்ணுலகத்திற் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றார். அப்பொழுது மண்ணுலகத்திலே, தத்துவ சோபானங்கள் என்று சொல்லத்தக்க ஏணிப் படிகளிலே திருவடி வைத்துத் தினைப் புனத்தின் மத்தியிலே அமைந்த பரண்மீது ஏறி அமர்கின்றார் வள்ளிநாயகியார். பரிபக்குவம் கனிந்து, திருமுருகன் வரவை எதிர்பார்ப்பவர் போன்று, எல்லாத் திசைகளையும் நோக்கியபடியிருக்கின்றார் அம்மையார். இந்தக் காட்சி நாரத மகா முனிவரின் தூய மனத்திரையிலே தோன்றுகின்றது. அக்கணமே விரைவுபட்டு, மண்ணுலகை நோக்கி அந்தத் தினைப்புனத்தில் அமைந்த பரணுக்கண்மையிலே இறங்குகின்றார் நாரத முனிவர். அவருடைய கண்கள் ஆனந்த பாஷ்பத்திலே முழுகி முழுகி அம்மையாரின் பரிபக்குவக் கனிவைக் கண்ணாரப் பருகிக் களிகொள்கின்றன. அவருடைய கால்களோ அங்குத் தரிக்கலாற்றாவாய்த் திருத்தணிகையை நோக்கி, திருத்தணிகைப் பிரபுவான திருமுருகனிடம் ஓட்டம் எடுக்கின்றன.

> * புண்ணிய தீர்த்தம், ஆலயம், மடம், சித்தர் சமாதி, ஆஸ்ரமம், குரு வீடு, ஜோதிடர் வீடு, யாகசாலை இவைகளுக்குச் செல்லும் சமயம், கையால் அலம்பிக் கொண்டு பயபக்தியுடன் செல்ல வேண்டியது அவசியம். மேற்படி இடங்களில் எந்தக் காரணத்தைக் கொண்டும் லாகிரி வாஸ்துக்களை உபயோகிப்பதோ, தாம்பூலம் தரிப்பதோ தோஷம் ஆகும்.

இந் நிலையில் நாரத முனிவர் விம்மிதமுறுவதைக் கண்ணுற்ற தணிகைப் பிரபு, முனிவரை அருணோக்கஞ் செய்தவாறே பக்குவமிக்காளுறைகின்ற தினைப்புனத்துப் பரணுக்கருகே அம்மையாரை அணைந்து ஆட்கொண்டருளச் செவ்வி நோக்கிநிற்கின்றார். கற்பியலுக்கு வழி செய்வதாகிய களவியல் மணம் நிகழுகின்றது.

பக்குவங் கனிந்ததொரு சமயத்திலே - தனியிடமாகியதொரு சோலையிலே,

**"முந்நான்கு தோளும் முகங்களோர், மூவிரண்டும்**
**கொன்னார்வை வேலுங் குலிசமுமே னைப்படையும்**
**பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்**
**மின்னாள்கண் காண வெளிநின் றனன்விறலோன்."**

**"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள**
**அளப்பருங் கரணங்கள் நான்குஞ்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்**
**திருந்துசாத் துவிகமே யாக"**

வள்ளிநாயகியார் இருமையின் ஒருமையெய்தித் திருமுருகன் வயத்தராய்த் திருமுருகேயாய்த் திருமுருகை நுகர்வாராயினார்.

அந்த அரும்பெரும் நிலையில், ஐம்புல வேடுவர்கள் தோன்றி, உள்ளங்கவர் கள்வராகிய திருமுருகை வளைந்து அம்பு தொடுப்பாராயினர். அவ்வம்புகள்,

*Among all those who stand on the outside of virtue there are no greater fools than those who stand outside their neighbour's dood.*
*142*

* ஒருவன் குளித்துக் கொண்டிருக்கும் போது அவனுக் குப் பின்புறம் குளிக்கக் கூடாது. முன்புறமும் குளிக்கக் கூடாது.

* பூச நக்ஷத்ரம், ஜென்ம நக்ஷத்ரம், வ்யதி பாதம், வைத்ருதி, பூர்ணிமா, ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய நாளில் புண்ணிய நதிகளில் குளிப்பது புண்யம். சித்திரை மாதம் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியில் தடாகத்தில் குளித்தால் புண்யம். மாசி மாதம் சுக்ல பக்ஷ சப்தமியில் சூரிய உதய காலத்தில் குளிப்பது புண்யம். புத வாரமும், புனர் பூசமும், சித்திரை மாதம் வளர்பிறை அஷ்டமியன்று வரும் போதும் நதியில் குளித்தால் யாகம் செய்த புண்ணியம் கிட்டும்.

**"கட்டழ குடைய செவ்வேற் கருணையங் கடலின் மீது பட்டன பட்ட லோடும் பைந்தொடி பதைப தைத்தாள்."**

**"காகத் திருகண்ணிற் கொன்றே**
**மணிகலந் தாங்கிருவர்**
**ஆகத்து ளோருயிர் கண்டனம் ..........................**
**......................................................**
**தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய்**
**வருமின்பத் துன்பங்களே."**

என்கின்றது அன்பினைந்திணைக் கோவை யாகிய திருச்சிற்றம்பலக் கோவையார்.

தேவி பதைபதைப்பதை அயலில் நின்ற பன்மனாகிய சேவல் ஆற்றாது, தன் சிறகுகளை அகல விரித்தடித்து, கழுத்தை உயர நீட்டி வளைத்து, உரக்கக் கூவியது. சேவல் கூவுவதற்கு முன்னமே சிறகுகளை அடித்த மாத்திரத்திலே தானே, நம்பியரசனையுள்ளிட்ட வேடுவர்கள் ஆவி சோர்ந்து விழுந்திறந்தார்கள்.

அத்தருணத்தில் திருமுருகன் அவ்விடத்தை யகன்று செல்வானாயினான். அம்மையார் அரைக் கணமுந் தரியாது, அன்னையையும் அத்தனையும் பொருள் செய்யாது, அகலிடத்தார் ஆசாரத்தை நீத்துத் தொடர்தற்குரியானைத் தொடர்ந்து உடன் போக்குச் செய்வாராயினர். உடன்போக்கின் உச்ச நிலை நிகழ்கின்றது.

நாயகி, சர்வலோக நாயகனைத் தொடருவ தான இந்த அருமந்த பரிபக்குவ அன்பு நிலையை அள்ளிப் பருகுவதற்குரியதொரு தவம், நாரத முனிவருக்கு வாய்க்கின்றது.

இது நாம் நாரதரைக் காணுகின்ற ஐந்தாவது காட்சி.

முனிவர் வள்ளிநாயகியாரின் போக்கைக் கண்ணாரக் கண்டு, உள்ளம் உருகித் திருமுருகன் திருவடியில் வீழ்ந்து ஐம்புல வேடுவர்களையும் ஆட்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றார். திருமுருகன் அநுக்கிரகஞ் செய்கின்றான். வேடு வர்கள் உயிர்த்தெழுந்து, ஒருமை எய்தித் திருமுரு கனுக்கு வள்ளிநாயகியாரைத் திருமணஞ் செய்து வைக்கின்றார்கள்.

திருமணச் சடங்கைச் செய்துவைக்கும் பாக் கியம் நாரத முனிவருக்குக் கிடைத்தது. நாரதரின் தவம் இருந்தவாறு!

நாரத மகா முனிவரின் அடிச் சுவட்டைத் தொடர வல்லவர்கள், புராண இரகசியங்களையும் வேதாகம உண்மைகளையும் அறியவல்லவர் ஆவர்.

நமது பாரத தருமம், 'துனியில் காட்சி' முனி வர்களின் வழிவந்தது. அதனைப் பேணும் முறை யிற் பேணி, உய்தி கூடுவதாகுக இந்த அருமந்த உலகம்.

***நன்றி - செந்தமிழ்க் களஞ்சியம்***

* குளித்த பின்பு ஈரத்துணியைக் கரையில் வைத்து பிழிய வேண்டுமே தவிர தண்ணீரில் வைத்துப் பிழி யக் கூடாது. ஈரத் துணியை உதறக்கூடாது.

**விளிந்தாரின் வேறுஅல்லர் மன்ற தெளிந்தார்இல்**
**தீமை புரிந்துஒழுகு வார். 143**

தம்மை நல்லவரென்று நம்பித் தாராளமாய்ப் பழகவிட்டவரின் மனைவியிடம், தீவினை செய்தலை விரும்பி நடப்பவர், உறுதியாக, செத்தவரைவிட வேறுபட்டவரல்லர்.

# தமிழோடிசை பாடல்

கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி (சமாதான நீதிபதி)

"நாவுக்கரசு எனும் நாமம் இவ்வேழுலகும் மன்னுக" என எம் பெருமானின் அருள்வாக்கு ஆகாயத்தில் எழுந்தது. அந்நாமத்துக்கு அரண் செய்வன அப்பரின் தீந்தமிழ் மாலைகளாகிய 4, 5, 6ஆந் திருமுறைகள் திருவாரூர் வீதியிலே அப்பரின் திருக்கோலத்தைக் காட்டுகின்றார் சேக்கிழார்.

**"மார்பாரப் பொழி கண்ணீர்**
**மழைவாருந் திருவடியும் - மதுரவாக்கில்**
**சேர்வாருந் திருவாயில்**
**தீந்தமிழின் மாலைகளும் ......"**

தீந்தமிழ் இனிய தமிழ். அது செவிக்குப் மாத்திரம் இனிமை கொடுப்பதல்ல. உயிருக்கும் உணர்வூட்ட வல்லது. அப்பருக்கு அஞ்ஞான்று பயன் கொடுத்தது போல், கற்போர்க்கு எஞ்ஞான்று பயன் கொடுக்கும் தன்மை கொண்டது தீந்தமிழ். அப்பர் அல்லற்பட்ட நேரத்தில் இன் தமிழ் பாடி உய்தியடைந்தார். கடுமையாக வருத்திய சூலை நோயை நீக்கியது அவர் நினைத்த தமிழ். மத யானையை அடக்கியது அவர் பாடிய தமிழ். அவர் துன்புற்ற நேரத்திலே அவர் தம் நெஞ்சத்தில் எழுந்த பாடல்களிலேயே தீந்தமிழின் இனிமையை நாம் காணலாம்.

**"மணியினை மாமறைக்**
**காட்டு மருந்தினை**
**வண்மொழியால் திணியனநீன்**
**கதவந் திறப்பித்தன**
**தெண்கடலில் பிணியனகல்**
**மிதப்பித்தன**
**சைவப் பெரு நெறிக்கே**
**நாவுக்கரையர் தம் அருந்தமிழே"**

திருத்தாண்டகம், திருநேரிசை திருக்குறுந் தொகை போன்ற செய்யுளமைப்பில் பாடல்களைத் தந்தவர் அப்பரவர்களே. இதனால் தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப் பட்டுள்ளது. தமிழுக்கு ஏற்றமளித்தவர் அப்பர் எனினும் அது மிகையாகாது.

"தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்" என முதற் பதிகத்திலேயே உணர்வு ததும்பப் பொழி கின்றார்.

அனுபவத் தமிழ்: நாயன்மார் வரிசையில் ஆண்டும், அனுபவமும் துன்பத்தோய்வும் மிக்கவர் அவர். அதனால் அவர் அமைத்த பாடல்கள் உறுதியளிப்பவை. அவர் பாடலைத் தண்டமிழ் எனவும் வழங்குவர். 'பிறவி வெப்பம் மாற்றும் ஔடதம்' போன்ற அறிவுரைகள் அங்குண்டு என்பதனால்.

ஒரு இடத்திலே பின்வருமாறு அருமையாக மொழிகிறார். 'மானிடர்களே! ஒரு நாள் இரண்டு நாள்; ஒரு வாரம், இரண்டு வாரம்; அல்லது ஒரு மாதம் இரண்டு மாதம் கடவுளை வணங்கி விட்டு, அவனருள் கிடைக்கவில்லையே என்று சோர்ந்து விடாதீர்கள். இடைவிடாது அவன் நாமத்தை உச்சரித்தால் அவன் வராமல் இருக்க முடியாது.

**"பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து**
**பன்னாள் அழைத்தால்**
**இவனெனைப் பன்னாள் அழைப்பொழி**
**யானென் றெதிர்படுமே"**

சம்பந்தருக்கு முன்பே திருநாவுக்கரசர் சைவ ராகப் பிறந்தவர். சமணசமயத்தில் பல ஆண்டுகள்

*Certainly they are no better than dead men who desire evil towards the wife of those who undoubtingly confide in them.* *143*

இருந்தவர். மீண்டும் சைவராக மாறிச் சைவத்தை வளர்த்தவர். இங்ஙனம் இவர் கோவிற் பயணஞ் செய்து சைவத்தை வளர்த்து வரும்போது தான் சிறு பிள்ளையான சம்பந்தர் சந்தித்தார். சைவம் பரப்புவதில் தமக்கு வழிகாட்டியாய் இருந்ததை நோக்கியும் தமக்கு முன் திருப்பதிகம் பாடியிருத் தலை நோக்கியும் "அப்பரே" என்று அழைத்தார் சம்பந்தர். தேவாரத் திருமுறையை முதலில் நமக்குத் தந்தவர் அவர். கயிலைமலை வரை கோயிற் பயணம் செய்தவர். அத்தகைய அனுபவத் தின் பின் முன்னையநிலை அவருக்கு நாணத் தைக் கொடுத்தது. இரண்டு நிலையையும் அவர் ஒப்பு நோக்கினார். பிரபஞ்சச் சார்பில் தானறியாமல் நின்றான் என்பதை உணர்ந்தார்.

**"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்**
**காலத்தைக் கழித்துப் போக்கித்**
**தெள்ளிய னாகி நின்று**
**தேடினேன் நாடிக் கண்டேன்**
**உள்குவார் உள்கிற் றெல்லாம்**
**உடனிருந் தறிதி யென்று**
**வெள்கினேன் வெள்கி நானும்**
**விலாவிறச் சிரித்திட் டேனே"**

ஏழாம் நூற்றாண்டில் எழுந்த புரட்சித் தமிழ்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களாகிய பாரதி, பாரதிதாசன், கவிமணி போன்றவர்களின் உணர்ச்சிப் பாடல்களை நாமறிவோம். தமிழ்மொழி மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் தமிழினத்தின் மீதும் தன்மானத்தின் மீதும் எழுந்தவை இந்த நூற்றாண்டுக் கவிகள். இதற்கு ஓரளவு வழி காட்டியவர் அப்பர் எனலாம். சரித்திரத்திலேயே புதுமைப் புரட்சி சீர்திருத்தம் என்பவற்றை அறியாத காலத்தில் சமயவாழ்வு வாழ்ந்த அப்பர் இதனைச் செய்தார்.

பல்லவ மன்னன் தூதுவரை விட்டு அழைத்த போது,

**"நாமார்க்கும் குடியல்லோம்**
**நமனை அஞ்சோம் .........."**

என்று பாடி வீரத்தை வெளிப்படுத்தியவர் இப்பெரியார்.

அது மாத்திரமன்றிப் பட்டத்து யானையை ஏவிவிட்ட போது, "அஞ்சுவதுமில்லை! அஞ்ச வருவதுமில்லை" என அஞ்சாது கருத்துக்களை முன் வைத்தார்.

மேலும் இவர் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துக்கள் மிகச் செறிந்தும் சிறந்தும் காணப் படுகின்றன.

சாத்திரமும் கோத்திரமும் பேசிப் போலி வாழ்க்கை வாழ்பவர்களை மிக நயமாகக் சாடு கிறார். பின்வரும் பாடல் இதனைக் காட்டுகிறது.

**"சாந்தி ரம்பல பேசுங் சழக்கர்காள்**
**கோத்திரமும் குரமுங் கொண்டு என் செய்வீர்**
**பாத்தி ரம்பசிவ மென்று பணிதிரேல்**
**மாத்தி ரைக்குள் அருளும்மாற் பேறேரே"**

எங்கும் இறைவன் உள்ளான் என்ற உண் மையை உணராவிட்டால் கங்கைத் தீர்த்தில் அல்லது காவிரித் தீர்த்தத்தில் ஆடினாலும் பயன் எதுவும் கிட்டாது என்பது அவர் கருத்து. பெண்களைப் போற்றாத எந்தச் சமயமும் முழுமை யானதன்று என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இவருடைய பாடல்களில் அம்மை அப்பனுடைய இணைப்பு மிகுதியாகக் காணப்படுகின்றது.

கயிலைக் காட்சியைத் திருவையாற்றிலே கண்ட அப்பரடிகள்:

**"காதல் மடப்பிடி யோடும்**
**களிறு வருவன கண்டேன்"**

என்ற அடியில் அவ்வுண்மையை வெளிப் படுத்துகின்றார்.

"தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" என்ற வாக்கிற்கேற்ப பல பாடல்களில் சிறந்த

**எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்**
**தேரான் பிறன்இல் புகல். 144**

எவ்வளவு உயர்ந்தவரானாலும் தாம் செய்யும் தீவினையைத் தினையளவும் எண்ணிப் பாரால், பிறன் மனைவியை விரும்பி அவன் வீட்டிற்குச் செல்லுவது, என்னவாக முடியும்?

உவமையும், நகைச்சுவையும் அகப் பொருட் செறிவும் நிறைந்து காணப்படுகின்றன.

**"பாம்பின் வாய்த் தேரை போல**

**பலபல நினைக்கின்றேன்"** என்றும்,

**"திளைத்துநின் றாடுகின்ற ஆமைபோற்**

**தெளிவிலாதேன்"**

என்றும்;

**"ஓடும் நீரினை ஓட்டை குடத்தட்டி**

**மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே"**

என்றும்;

**"இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாறே"**

என்றும் உவமைகள் காட்டி, உலக வாழ்வின் சிறுமையை அருமையாகப் புலப்படுத்து கின்றார். மற்றோர் இடத்தில் நகைச்சுவை ஒன்றைக் காண்போம்.

திருவொற்றியூர் சிறந்த ஓர் திருத்தலம். இத் தகைய திருத்தலத்தை நீ ஒற்றியாக வாங்கி விட்டாய். உனக்கு ஒற்றி தந்தவர்களது பரம்பரையில் இப்பொழுது ஒருவருமில்லை. இதை நினைத்து நீ அந்த ஊரை விற்றுவிடாதே சுவாமீ! இப்படி ஒரு ஓர் உனக்குக் கிடையாது என்று நயமாக இறைவனோடு பேசுகின்றார்.

**"சுற்றி வண்டு யாழ்செய்யும்**

**சோலையும் காவும் துதைந்திலங்கு**

**பெற்றி கண்டார் மற்று**

**யாவருங் கொள்வர் பிறரிடைநீ**

**ஒற்றி கொண்டாய் ஒற்றியூரையும்**

**கைவிட்டு உறுமென் றெண்ணி**

**விற்றி கண்டால் மற்றிது**

**வொப்ப திவ்விடம் வேதியனே"**

* ஞாயிறு அன்று சூரிய கிரஹணமும், திங்கள் கிழமை சந்திர கிரஹணமும் ஏற்பட்டால் இதற்கு சூடாமணி புண்ணியகாலம் என்று பெயர். மற்ற கிரகணங்களில் குளித்து தானம் செய்தால் கிடைக்கும் புண்ணியத்தை விட இதில் ஆயிரம் மடங்கு பலன் அதிகம்.

சுவாமிகளின் பாடல்களில் அகப்பொருட் சுவையும் சிறப்பாகக் காணலாம். தமிழிலக்கியத் துக்கு வளமூட்டுவது அகப்பொருட் சுவையாகும். சங்க இலக்கியங்களில் இந்தச்சிறப்பைக் காணு கின்ற எமக்குத் திருமுறைகளுடன் இணைத்துக் காணும் பொழுது அவை அருட்சுவையையும் தமிழ்ச் சுவையையும் தருகின்றன. "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்." என்ற பாடலில் பக்குவமுள்ள தலைவியாக ஆன்மாவை வைத்துப் பாடியுள்ள சிறப்பைக் காணுகின்றோம். மற்றொரு பாடலில் தலைவனிடத்தில் கொண்ட காதலால் தலைவியின் மெலிவும், கைவளையல்கள் கழன்று விடக் கூடியதான நலிவும் ஏற்படுகின்ற தென்பதை இறைவனாகிய தலைவனிடத்திலும் பக்குவமுள்ள ஆன்மாவாகிய தலைவியிடத்திலும் வைத்து அகப்பொருட் சுவை மிளிரப் பாடியுள்ளார்.

**"வஞ்சித்தென் வளைகவர்ந்தான்**

**வாரானே ஆயிடினும்**

**பஞ்சிற்காற் சிறகன்னம்**

**பரந்தார்க்கும் பழனத்தான்**

**அஞ்சிப் போய்க் கலிமெலிய**

**அழலோம்பு மம்பூதி**

**குஞ்சிப்பூ வாய்நின்ற**

**சேவடியாய் கோடியையே"**

இவ்வாறு அப்பர் சுவாமிகளின் அருந்தமிழ்ப் பாடல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிச் சிறப்பைப் பெறுகின்றன என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

*However great one may be, what does it avail if, without at all considering his guilt, he goes unto the wife of another?* 144

# பரம பக்தியாம் பக்குவப் பழம்

இயற்றமிழ் வித்தகர் பண்டிதர் ச. சுப்பிரமணியம்

சிவகுருவாம் முருகன் உபதேசம் "சும்மா இரு சொல்லற" என்பது, பெருநாவலர் வேண்டாமை என்பது விழுச்செல்வம், அது ஒப்பது யாண்டும் இல் என்பர் நாம்மாழ்வார் "அற்றது பற்றெனில் உற்றது வீடே" என்பார் அவ்வாறே "ஈசனோடாயி னும் ஆசைய றுமின்கள்" என்பதும் பற்றின்றி வாழ்வதே துன்பறும் மார்க்கம் என உணர்த்து கின்றன. ஆசை பற்று என்பதும் அன்பு என்பதும் வேறுவேறானவை. வேண்டாதே ஒன்றும் வாழ்ந்த அன்பர் கண்ணப்பர்.

அன்பே சிவம் என்பர் மூலநாயனார். அந்த அன்பின் வடிவாய் வாழ்ந்தவர் கண்ணப்பர். "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்பது மணிவாசகம். தன்னயம் யாதும் வேண் டாது தன்னையும் சார்ந்தவற்றையும் முற்றிலும் சரணாகதியாகத் தியாகம் செய்துவிடுவதே அன்பின் இலக்கணம். அதற்கு முழுமை பெற்ற இலக்கியமே கண்ணப்ப நாயனார் என்பர்.

அன்பு, அருள் என்பவற்றைக் கனவிலும் கரு தாத மறத்தொழிலாளர் வேடர் குலத்தவர் கண் ணப்பர், என்றும் அவர் பயின்றவை யாவும் அன் புக்குப் புறமான வன்பும் புன்செயலுமே. ஆயினும் நண்பன் நாணனுடைய உரையால் காளத்தியப் பரைக் கண்டு தொழும் காத்லோடு பொன்முகலி கடந்து மலையை நோக்கிச் செல்கின்றார். காந் தத்தின் முன் இரும்புபோலச் சிவனருள் ஈர்க்க அன்பு பின்தொடர்ந்து முன்னுந்த விரைந்தோ டுகிறார். அந்த நிலையில் அவர் வழங்கிய வார்த்தைகள்,

**"ஆவதென்? இதனைக் கண்டு இங்கு அணைதொறும் என்மேற்பாரம் போவதொன்றுளது போலும் ஆசையும் பொங்கி மேல்மேல் மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும் தேவர் அங்கு இருப்பதெங்கே? போகென்றார் திண்ணனார் தாம்."**

என்பதிலிருந்து அவர் நிலை முற்றிலும் மாறி வேறானதை உணரலாம்.

**"பரிசனவேதி பரிசித்த தெல்லாம்**
**வரிசை தரும்பொன் வகையாகுமா போல்"**

என்றும்

**"கறுத்த இரும்பே கனகம தானால்**
**மறித்திரும் பாகா வகையது போல"**

என்றும் திருமந்திரத்தில் காட்டியவாறு காளத் தியின் பரிசம் - தீண்டுதல் பெற்றதும் திண்ணனார் உடலும் உணர்வும் உயிரும் எல்லாம் இரும்பு பொன்னானவாறு மாறிவிட்டன. இனிமேல் அவர் திண்ணனாரல்லர். கண்ணப்பரே என்றாகிவிட்டது.

**"முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்**
**மூர்த்தி அவன் இருக்கும் வண்ணங் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்"**

என்றபடி முறையில் அன்பர் அணுக வருகிறார்.

பொன்முகலி ஆற்றில் நடந்தேறி நாணன் முன்செல்லப் பின்தொடர்ந்து மலையேறிச் செல்கிறார்.

"முன்புசெய்த தவத்தினீட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகிஉள்ளத் தெழுகின்ற வேட்கையோடும்

நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத்தாமும்
பேணுதத் துவங்கள் என்னும் பெருகுசோ பானம்ஏறி
ஆணையாம் சிவத்தைச்சார அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையைஏறி நேர்படச் செல்லும் போதில்

**எளிதுஎன இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி. 145**

எளிது என எண்ணிப் பிறன் மனைவியிடம் நெறிகடந்து நடப்பவன், எப்போதும் அழியாது நிற்கும் பழியை அடைவான்.

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணைகூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகலநீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவிலன்பு உருவமானார்”

எனவரும் சேக்கிழார் வாங்கினால் கண்ணபிரானவர் திருவுருவம் காட்டப்பெறுகிறது.

இப்படியன் எனவொண்ணாத மலை எழுகொழுந்தாயுள்ள ஏகநாயகரைக் கண்டார், எழுந்ததோர் உவகையின்பின் வேகமானது மேற்செல்ல மிக்கதோர் விரைவினோடும் வேகமாய் ஓடிச் சென்றார், தழுவினார்; மோந்து நின்றார்; நீண்டநேரம் பிரிந்திருந்து பின்பு சேர்ந்த கன்றை அணைந்த பசுபோலப் பெருமானைத் தழுவிமோந்து பரிவு கூர்ந்தார். கண்களிலே ஆனந்த பாஷ்பம் பெருக இவர்தாம் அடியேனுக்கு இன்று அகப்பட்டாரே அச்சோ என்று ஆனந்தக் களிப்புற்றார்.

**“எவரெவர் எத்திறத்தர் அத்திறத்தராய் நின்று**
**அவரவர்க்கு ஆவன செய்தருளலே அரனார் அருள்வகை”**

முன்பிறப்பில் பார்த்தன் தவம்கெடுக்க வந்த பன்றியைத் தாமே வேடனாகத் துரந்து வந்து அவனோடு வல்வழக்கிட்டு மற்போர் விற்போர் புரிந்து பாசுபதமும் கொடுத்தருளினார் வடகயிலைப் பெருமான். இன்று தென்கயிலைக் காளத்தி நாதர் ஒரு பன்றி மூலம் தொடர்ந்து திண்ணனார் தம்மிடம் நாடிவரச் செய்து அவர் கட்டித் தழுவக் குழைந்தருள் பாலித்து நின்றார். அன்று வேண்டியவற்றில் ஒன்றை உதவினார் இன்றோ மற்றதை வேண்டாமையையும் விழுப்பேறாம் வீடும் தரவுள்ளார். பின்பு நாணன் பார்ப்பான் வந்து காளத்தியாரைப் பூசித்தவகையிலே தான் தெரிந்தவற்றைக் கூறுதலும் அதனை உளங்கொண்ட திண்ணன் தாமும் எம்பிரானுக்கு இனியவை இவை செய்வேன் என்று உறுதிபூண்டார்.

அவ்வளவிலே அவர் ஞானபாதக் கிரியை வழியிலே வழிப்படவானார் அதன்மேல்

**“அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தார்**
**அகன்றார் அகலிடத்தார் ஆசாரத்தைத்**
**தன்னை மறந்தார் தன்நாமங் கெட்டார்**
**தலைப்பட்டார் தலைவன் தாளே”**

ஆகினார். தம் வாயிலிட்டுப் பதமறிந்த ஊனமுது ஒரு கல்லையில், முடியில் சொருகிய மலர்கள், வாயிலே மொண்டுகொண்ட பொன்முகலித் தீர்த்தம் ஆகிய பூசனைப் பொருளோடு பெருமான் முன்வந்தார். நிருமாலியத்தைச் செருப்படிக் காலாலே மெல்லென விலக்கி மஞ்சனம் ஆட்டி மலர்சூட்டி அமுதை முன்வைத்து இனிய மொழி கூறித் திருவமுது செய்வித்தார். பிரானும் ஏற்றருளினார். தொடர்ந்து, வனவிலங்குகளால் தீங்குறுமோ என்று பயந்து பக்கத்திலே இரவு வைகறை வரையும் காவல் நின்றார். கண்ணும் இமைத்திலர். தமது பசிக்கு ஒரு கவளமும் உண்டிலர், ஊணுறக்கம் ஒழிந்த சேவை மறுநாள் வைகறையில் வேட்டைக்குக் கண்ணப்பர் சென்ற சமயம் வழக்கம் போலக் காலை வழிபாடு பூசை புரியவந்த அந்தணர் சந்நிதியிலே ஊன் முதலியன கிடக்கக்கண்டு அகற்றிச் சுத்தி செய்து பூசை முடித்தார். சிவனிடம் இந்த அநுசிதத்தைப் போக்கியருளுமாறு முறையிட்டார். இப்படி நிகழ்ச்சி ஐந்துநாள் தொடர்கிறது. இந்தநிலையிலே தம்மை அர்ச்சிக்கும் அன்பர் சிவகோசரியார் மனக்கவலை குறைகளைக் களையவும் மெய்யன்பர் திண்ணரின் திறத்தை வெளிப்படுத்தவும் காளத்தியப்பர் கோசரியாரின் கனவிலே தோன்றி மெய்யன்பர் அன்புநிலையை உணர்த்தி மறுநாள் அர்ச்சனை முடித்து மறைந்திருந்து அவன் செயலைக் காணுதி என்றருளினார்.

அவர்கள் நிலை அதுவாகத் திண்ணனாரும் ஆறாம் நாட் பூசைக்கு ஆயத்தமாக வருகிறார். வழியிலே இரத்தக் குறிகாட்டும் சகுனங்களைக் கண்டு மனச்சஞ்சலம் கொண்டு பெருமானுக்கு என்னவாயிற்றோ என்று கவலையோடு வருகிறார். வந்தவர் பெருமானின் வலக்கண்ணில் இரத்தம் கசிவதைக் கண்டார், ஏக்கமுற்றார். சோர்ந்து

*He who thinks lightly of going unto the wife of another acquires guilt that will abide with him imperishably and for ever.* *145*

எல்லாம் தவறவிட்டார், ஓடிப்போனார், பிரானைத் தழுவி அணைத்தார், அழுதார். புண் மாற்றும் மருந்துகள் தேடித் தீர்க்க முயன்றார். தீர்ந்ததாகக் காணோம், என்செய்வேன் என்று எண்ணத்தில் ஆழ்ந்தார். "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" எனும் பழமொழி நினைவிலே எழுந்தது. மற்றொன் றும் எண்ணிலர். உடனே எதிர்நோக்கியிருந்து அம்புமுனையால் தமது வலக்கண்ணை அகழ்ந்து பிரானார் கண்ணிலே சாத்தினார். நோய் தீர்ந்தது, மனங்குளிர்ந்து களித்தார், எழுந்து துள்ளிப்பாடி ஆடினார், பின்னும் பார்க்கும்போது இடது கண் ணிலும் குருதி கசிவதைக் கண்ணுற்றார். ஒருகணம் கலங்கினார். மறுகணமே மருந்தாக மற்றொரு கண் உண்டே கவலை எதற்கென மனந்தெளிந் தார். மறுகண்ணையும் அகழ்ந்தால் அதைச் சாத் தும் இடம் தப்புமே என எண்ணியவர் அக்கண்ணின் அருகே தமது காலைக் குறியாகத் தொட்டுக் கொண்டு மறுகண்ணையும் அகழ ஆரம்பித்தார். அது அம்மையின் கண்ணாதலால் கருணையுள்ளம் பொறுத்திலது. காளத்தியப்பரது திருக்கரம் ஒன்று எழுந்தது. திருவாயிலிருந்து திருவாக்கொன்றும் எழுந்தது.

**"நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப**
**என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப"**

என்று மும்முறை கூறித்தடுத்து நிறுத்திய ருளினார்.

இவற்றையெல்லாம் சிவகோசரியார் கண்டார்.

**"பேறினி இதன்மேல் உண்டோ பிரான் திருக்கண்ணில் வந்த ஊறுகண்டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவும் கையை ஏறுயர்த் தவர்தங் கையால் பிடித்துக்கொண் டென்வலத்தில் மாறிலாய் நிற்க என்று மன்னுபேர் அருள்புரிந்தார்."**

> * பூஜை, ஹோமம், விவாஹம் ஆகிய தரிசன காரியங் களுக்குச் செல்லும் போது வெண்பட்டு உடுத்துவது பெரிய புண்ணியம் ஆகும்.

என்பது தொண்டர்சீர்பரவுவாரது பக்திச்சுவை நனிசொட்டப் பாடிய பாடற்காட்சி. கண்ணப்ப நாயனாரது அன்பின் அருமையை எண்ணியெண் ணிப் போற்றாத நாயன்மாரில்லை.

**"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்கச்**
**செருப்புற்ற சீரடிவாய்க் கலசம் ஊனமுதம்**
**விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு**
**அருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ"**

என்பது திருவாசகம். இந்த அன்புநிலையின் விரிவாக்கமாகவே கோவை கூறும் நிகழ்வாகக் காணலாம். கண்ணப்பரின் கண்ணைக் காளத்தி யப்பர் வாங்கிக் கொண்டாரே எனும் கவலை எவருக்கும் வேண்டவே வேண்டா. ஏனெனில்

**"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்**
**சங்கரா யார்கொலோ சதுரர்**
**அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாதுநீ பெற்ற தொன்றென்பால்"**

எனும் மணிவாசக வரிகளே விளக்கம் தரும். மேலும்,

**"கொண்டான் அடியேன் அடிமை குறிக்கொள்ளக்**
**கொண்டான் உயிர் பொருள் காயக்குழாத்தினைக்**
**கொண்டான் பலம் முற்றும் தந்தவன் கோடலாற்**
**கொண்டான் எனஒன்றும் கூறகில்லேனே."**

(1784 மந்திரம்)

ஆகவே அனைத்தும் வைத்து வாங்கும் சிவலீலையாம் அருள்வண்ணம்.

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் வாய்மையே.

> **பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்**
> **இகவாவாம் இல்இறப்பான் கண். 146**
> பிறன் மனைவியிடம் நெறிகடந்து நடப்பவனிடமிருந்து பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கு கேடுகளும் ஒருகாலும் நீங்காவாம்.

# யோகம் கூறும் சைவநெறி

பேராசிரியர் கே.வி.கே. சிவசுவாமி
தமிழ்நாடு

அனைத்தும் அதுவாகவும், அனைத்துள்ளும் அதுவாகவும் இருந்து இந்த பிரபஞ்சத்தை இயக்கியும், இயங்கிக் கொண்டும் இருக்கும் ஆதியும், அந்தமும் இல்லாத பரம்பொருளாகிய சிவபெருமான் திருவருளால் அனைத்தும் நல முடன் இயங்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகில் எம் மக்களிடம் சைவ சிந்தனைகளைத் தட்டி எழுப்பி வரும் சைவநீதியின் ஐம்பதாவது இதழ் இன்றைய தினம் மலர்வது குறித்து மிகவும் மகிழ்ச்சி. மக்களின் சேவையே மகேசனின்சேவை எனத் தொண்டாற்றி வரும் சைவநீதி அமைப்பை நடாத்தி வரும் அன்பர்கள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சைவசமயம் என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிமுறைகளையும் தவ றாது கடைப்பிடித்து இறுதியில் முத்தி அடைவதே முழுமையான வாழ்க்கை என்பதாகும்.

மூன்றாவது நிலையாகிய யோகத்தை வாழ்க் கையில் கடைப்பிடித்து வருவதால் நமது உட லாலும், உள்ளத்தாலும் அனுபவித்து உணர்ந்து அதன் ஊடாக ஏற்படும் நன்மைகளையும் சிறந்த சிந்தனைகளையும் வளர்ப்போம்.

யோகங்களைப் பிரித்து பலவகையாக...... ராஜயோகம், பக்தியோகம், குண்டலினியோகம், வாசியோகம், கர்மயோகம், ஹதயோகம் எனக் கூறுவதுண்டு. இதில் ஹதயோகத்தை எடுத்துப் பார்த்தால் இதைப் பெரும்பாலானவர்கள் சாதார ணமாக எண்ணி விட்டுவிடுவார்கள்.

ஹதயோகம் என்பது எட்டு நிலைகளைக் கொண்டது. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும். இந்த எட்டு நிலைகளையும் ஒருவர் முறையாக கடைப்பிடித்து வந்தால் தம் வாழ்க்கையில் சைவத்தை உணர்ந்தவராதலால் சிவத்தை உணர்ந்தவராவார். இப்படி முறையாக பயிற்சி பெற்றுக் கடைப்பிடித்து வருபவர்கள் ராஜயோகி அல்லது சிவயோகி என்று அழைக் கப்படுகிறார்கள்.

ஹதயோகத்தின் முதல் நிலையாகிய இயமம் என்பது மனத்தாலும் உயிர்வதை செய்யாத அஹிம்சை, உண்மை பேசுதல், திருடாமை, பேராசை தவிர்த்தல், கள், கயமை, காமம் தவிர் த்தல், புலனடக்கப் பயிற்சி செய்தல் ஆகியவை.

**நியமம்:** உடல் உளத்தூய்மை, சரனாகதி, வாக்கு, செயல் இவற்றில் வேறுபாடு இல்லாத வாழ்க்கை முறை ஆகும்.

**ஆசனம்:** உடல் நலத்திற்கும், உள அமை திக்குமாகி இருந்து பழகும் உடற்பயிற்சி முறைகள் இப்பயிற்சிகள் உடல், உள சம்பந்தமான நோய் களுக்கு விஞ்ஞான பூர்வமான மருத்துவமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

**பிரணாயாமம்:** சுவாசப் பயிற்சியாகிய சீவசக் தியை முறையாகவும், அளவோடும் நடத்த செய் யும் மூச்சுப் பயிற்சி முறையாகும்.

*Hatred, sin fear, disgrace: these four will never leave him who goes unto his neighbour's wife.* *146*

**பிரத்தியாகாரம்:** சதா வெளியுலகையே அதாவது புறப்பொருட்களிடம் செல்லும் மனதைத் திசை திருப்பி கட்டுப்படுத்தி பயிற்சி செய்தல்.

**தாரணை:** கட்டுப்பாட்டில் இருக்கப் பயிற்சி செய்துள்ள மனதை ஒரு நிலையில் அதாவது குறிப்பிட்ட ஒருஇடத்தில் நிறுத்திப் பயிற்சிசெய்தல்.

**தியானம்:** ஒரு இடத்தில் நிறுத்தி பயிற்சி பெற்ற மனதை உள்முகமாகத் திருப்பி நிறுத்தல். அதாவது எமது உள்ளத்தில் ஜோதி வடிவமாக வீற்றிருக்கும் இறைசக்தியை நோக்கி நிறுத்தி பயிற்சி செய்தல். குறிப்பாகச் சொன்னால் இறை உணர்வை மனத்தால் அறிவது.

**சமாதி:** இறைத் தன்மையை உணர்ந்த மனதை இறைவனின் திருவடிகளைப் பற்றி சதா இறைத் தன்மையோடு இரண்டறக் கலந்து இருப்பது இது சதா முடிவு இல்லாத தொடர் பயிற்சி ஆகும்.

இப்படி எட்டு நிலைகளையும் முழுமையான ஈடுபாட்டோடு கடைப்பிடித்தும் அன்றாட வாழ்வியலில் உணவு முறைகளை சாத்வீகமாகவும் பழக்க வழக்கங்களை ஒழுக்க நெறிமுறைகளோடும் கொண்டு செல்பவர் சைவ சமயத்தை பின் பற்றுபவர் ஆவார். மேலும் மக்களின் உதாரண உத்தமர் ஆவார்.

உணவு என்பது வயிற்றுப் பசியை மட்டும் தீர்ப்பது அல்ல. அதனால் கிடைக்கும் கலோரி அல்லது சக்தியால் தான் நாம் செயல்பட முடியும். உண்ணும் உணவால் நமது வாழ்நாளை நடத்திச் செல்லக் கூடியதாக உள்ளது. சாத்வீக உணவாகிய சைவ உணவை உண்பதால் எளிமையான சீரணம் பெற்று இரப்பை தேவையான ஓய்வைப் பெறுகின்றது. மென்மையான, இனிமையான அன்பு கொண்ட உணர்வைப் பெற பெரிதும் இந்த சைவ உணவு உதவுகிறது.

மற்றும் சுவாசங்களின் கணக்கீட்டால் தான் நம் வாழ்நாள் கணக்கிடப்படுகிறது என்பதை யோகநூல் மிகத் தெளிவாகக் கூறுகிறது. பிராணாயாமப் பயிற்சியின் வாயிலாக சுவாசப் பயிற்சியை முறையாக பயின்று கடைப்பிடித்து வந்தால் பல் வேறு வகையான நோய்களில் இருந்து விடுபடுவதோடு என்றும் இளமை உணர்வோடு நீண்ட ஆயுளைப் பெறலாம் என்பது அனுபவபூர்வமான உண்மை ஆகும்.

இப்படிப்பட்ட சுவாசப் பயிற்சி முறைகளாலும் ஆசனப் பயிற்சிகளாலும் மேற்கூறிய சைவ உணவு முறைகளாலும் சிறந்த மனக்கட்டுப்பாடான பழக்க வழக்கங்களாலும் இரத்த நாளங்களை இயக்கி வரும் இருதயம் சிறந்து ஆரோக்கியமாகவும், எண்சாண் உடம்பிற்குப் பிரதானமான சிரசில் இருக்கும் மூளையும் அதன் அணுக்களும் எவ்வித குறைபாடுகளும் இல்லாது சிறப்புடன் இயங்குகிறது. இப்படி உள்ள ஒருவரின் மனம் எப்போதும் அமைதியாகவும், பூரண அன்புடனும் சதா இயங்கிக் கொண்டிருக்கும் இந்த மனநிலை உள்ளவரின் அறிவு பூரணத்துவம் பெற்றுப் பிரகாசிக்கும்.

யோகத்தின் முழுமையும், சைவசமயம் கூறும் நான்காவது நிலையாகிய ஞானம், என்கிற பிரகாசச்சுடரை, ஒளியை மேற்கூறிய பூரணத்துவம் பெற்ற அறிவுடையவர்களால் மிக எளிதாக அனுபவிக்கமுடியும். இதைத்தான் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருமூலவர் திருமந்திரத்தின் வாயிலாக எமக்கு மிகத் தெளிவாக கீழ்க்கண்ட மந்திரமாக

**உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கங்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே**

---

**அறன்இயலான் இல்வாழ்வான் என்பான் பிறன்இயலாள்**
**பெண்மை நயவா தவன்.** 147

அறத்தின் இயல்போடு கூடி இல்வாழ்க்கை வாழ்பவன் என்று சொல்லப்படுபவன், பிறனுக்கு உரிமையானவளின் பெண்மையை விரும்பாதவனாவான்.

என்று இறைவரின் இருப்பிடத்தை மிகவும் பூடகமாகக் கூறியுள்ளார்.

இப்பிறவியில் கிடைக்கப் பெற்ற இந்த உடம்பை அதாவது சரீரத்தின் தத்துவத்தை அறிந்து, அதன் உள் பிரகாசிக்கும் ஜோதியாகிய ஆன்மாவானது இறை தத்துவம் என்பதை முழுமையாக உணர்ந்து எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் எல்லா உயிர்களிடத்தும் உண்மையான அன்பு செலுத்தி வாழ்பவர் சைவநெறி பிறழாதவர் ஆகிறார். இவரிடம் சைவத்தின் மூலமாகிய சிவம் எல்லா நிலையாலும் துணையாக இருந்து இயங்கும் என்பது பூரணமான உண்மை என்பதை அனைவரும் அறிவோமாக.

அறிவின் துணைகொண்டு ஞானத்தை அறிந்து உணர்ந்து அனுபவித்து மகிழ வைக்கும் குருவே எமது சிவகுரு ஆவார். அவரே அனைத்தையும் விளங்க வைக்கும் ஞானகுருவாகிய சிவபெருமான் ஆகும்.

இப்பேர்ப்பட்ட சைவத்தையும், யோகத்தையும் ஏட்டளவில் படித்தும், வாயளவில் பேசியும் வாழ் நாளை செலவிடாது நெறிமுறையாக அன்றாடம் வாழ்வில் கடைப்பிடித்து ஏனைய நலன்களையும் பெற்று இப்பிறவியின் பயனை உணர்ந்து எம் உள்ளிருக்கும் ஆன்மாவின் உண்மை நிலையை அறிந்து அனுபவித்து இறுதியில் இறைவரின் திருவடியைச் சேர அன்புடன் வேண்டுகிறோம்.

அன்பே சிவம்

எல்லாம் இறைவன் செயலே.


## சைவநீதி மாத இதழ்

***பெறுமதி விபரம்***

**தனிப்பிரதி இலங்கையில் ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00**

**ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15**

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு
என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

*சாந்தா அனுப்பவேண்டிய முகவரி::* **C. NAVANEETHAKUMAR**
**42, JANAKI LANE,**
**COLOMBO - 04,**
**SRI LANKA.**
**T.P. No.: 595221**


*He who desires not the womanhood of her who should walk according to the will of another will be praised as a virtuous house-holder. 147*

# கலைமானிடப் பூச்சிகள்

**முருகவே பரமநாதன்**

உயிர் இயல் ஆய்வு விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் துரித கதியிலே ஓடிக்கொண்டிருக்கும் யுகம் இது. கணணிவழி இணையம் இப்போ பிரபல்யம் அடைந்து விட்டது. மிலேனிய அவதிகள் போய் அடுத்த கண்டுபிடிப்புகள் கணணியுகத்தைத் தாண்டி விட்டன. எனினும் மனிதனும் அவன் வாழ்வியல் வசதிகள் பெருகிப் படாடோபமாய் வாழினும் அவனைச் சாடும் தாக்கங்களினின்றும் விடுபடமுடியாமல் வேதனைப்படுகிறான். வேதனையும் சோதனையும் அவனை வாட்டி வதைப்பதால் ஏதோ ஒன்று அவனை எந்நேரமும் உறுத்தாமலும் இல்லை. இப்பிடிப்புக்களில் இருந்து விடுபட வெகுகாலமாய் அவன் போராடி வருகின்றான். வாழவிருப்பமேனோ, வாழ்ந்து தொலைப்பதேனோ என்ற நச்சரிப்பின் நடுவே வாழ்வு ஒரு போர்க் களமாகவே அமைந்துள்ளது. மனம் ஒரு உலைக் களமாகவே கொதிக்கிறது. எந்தச் சீவராசிகட்கும் இல்லாத அவலங்கள் மனித சீவனுக்கே உரியதாய்விடுகிறது. வெவ்வேறு தாக்கங்களை வென்றாலும் மனிதனை மனிதன் முற்றாக துன்புறுத்தலினின்று முற்றாக விடுபடமுடியவில்லை. சமயமும், சமயவாதிகளும் தெய்வத்தைச் சாக்காக வைத்து மனிதப்பிறவி உயர்ந்தது என்று சொல்கிறார்கள். பிறப்பை நம்பும் சைவம் பிறவியை அறுக்க வந்த பிறப்பே மனிதம் என்கிறது. மனம் உடையவன் மனிதன், சிந்திப்பவன் மனிதன் என்றும் பேசப்படுகிறது. சமய நோக்கிலே மனிதப் பிறப்பு அதியுயர்ந்தது என்ற முடிபே ஒப்பமுடிந்த முடிவு. சாதாரணமாக மூவர் சொல்லும் கருத்தை நோக்குவோம்.

**"அரிது அரிது மானுடர் ஆதல் அரிது"**
- ஔவையார்

**"மனித்தப்பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே"**
- அப்பர் பெருமான்

**"எண்ணரிய பிறவி தனில் மானிடப்பிறவிதான்**
**யாதினும் அரிது அரிதுகாண்**
**இப்பிறவிதப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?**
**எதுவருமோ? அறிகிலென்"**
- தாயுமானவர்

இதில் இருந்து பிறவிகள் பல என்பதும் அவற்றினின்றும் விடுபட்டு மனிதனாய் ஓர் உயிர் பிறந்துவிட்டால் அதுமிக உயர்ந்த நிலையென்பதும் தெளிவு. எண்ணரிய பிறவிகள் எவை? அவற்றை நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு என்கிறார்கள் ஞானிகள்.

**அண்டஜம்** - முட்டையிற் பிறப்பன
**தவேதஜம்** - வேர்வையிற் பிறப்பன
**உத்பீஜம்** - நிலத்தில் வெடித்துப் பிறப்பன
**ஜராயுஜம்** - கருவில் தங்கிப் பிறப்பன (நால்வகைத் தோற்றம்)

நீர்வாழ்வன, ஊர்வன, நடப்பன, பறப்பன, மனிதர், விலங்கு, தாவரம் (எழுவகைப் பிறப்பு)

இவற்றையெல்லாம் தாண்டி மனிதனாய் வருவது மகாசமுத்திரத்தைக் கையுதவியாற் தாண்டிக் கரையேறியதற்கு ஒப்பாகும் எனச் சாத்திரம் சொல்கிறது. பிறவி வெறும் பரவைக்கடலோ, ஆறோ அல்ல. தாண்டமுடியாத மகா சமுத்திரம். தாண்டி விட்டால் வெற்றி. பிறவியைக் கடலாக்கி அதைத் தாண்ட இறையருளே தெப்பம் என்பர் வள்ளுவர்.

**"பிறவிப் பெருங்கடல் நீங்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேராதார்."** குறள்-10

இறைவனடி என்னும் தெப்பத்தை (புணை) சேர்ந்தார் பிறவியாகிய பெருங்கடலை நீந்துவர், அதனைச் சேராதார் நீந்தமாட்டாதவராய் அத

---

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு. 148

சான்றோர்க்குப் பிறன் மனைவியைக் கருதாத பெரிய ஆண்மை, அறம் மட்டுமோ? நிரம்பிய ஒழுக்கமுமாகும்.

னுள் அழுந்துவர் என்பது இக்குறளின் தெளிந்த கருத்து. இந்நிலைப்பாட்டில் பிறவியை ஏற்றுக் கொள்ளாத சமயிகள் அதிஷ்டசாலிகள்.

இந்தப்பிறவியமைப்பில் மனிதம் உயர்ந்தது ஏனெனில் பகுத்தறிவு எனும் ஆறாம் அறிவு படைத்தவன் மனிதன். இதைத் தொல்காப்பியர் விளக்கிய பின் ஆறறிவு மனிதன் ஐயறிவுடைய வனாய் வாழ்ந்தால் அவன் விலங்குதான் என்கிறார். மாவும் மாக்களும் ஐயறிவினவே என்பது அன்னார் கூற்று. இதன் பொருளென்ன மனிதன் விலங்கு நிலைக்கு மாறக் கூடாது என்பதுதான்.

**ஓரறிவுடையன** - புல், மரம், செடி - பரிச உணர்வு, தொட்டறிதல்.

**ஈரறிவு** - சிப்பி, சங்கு - இவை பரிசம், ரசம் அறியும்.

**மூவறிவு** - கறையான், எறும்பு - இவை பரிச, ரச, கந்த, அறியும்.

**நாலறிவு** - தும்பி, வண்டு - இவை பரிச, ரச, கந்தம், ரூபம் அறியும்.

**ஐயறிவு** - பறவை, மிருகம் - சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் அறியும்.

**ஆறறிவு** - மனிதர்கள் ஞானமாகிய அறிவும் உள்ளவர்கள்.

சத்தம் (ஓசை) காது, பரிசம் (ஊறு) உடம்பு, (ரூபம்), வடிவம், கண் (ஒளி), ரசம் (சுவை) நாக்கு, கந்தம் (நாற்றம்) மூக்கு.

இந்த மனிதன் தன்னைத் தாழ்த்தும் போது மற்ற உயிரினங்களுக்குச் சமனாகின்றான். இத னாலேதான் மனிதம் மாழ்கிறது, துன்பப்படுகிறது. ஒரு பாடலிலே சித்தப் ஒருவர் அமைத்துக் காட்டியுள்ளார்.

**"மனிதரிலும் பறவையுண்டு; விலங்குண்டு**
**கல்லுண்டு; மரமுண்டு;**
**மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு;**
**அநேக குல மனிதருண்டு;**
**மனிதரிலும் மனிதருண்டு; வானவரும்**
**மனிதராய் வருவதுண்டு;**
**மனிதரிலே பிறப்பறுக்க வந்ததுவே**
**அருமையெ வகுத்தார் முன்னோர்.**

- சிவானந்த போதம் 6

இந்த மனித இயலை ஆய்ந்த சமுகவியலார், விஞ்ஞான நோக்கில், மனிதன் ஒரு சமுதாயப் பிராணி, சமூகவிலங்கு, இருகால் விலங்கு என்று வகுத்துக் கொண்டான். இந்த விஞ்ஞான நோக்கும், முந்திய மெய்ஞானப் பார்வையும் ஒப்பீட்டில் பெரு விழுக்காடு பொருந்துகின்றன. நாமே மற்றவர்களைப் பார்த்து நாயே, பேயே, மாடே, கழுதையே, மரமே என்று பேசுகின்றோம். இந்த அமைப்பை வள்ளலார் வெகுநாசூக்காகத் தன்னில் பொருத்திப் பேசுகிறார்.

**"ஈ என்று நான் ஒருவர் இடம் நின்று கேளாத**
**இயல்பும்என் னிடம் ஒருவர்ஈந்**
**திடு என்ற போதவர்க் கினே என்று சொல்லாமல்**
**இடுகின்ற திறமும் இறையாம்**
**நீ என்றும் எனைவிடா நிலையும் நான் என்றும் உன்**
**நினைவிடா நெறிவும் அயலார்**
**நிதிஒன்றும் நயவாத மனமும் மெய்ந் நிலைநின்ற**
**நெகிழாத திடமும் உலகில்**
**சீ என்று பேய் என்று நாய் என்று பிறர்தமைத்**
**தீங்கு சொல்லாத தெளிவும்**
**திரம் ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்**
**திருவடிக் காளாக்குவாய்**
**தாய் ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துவளர்**
**தலம் ஓங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே."**

- தெய்வமணி மாலை 4

*That noble manliness which looks nt at the wife of another is the virtue and dignity of the great.* *148*

இவ்வருட்பாவிலே மற்றவர்களை இதமாக அழைக்க வேண்டுமென்ற மனிதநேயப் பண் பாட்டை அழுத்தி வள்ளலார் பேசுவது தமக்கு மட்டுமன்றி - எமக்கும் பிரயோசனமான உபதே சமாகும். எனவே மக்கட் பண்பு பேணல். மனிதப் பிறப்பின் உயரிய விழுமியமாம் என்பது தெளிவு. இந்த நோக்கிலே 80 வருடங்கட்கு முன் வாழ்ந்த பாரதியார் ஒரு சமூகப்புரட்சி செய்கிறார். மானிட வாழ்வு ஒரு சொப்பனமேயென்று சொல்ல வந்த அவர் மனிதரை கலகமானிடப் பூச்சிகள் என்று பேசுகிறார்.

**"உலகெ லாமொர் பெருங்கன லஃதுளே**
**உண்டு றங்கியி டர்செய்து செத்திடும்**
**கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்**
**கனவி லுங்கன வாகு மிதனிடை**
**சில தினங்களுயிர்க்கமு தாகியே**
**செப்பு தற்கரி தாகம யக்குமால்**
**திலத வானுத லார்தரு மையலாந்**
**தெய்வி கக்கன வன்னது வாழ்கவே"**

தம்பலப்பூச்சி, பட்டுப்பூச்சி, வண்ணத்துப் பூச்சி என்று பேசுகிறோம். அவை நாலறிவு உடையன. மனிதன் தன் நிலையினின்று தாழ்ந்து விடுகிறான் என்பதைப் பேசும் கவிஞன் கலக மானிடப் பூச்சிகள் என்கிறான். மனித வடிவிலே நடமாடும் பிராணி என்பது மட்டுமன்றி கலகம் விளைவிக்கும் ஒருவன் என்றும் பேசுகிறார். தானும் வாழாமல் பிறரையும் நிம்மதியோடு வாழ விடாமற் கலகம் விளைவிக்கும் ஒரு இனம் மனித சாதியென்று கூறும் வகையில் இவன் உண்டு, உடுத்து, உறங்கி, சந்ததி விருத்தி செய்து இறக்கும் ஒரு உபயோகமற்ற பிராணி என்று மனம் குமுறுகிறார். கனவு வாழ்க்கையில் பிறரை நோக வைக்கும் அட்டகாசத்தால் என்ன பயன் காணப்போகிறான்? எனவே ஒரு புத்தி ஜீவியாக வாழ்ந்து மற்றவர்கள் மனம் நோகாமல் சம பார்வையோடு ஹ்ருதயத்தோடு வாழ்வதுவே மனிதம் என்பதைச் சமுதாயம் உணரவேண்டும் என்ற அடிநாதம் இப்பாடலிலே சொட்டுகிறது. வாலி இராவணனைத் தன் வாலிலே கட்டி இழுந்து இராவணப் பூச்சியே என்று பேசினான்.

இவ்வாறே பாரதியார் மனித சமுதாயத்தைப் பொதுவாகவும், தமிழினத்தைச் சிறப்பாகவும் நல் வழிப்படுத்திச் சிந்திக்க வைக்க இப்படிப் பாடுகிறார்.

**தேடிச் சோறு நிதம் தின்று - பல**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி மனம்**
**வாடித் துன்பமிக உழன்று - பிறர்**
**வாடப் பல செயல்கள் செய்து - நரை**
**கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்**
**கூற்றுக் கிரையென மாயும் - பல**
**வேடிக்கை மனிதரைப் போலே - நான்**
**வீழ்வே னென்று நினைத்தாயோ.**

மனிதனது இழிந்த நடைமுறைச் சுபாவங்களை இயற்கையோடு ஒட்டி முதல் நான்கு வரிகளிலும் படம் பிடித்துக்காட்டி அவர்களைச் சாடுதல் மூலம் அவர்கள் தம்மை இழிசனராக்காமல் உயர்ந்த பக்குவநிலைக்கு உயர்த்த வேண்டு மென்ற மனோ பீஷ்டத்தைக் கூறிய பாரதி பின் தன்னிற் சார்த்தி அந்த வேடிக்கை மனிதனைப் போலே என்னை எண்ணி விடாதேயெனச் சக்திக் குச் சவால் விடுகிறார். இதனால் மனித சமுதா யத்தையே மாற்றிவிடுகிறார்.

**கலகத்தரக்கர் பலர் என் கருத்தினுள்ளே புகுந்துவிட்டார்**
**பல கற்றும் பல கேட்டும் பயனென்றுமில்லையடி முத்துமாரி**

மனிதம் இனிதமுள்ளதாயும் புனிதமுள்ளதாயும் வாழவும், மற்றவர்களை வாழவிடவும் வாழவைக் கவும் தம்மை ஆயத்தப்படுத்தினால் அதுவே சமயி சைவசமயி எனலாம். மனிதன் தேவனாகமுன் மனிதனாக வாழவே சமயம் ஆற்றப்படுத்துகிறது மனிதமே சிந்தி, செயற்படு.

**நலக்குஉரியார் யார்எனின் நாமநீர் வைப்பில்**
**பிறற்குஉரியாள் தோள்தோயா தார். 149**

அஞ்சத்தக்க கடலாற் சூழப்பட்ட உலகத்தில், எல்லா நன்மைகளும் அடைவதற்கு உரியவர் யார் என்றால், பிறனுக்கு உரியவளின் தோளைத் தழுவாதவரே ஆவர்.

# அயரா முயற்சியால் அரன் அருள் பெற்ற அடியார்

**சிவ. சண்முகவடிவேல்**

**"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"** என்பது முதுமொழி. புறவாழ்வு செம்மை பெற முயற்சி இன்றியமையாது வேண்டப்படுவது போல அகவாழ்வு மெய்ம்மை உற அயரா முயற்சி இன்றியமையாது வேண்டப்படுவது.

செல்வத்தில் செழிக்கலாம். கல்விக் கடலைக் கரை காணலாம். கலாநிதி பட்டம் பெறலாம். உலக சாதனைகளை நிலைநிறுத்தலாம். விஞ்ஞானம் கண்டு அண்டத்தவருக்கு அறிவிக்கலாம். எதுவாக இருந்தாலும் விடாமுயற்சியும் அயரா உழைப்பும் சோர்வில்லாத ஊக்கமும் வேண்டும்.

அதேபோலச் சமய வாழ்வில் சாதனை செய்வதற்கும் ஊக்கம், உழைப்பு, உறுதி என்பன உருக்குலையாது உடன் இருக்க வேண்டும்.

மானுடப் பிறவியின் குறிக்கோள் இலகுவானது அல்ல. உயிருக்கு உறுதியான ஒழியா இன்ப உவகையை என்றும் நிலைத்திருக்கச் செய்வதே மனிதப் பிறவியின் பெறுதற்கரியபேறு என்பது மெய்யியலை நன்குணர்ந்தோரின் பொய்யில் வாக்கு. அவ்வுண்மையை வலியுறுத்தும் வாய்மை திறம்பா வாகீசருடைய வாக்கு. "தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே" அந்தத் தலைமறைவு தான் அழிவில் வீடு அல்லது நிரதிசய இன்பம்.

உயிரினுடைய அந்த உன்னத குறிக்கோளை அடைய விடாமல் எதிர்படும் குறுக்கீடுகளையும் கூறுவார் நாயனார். "பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம் மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவொடு மூப்பு வந்து கோலனாய் கழிந்தநாளும், குறிக்கோளிலாது கெட்டேன்.... என்று உலகத்தவரைப் பார்த்து வருந்துவார் வாகீசப் பெருந்தகையார்.

மானுடப் பிறப்பில் மூன்று நிலைகள் இளமை, வாலிபம், முதுமை என்பன. மூன்று பருவத்திற்குமான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் காலத்தைக் கரைத்தால் உயிரின் உயர்கதி அடைவது எங்கே! சமயவாழ்வில் சாதனை செய்வது எங்கே! பேச்சோடும் பூச்சோடும் மூச்சு அடங்கிவிடும்.

சாதனைக்கான சமய வாழ்வை வேதனைக் கிடங்கொடுத்து வாதனைப் பட்டு சோதனைக்குள் அழுத்தி போதனையோடு போக்கி விடலாமா?

உலகத்தைத் துறவாமல் துறந்து உயர் நெறியில் ஒழுகிய உத்தமர்களுடைய இலட்சிய வாழ்வு அணையாத விளக்காக சுடர் விட்டுக் கொண்டிருப்பதைக் காணுங் கண்ணிற்குக் காட்டா திருக்கலாமா?

அரிய பிறவியில் பெரிய பயனைப் பெறாமல் மருவிய பாசத்தளைக்கு இடங்கொடுத்து மயங்கி விடலாமா?

அரிய சாதனையில் உரிய பலனைப் பெற்றமைக்குப் பெரியவர்கள் பேணிய நெறியை மறந்துவிடலாமா?

அம்பிகை அளவிலாத ஆண்டுகள் ஆற்றிய அருந்தவத்தால் அரனை அருங்கணவராக அடையப் பெற்றார்.

*Is it asked, "Who are those who shall obtain good in this world surrounded by the terror - producing sea?" Those who touch not the shoulder of her who belongs to another. 149*

அமுதவல்லி, சுந்தரவல்லியின் பெருந்தவத்தால் ஆறுமுகப் பெருமானுடைய சக்திகளாகும் பேறுபெற்றனர்.

தக்கனின் தளராத தவத்தினால் அனைத்திற்கும் தாயான தயாபரியைத் தாட்சாயணியாக்கும் தகுதி பெற்றனர்.

இமயமலை அரசனுடைய இணையற்ற தவத்தால் மலைமகளை மகளாகப் பெற்று மகிழ்ந்தான்.

சூரன் ஆரும் அச்சுறச் செய்தவத்தால் வெற்றிவேல் பெருமானுக்குக் கொற்ற மயிலும் கோழிக் கொடியுமானான்.

கயமுகாசுரனின் கொடுந்தவத்தால் கணபதியாருக்குப் பெருச்சாளி வாகனனாயினான்.

கார்முகில் வண்ணன் கமலக் கண்ணால் அர்ச்சித்து அடல் மிகு ஆழியைப் பெற்றான்.

அர்ச்சுனன் புரிந்த அயராத தவத்தால் சிவ படைக்கலம் சேரப் பெற்றான்.

வசிட்டர், விசுவாமித்திரருடைய வளமான தவத்தால் வாராத வரப்பேறு ஒன்றில்லை. திரிசங்கு என்பானுக்கு ஒரு உலகத்தையெ உருவாக்கிக் கொடுத்தார் விசுவாமித்தரர்.

இவ்வாறான அரிய சாதனைகளைப் புரிய உதவியது அடாது மழை பெய்யினும் விடாது செய்த தவ ஊக்கம் அன்றோ!

தவத்தால் வரும் ஆற்றல் தலைப்பட்டவருக்குக் கூற்றத்தைக் கடந்தாலும் கைகூடும் என்றும் திருக்குறள் இலக்கணத்திற்கு (269) மார்க்கண்டேயர் இலக்கியமாக என்றும் இலகுபவர் ஆன்றோர்.

அகத்திய முனிவர் ஆழ்கடலை ஆசமனம் செய்து தவ ஊக்கத்தால் ஆன்றோ....! இந்திரனுடைய இகழ்ச்சியற்ற தவம் வேண்டும் வரம் ஈய வைத்தது கமண்டல தீர்த்தம் காவிரி நதியாகக் காட்டாருகக் கரை புரண்டு ஓடச் செய்தது நாம் கேளாத கதை அல்லவே!

இவ்வாறு நோற்றலினால் ஏற்பட்ட ஆற்றலைச் சுருக்கில் சுருங்கா, விரிக்கிற் பெருகும்.

கடுந்தவத்தில் படும் தகைவிலாத் தன்மையை மணிவாசகர் மணியாகப் பாடுவார். "தவத்தரைப் புற்று எடுக்கும். புற்றடியில் மரமாகும். மரம் நீரையும் காற்றையும் உணவாகக் கொள்ளும். இவ்வாறு தேவர்களும் ஏனையவர்கள் பிறரும் யாவரும் பெருமானுடைய திருவடிகளை வருந்தியும் வந்தடையப் பெறார் (செத்திலாப்பத்து 2)."

கடும் தவம் புரியும் கொடுமை தேவர்களுக்கும் ஏனைய தேசத்தவர்களுக்கும் ஆனது போலத் தமிழ்கூறு நல்லுலகத்தில் தலை தூக்கவில்லை. ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்களும் மெய்யடியார்களும் தரணியைத் தளப்பமின்றி வாழ வழி வகுத்தவர்கள் வளம் மிக்க தமிழ் நாட்டில்.

தவநிலைக்கு ஒப்பாகவும் மேலும் ஒருபடி உயர்ந்ததாகவும் அவிந்து அடங்கிய சான்றோரும் மெய்யியலாளர்களான நாயன்மாரும் கொண்ட கொள்கையும் ஒருகலாறும் அமைந்தது.

தவம் தான் நினைத்தனைச் சாதிக்கும், தன்னைப் பிறர் தொழச் செய்யும், உயர்நிலைக்கு ஒருவரை உயர்த்தவும் உபயோகப்பட்டது.

**"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்**
**வாழ்வான் மனம் நின்பால்**
**தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை**
**எல்லாம் தொழ வேண்டிச்**
**சூழ்த்து மதுகரம் முரலும் தாரோயே..."**

என்பது என்புருக்கும் வாசகம். சிவபெருமானை வேண்டுவதில்லை. வேள்வியும் தவமும் எமக்கு வேண்டியது எல்லாம் தரும் என்ற கொள்கைவா

**அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று.** **150**

ஒருவன் அறத்தைத் தனக்கு உரியதாகக் கொள்ளாமல் தீவினைகளைச் செய்து வருவானாயினும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது.

திகள் குறிக்கோளைக் குட்டிச் சுவராகக் கொக்க ரித்துக் கூவுவுதும் உண்டு. கூவுதல் பலிக்கா மையால் கூடிக் கூட்டமாகச் சிவபெருமானையே அழித்து விடுவோம் என்று யக்ஞம் செய்வதில் முனைவார்கள். மடைமை மிக்க மாமுனிவர்கள்.

இவ்வாறான நிரீச்சுர கருத்துக்கள் உலகின் பல பாகங்களிலும் சண்டமாருதமாக அடித்த தன்மைகளை கருத்திற் கொண்டவர் வாதவூரடி களார். சிவபெருமானுடைய குறிகளும் அடை யாளமும் கோயிலும் நெறிகளும் நின்று நிலை கொள்வதற்கு நல்லுலகம் தமிழ்கூறு நல்லுலகம் எனக் கருதிக்கொண்டார். சிவபெருமான் தென் னாட்டு உரிப்பொருள் என உலகவர் அறிய உணர்த்தினர்.

**"தென்னா டுடைய சிவனே போற்றி**

**எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"**

என்பது மணியான மந்திரம்.

சான்றோர் அருகத் தொடங்கியதும் அடிய வர்கள் சிவபெருமானுடைய தாளில் தலைப்படும் தலையாய வாழ்வில் தலைப்பட்டார்கள். அது அகம் மலர்ந்த பெருவாழ்வு. புறத்தைப் புனிதம் செய்யும் திருவருள் வாழ்வு. மாநுடத்தால் அரி யலதில் அரிதாக அடையப்படும் குறிக்கோள் கொண்ட வாழ்வு. அகிலப் பற்றுக்கள் அனைத் தையும் அறுத்தபின் தாமரை இலைத் தண்ணீர் போலப் பற்றற்ற நிலையில் பற்றும் பேரானந்தப் பெருக்கு - அவ்வாழ்வு.

மெய்யியலை நன்குணர்ந்த மேன்மையாளர்கள் சிவானந்தப் பெருக்கைக் கனியாகக் காட்டுவார்கள்.

**"மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்**

**கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே**

**புனிதன் பொற்கழல் ஈசனெ னுங்கனி**

**இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே"**

என்பர் திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசு நாயனார்,

**"ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்**

**ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது**

**நன்றுகண் டீர்நல் நமச்சிவா யப்பழந்**

**தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே."**

என்பது நம்பிரான் திருமூலருடை நல்லுப தேசம்.

**"கல்நார் உரித்த கனியே போற்றி**

**கதியே போற்றி கனியே போற்றி"**

என்பன எழில்வாதவூரருடைய பழிப்பில் மொழி. "அன்பர், எல்லவர் தமக்குமுத்தி இருங்கனி யுதவு மென்றும், என்பது கச்சியப்பரின் கனிமொழி"

என்றும் நின்று சுகித்திருக்கும் நன்றான நமசிவாயப் பழத்தைப் பெறுவதற்காக அடிய வர்கள் ஒன்று காதலித்து மன்றுளார் அடி அடைய அடைந்த இன்னல் இவ்வளவு அல்ல. முத்தி இருங்கனியைக் காதலிக்க அயரா உழைப் புத் துயரான இடர், நல்குரவு, மானாபிமானம், பசி, பிறர்பழிப்பு எல்லாம் பஞ்சாகப் பறந்தன போலும்.

இளையான்குடிமாறனார் களையாது அடிய வர்க்கு அமுது ஊட்டினார்.

இன்புறு தாரந்தன்னை ஈசனுக்கு அன்பர் என்று துன்புறாது ஈந்தார் இயற்பகை நாயனார்.

பரம்பொருளாகி உள்ளார் அமுது செய்யப் பெற்றிலேன் என்று வன்கழுத்து அரிவாள் பூட்டி அரிந்தாரே அரிவாட்டநாயனார்.

கண்ணின் மணிகள் அவை இன்றியும் கயிறு தடவிக் குளம் எடுத்தார் தண்டியடிகள் நாயனார்.

ஆறுமுடிமேல் அணிந்தவருக்கு அடியார் என்று கறியமுதாக ஊறிலாத தனிப்புதல்வனை அரிந் தங்கு அமுதூட்டினார் சிறுத்தொண்டர்.

தேவர்பிரான் திருவிளக்குச் செயல் முட்டமிட றரிந்து மேவரிய வினைமுடித்தார் கலியநாயனார்.

*Though a man perform no virtuous deeds and commit (every) vice, it will be well if he desire not the womanhood of her who is within the limit (of the house) of another.* 150

அத்தராகிய அங்கணர் அன்பரை இத்தலத்தில் இகழ்ந்தியம் பும்உரை வைத்த நாவை வலித் தரிந்தார், சத்திநாயனார்.

மூரியார் கலியுலகின் முடியிட்ட திருவிளக்குப் பேரியாறணிந்தாருக் கெரித்தார் கணம்புல்ல நாயனார்.

"சாலவுறு பசிப்பிணியால் வருந்திநிலை தளர் வெய்திக், கோலநிறை புனல்தாங்கி குடந்தாங்க மாட்டாமை ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ் வார் புகழ்த்துணையார்."

"தந்தையார் தாயார்மற் றுடன்பிறந்தார் தாரங் கள், பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதியணியும் எந்தையார் திருப்படிமற் றுண்ணஇசைந் தார்களை யும் சிந்தவாள் கொடுதுணித்தார்" - கோட்புலியார்.

"அன்றினார் புரமெரிந்தார்க் காலயம் எடுக்க எண்ணி ஒன்றும் அங்குதவாதாக உணர்வினால் எடுக்கும் தன்மை நன்றென மனத்தினாலே நல் லஆ லயந்தான் செய்தார் பூசலார் நாயனார். அயரா முயற்சியால் அரனிடத்தில் அருட்கனி பெற்ற அன்பர் இவர் சிலர்.

இவ்வாறு செயற்கருஞ் செயல் செய்து சிவா னந்தக் கனிநுகரப் பெற்ற சீரடியார்களின் செம்மை நலத்திற்கு உலகத்தில் எந்நலத்தார் எத்தேயத் தாரும் ஒப்பாக முடியும். அம்மேன்மை கண்டு அல்லவோ அல்லார் கண்டத்து எந்தை அவர்கள் இல்லங்கள் தோறும் சொல்லாமல் வருவான். "பந்தனை விரலியும் நீயும்நின் அடியார் பழங்குடில் தோறும்எழுந் தருளிய பரனே" என்பது பிணி தீர்க்கும் மணிவாக்கு.

# 'உ' பிள்ளையார் சுழி

- சிவா -

அருட்பெருஞ்சோதி சிவசோதி! அதனின்றும் பராசக்தி தோன்றியது! எதற்காக? மூலப்பிரகிருதி யாகிய மாயையினால் மயக்கதின் உறக்கத்தில் அறிவிழந்து இருந்த எண்ணற்ற கோடி உயிர் களுக்கு அருளவென தோன்றிய பெருங் கருணைப் பேறான பராசக்தியினின்று ஆதிசக்தியும், அதி னின்று ஞானசக்தியும், அதிலிருந்து கிரியா சக் தியும், அதிலிருந்து இச்சாசக்தியும் தோன்றின. இச்சா சக்தி விந்து எனும் சுத்த மாயையில் பாயவே, அதன் ஆற்றலைத் தாங்காது சுழன்ற விந்துவிலிருந்து நாதம் தோன்றியது.

விந்து "௦" சுழியாகவும், நாதம் "___" நீண்ட கோடாகவும் காட்சி அளித்தன.

அதுதான் எம்முன்னோர்கள் "உ" என்னும் பிள்ளையார் சுழியாயிற்று பிள்ளையாரை முழு முதல் தெய்வமாக விந்து நாதக் குறி உணர்த்து வதனால் "பிள்ளையார் சுழி" எனப்பட்டது.

**ஓம் கணேசாய நம:** இது விநாயகரது சடாக் கர மந்திரம். "கம்" - விநாயக பீஜம். இந்த மந்தி ரத்தை உச்சரிப்பதனால் காரியங்கள் யாவும் விக்கினமின்றி சித்திக்கும் என்பது பொருள். பிள்ளையாரை உள்ளன்போடு வழிபடுவோர் ஆயுள் விருத்தி. ஆரோக்கியம், குறைவற்ற செல்வம், மன அமைதி யாவும் பெற்று வாழ்வர்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பதற்கு பிள்ளையார் சுழியைப் போடுவதன் மூலம் அதன் நிறைவான பயனைப் பெறலாம் என்ற கருத்து வலுப்பெறுகிறது.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

தன்னைத் தோண்டுபவரை விழாமல் தாங்கும் நிலம் போல, தம்மை இகழ்பவரைப் பொறுத்தலே தலையாய அறமாம்.

# சிவ வழிபாட்டின் தொன்மையும், சிறப்பும்

பண்ணிசைக் கலாநிதி, சங்கீத வித்துவான்
**பேராசிரியர் எஸ். கே. சிவபாலன் M.A., PhD**
(இசைத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

சிவபரம்பொருளை முழு முதற் கடவுளாகக் கொண்டு விளங்குவது சைவ சமயம். சைவம் சிவத்தோடு சம்பந்தமு டையது. 'சைவ சித்தாந்தம்' என் னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது. பதி, பசு, பாசம் என்னும் முப்பெரும் உண்மைப் பொருள் களை விரித்துரைப்பது. இதனாலன்றோ மேல் நாட்டினர், சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக்கொள்கையானது. தமிழ் மக்களு டைய பேரறிவின் பெரும் பயனாகும் என வியந் தோதுகின்றனர். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு கட்கு முற்பட்டதாய், இன்றுவரை உயிர்ப்பாற்ற லுடையதாய் நிலவி வரும் பழம்பெரும் சமயம், சைவ சமயமே என சர். ஜோன் மார்ஷல் என்னும் பேரறிஞர் நடுவுநிலமை பிறழாது ஆராய்ந்து கூறி யிருப்பதும் நோக்கற்பாலதாகும். மேலும் "பல்வேறு மனித இயல்பிற்கும், ஒழுக்கத்திற்கும், ஏற்புடைய தாகச் சைவ சித்தாந்தம் தன்னை ஆக்கிக் கொள்ள வல்லதாக உள்ளது. நுண்பொருள், தத்துவ அறிஞர்களுக்குரிய ஆன்மிக அருவக் கூறும், கவிதையுணர்வும், கற்பனைத் திறம் மிக்கவர்களுக்குரிய நடைமுறைப் படிவக் கூறும், அமை தியை நாடும், தனிமை விரும்பிகளுக்குரிய சாந்தி நலம் மிக்க சிந்தனைக் கூறும், ஒருசேர வாய்ந்ததாகத் தலைசிறந்து விளங்குகின்றது" எனப் பொதுவகையில் இந்துமதம் பற்றி ஜேர்மனிய அறிஞர் வில்லியம்ஸ் கூறுவதும் இங்கு குறிப் பிடத்தக்கதாகும். மேலும் சமய உலகில் தமிழ கத்தில் உள்ள மிகப்பெரும் பழமையான சிறந்த தத்துவக் கருத்துக்களுக்குகெல்லாம், சைவ சமயமே நேரிடை உரிமைத் தொடர்புடையது எனவும் அறுதியிட்டுக் கூறலாம்.

சைவம் குறிக்கும் சிவம் எனும்சொல் செம்மை அடியாகப் பிறந்ததோடு, செந்நிறம் ஆகிய நிறத் தினையும் குறிப்பதாகும். திருவள்ளுவர் கடவுளைச் "செம்பொருள்" எனக் குறித்ததும் இக்காரணம் பற்றியேயாகும். மேலும் "சிவன்" எனும் பதம் முருகப்பெருமான் பெயராகப் பண் டைத் தொல்காப்பிய நூலில் காணப்பட்ட "சேயோன்" எனும் சொல்லின் திரிபாகுமெனத் தனித் தமிழ்த் தந்தை மறைமலை அடிகள் கருதுவதும் இங்கு நோக்கற்பாலதாகும்.

இவ்வகைச் சிறப்புமிக்க சைவ சமயத்தின் தொன்மை பற்றி அறிவதற்கு, முற்கால சிந்துவெளி நாகரிகம் பற்றி ஆராய்தல் மிகப் பொருத்தமாகும். வடமேற்கு இந்தியாவின் சிந்துநதி பாயப்பெறும் நிலப்பரப்பே சிந்துவெளி என அழைக்கப்படு கின்றது. இருக்கு வேதத்தில் இந்நதியும் இதன் கிளைகளும் நன்கு சிறப்பிக்கப்படுகின்றன. இன்று இந்நதி சார்ந்த நிலப்பகுதிக்குள் மேற்கு பாகிஸ்தானும். பஞ்சாப் பிரதேசமும் அடங்கும். சர். ஜோன்மார்ஷல் முதலான பல மேலைத்தேய ஆராய்ச்சியாளர்கள் இப்பிரதேசத்தில் அகழ்வா ராய்ச்சி நடத்தியதன் பயனாக மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற சிதைந்த பழைய நகரங்களையும், அதனிடையே அக்கால சிவ வழிபாட்டுத் தொடர் பான தொல்பொருட்களையும் கண்டறிந்தனர். இவற்றிலிருந்து ஹரப்பா கலாசார மக்களின் நாகரிகம், பண்பாடு, சமய வழிபாடு ஆகியன

*To bear with those who revile us, even as the earth bears up those who dig it, is the first of virtues.* 151

கி.மு. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தெனவும், ஹரப்பா கலாசாரத்தில் ஓர் உயர்ந்த நாகரிக மக்கள் அரணுள்ள நகரங்களை அமைத் தும், கோட்டை கொத்தளங்களுடனும். சிறப்பாக வாழ்ந்திருந்தனர் எனவும் அறுதியிட்டு நிறுவினர். ஹரப்பா கலாசாரம் திராவிடர் கலாசாரம் என மொழியியலறிஞரான வின்னிஸ் அறிஞர் வற்பு றுத்திக் கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக் கதாகும். ஹரப்பா கலாசாரம் கி.மு. 2500 - 1500 வரையெனப் பொதுவாகக் கொள்ளலாமெனினும், அண்மைக் காலத்தில் காபன் முறைப்படி இதன் காலம் பொதுவாக கி.மு. 2300 - 1750 வரையெனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே ஆதித் திராவிடர் சிறப்பான நாகரிகத்துடனும் சிவ வழிபாட்டுடனும் உயர்ந்த கலாசாரப் பண்பாட்டுடனும் வாழ்ந்த நிலப்பகுதி, ஹரப்பா எனும் நிலப்பகுதி என்பதும் நன்கு பெறப்படும்.

இவ்வகழ்வாராய்ச்சியின் பயனாக அறுநூற் றுக்கு மேற்பட்ட சிவலிங்கங்கள், இங்கு கண்டெடுக் கப்பட்டன எனவும் அறியக்கிடக்கின்றது. இவற் றோடு களிமண்ணாலான பூசைப்பாத்திரங்கள், நந்தி முத்திரையொன்றில் யோக நிலையிலுள்ள உருவம், இவ்வுருவம் சிவனின் உருவம் என டாக்டர் ஜோன் மார்ஷல் நிறுவியுள்ளார். மேலும் சிந்துவெளி நாகரிக காலத்தே வாழ்ந்த மக்கள் தமது வழிபாட்டுக்குரிய இடங்களில், தமது இஷ்ட தெய்வங்களின் உருவப்படங்களை வைத்து வணங்கி வந்தனர் என்றும் சிந்துவெளி ஆராய்ச்சி யாளரான டாக்டர் மாக்கே கூறுகின்றார். இவ் வாற்றான் ஹரப்பா கலாசாரத்தில் அறுவகைச் சமய வழிபாடுகளும், 'சைவம்' எனும் தனிப்பெரும் தலைமைப் பெயருடன் நிலவி வந்தது என்பதும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தின் நால்வகை வழிபாடுகளும், சிந்துவெளி நாகரிக காலத்தில் சிறப்புற்று விளங்கி வந்தன என்பதும் நன்கு பெறப்படும்.

* வியாழக்கிழமையும், அமாவாசையும் கூடிய அன்று அரசமரத்து நிழலில் ஓடும் ஜலத்தில் குளித்தால் பிரயாகையில் குளித்த பலன் உண்டு.

* இரவு சமயத்தில் எண்ணை தேய்த்துக் குளிப்பதும். அமாவாசை, ஏகாதசி ஆகிய திதிகளில் எண்ணை சம்பந்தமான பதார்த்தங்களை சாப்பிடுவதும் கூடாது. சனி, புதன் ஆகிய இரு தினங்கள் தவிர மீதி கிழமைகளில் எண்ணை ஸ்நானம் செய்யக்கூடாது.

சைவ சமயத்தினரிடையே இலிங்க வணக் கத்தையே சிறப்பாகக் கொண்டோர் வீர சைவர் எனப்படுவர். இவர்கள் எப்போதும் சிவலிங்கத்தை அணிந்து கொண்டிருப்பர். இதற்கு இலிங்கதாரணம் என்று பெயர். இப்பழக்கம் பண்டை நாட்களில் எகிப்து, பாபிலோன், கிரீஸ், உரோம் முதலிய நாடுகளிலும் இருந்து வந்தது.

வட அமெரிக்காவுக்கும், தென் அமெரிக்கா வுக்கும் இடைப்பட்ட மெக்சிக்கோ, பெரு எனும் நாடுகளில் ஏறக்குறைய ஏழாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அமைக்கப்பட்ட சிவன் கோயில்கள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கிருந்த வடிவங்கள் சிவலிங்க வடிவேயாகும் என்னும் உண்மையினை, ஆங்கிலப் பேரறிஞரான எரிப்பால லெவி என்பார் விளக்கியுள்ளதைத் தவத்திரு மறைமலை அடிகளார் தமது நூலில் விளக்கியுள்ளார்.

உலகில் மக்கள் பல்வேறு நாடுகளில் குடியேறி வாழ்ந்த பழங்காலத்தில், அங்கெல்லாம் இந்த இலிங்க வழிபாடு இடம் பெறலாயிற்று. மலேயா, ஜாவா, அமெரிக்கா, ஐரோப்பா, கிரேக்கம், எகிப்து, பாபிலோனியா, பெர்ஸியா, அரேபியா ஆகிய நாடுகளில் பரவின. அமெரிக்காவில் கொலராடோ ஆற்றங்கரையில் பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சிவன் கோயில் இருந்ததாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பிலிப்பைன்ஸ் மக்கள் சிவனை 'சிவப்பன்' என வழங்குகின்றனர்.

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.** 152

பிறர் செய்த பெருந்தீங்கை எக்காலத்தும் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதை மனத்திற் கொள்ளாமல் அப்பொழுதே மறந்துவிடுதல் பொறுத்தலை விட நல்லது.

இந்தோனேசியாவில் இப்போதும் பல சிவன் கோயில்களைக் காணலாம். ஜப்பானில் பழங்காலக் கடவுள் பெயர் 'சிவோ' என்பதாகும். அண்மையில் எகிப்திய ஆற்றங்கரையில் சிவலிங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிவன் கோயில் என்று வழங்கப்படுகின்ற ஒரு திட்டு கனடாவில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது ஆறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளராற் கணக்கிடப்படுகிறது. இதில் பல புதுமையான விலங்கினங்களும், புல் பூண்டுகளும் காணப்படுகின்றன. அமெரிக்கத் தொல்பொருள் ஆய்வாளர் இத்திட்டிற் புகுந்து ஆராய முயன்று வருகின்றனர். சிவன் கோயில் அங்குள்ளமையால் தமிழர் நாகரிகம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே, அமெரிக்க நிலப்பரப்பில் பரவி இருந்ததென்பது புலப்படுகின்றது. யூதர்களும், அரேபியாவில் தேவி வழிபாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் வழிபட்ட தேவிக்கு “பாலா” என்று பெயரிட்டிருக்கின்றனர். இதனை (பழைய ஏற்பாடு) ஆதி விவிலிய நூல் (பைபிள்) கூறுகின்றது. யூதர்கள் தோன்றியிருந்தபோது அரேபியாவில் தேவி வழிபாடும் இருந்ததாகத் தெரிகிறது. இதேபோன்று கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றிலும், சிவன் கோயில்கள் இருந்துள்ளன. அவைகளெல்லாம் வழிபாடு இல்லாமல் வழக்கொழிந்துவிட்டன. ஆனாலும் பாலித்தீவில் இன்றும் சிவ வழிபாடு தொன்றுதொட்டு இருந்து வருகின்றது, இந்தச் சிவாலயங்களைச் சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்பு, சோழ மன்னர்கள் கட்டியிருக்க வேண்டுமென, ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே ஆசியாக் கண்டத்தையும், தென் அமெரிக்காக் கண்டத்தையும் தாண்டி ஐரோப்பாக் கண்டத்திற்குச் சென்றால், அங்கேயிருந்த பழமையான சிவவழிபாடுகள் தொடர்பான தடயங்கள், புதை பொருள் ஆராய்ச்சிகள் மூலம் கிடைத்திருக்கின்றன. இங்கிலாந்து நாட்டில் கூட இவைகளைக் கண்டறிய முடியும் என்பதைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

சிந்துவெளியில் சிறப்பாக ஹரப்பா, மொகஞ் சதாரோ போன்ற இடங்களில், அகழ்ந்து ஆய்ந்து கண்ட அரிய ஆயுதங்கள், பொம்மைகள், குழல் உருவங்கள், வெண்கலத்தாலான நாட்டிய நங்கையின் படிமங்கள் இன்னோரன்ன பலவும் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவை. அங்கு இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த, தமிழர்களின் முன்னோர்கள் எனக்கருதப்படும் திராவிடர்கள், வேய்ங்குழலும், யாழும் கண்டு இசைத்து வந்தார்கள் என்று அறியப்படுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளியில் வாழ்ந்து வந்த பண்டைய திராவிடர்கள் இசை பயின்றிருந்ததோடு யாழும் குழலும் இசைத்து வந்தார்கள் என்பதை அங்குள்ள முத்திரைகள் மெய்ப்பிப்பதாக இருக்கின்றன. திரு. ஸ்ருவேட் பிக்காட் என்ற அறிஞர், சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் கண்ட, ஏழிசை எழுப்பும் இனிய இசைக் கருவியைப் பயன்படுத்தியிருப்பது, அவர்களது நனி சிறந்த நாகரிகத்தையும், நுண்ணிய இசை அறிவையும், உணரப் போதிய சான்றாகும் என எடுத்துக்காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து திராவிட மக்களின் கலாசாரத் தொன்மையையும் சைவ சநாதன தர்மத்தின் பழமையையும் நாம் ஒருவாறு உய்த்துணரலாம்.

* ஒருவன் தினசரி ஜெபம் செய்வதால் உடல் உறுதியும், ரோக நிவர்த்தியும் ஆகிறது. ஆன்மா பலம் பெறுகிறது. இப்படிப்பட்ட ஜெபத்தை ஆலயம், நதிக்கரை, பசுக்கொட்டில், மடம், சித்தர் சமாதி, சூரியன் இவர்கள் சன்னதிக்கு எதிரில் அமர்ந்து ஜெபிக்க வேண்டும். அரச மரம், பலாமரம், துளசி, அசோகம் முதலிய விருஷங்களுக்கு அருகில் இருந்து ஜெபிப்பது நல்லது.

*Bear with reproach even when you can retaliate; but to forget it will be still better than that.* 152

# KANDHA SHASTI VIRATHAM

Thiruchthampalam

Arang Kavalar Sivaneri Chemmal
Justice of The Peace Dharma Jothi
**Dr. T. Senthilverl**

## Religion is the path to the origin.

The World religion is derived from the Latin words "re" and "ligare", which mean, "back" and "to the origin" respectively. Religion is the path to the origin. Mere outward appearance or behaviour does not make one religious. Religion is an experience.

## Know thy potential

Every one of us has the potential to realize God. We also have the potential to receive and transmit vital knowledge. We can attain the powers of seers. We can synthesize *amirtham* (nectar) in our body. All of us can hear the divine hum *Om* an more, and see the divine in the form of brilliant light and see the vast luminescence space within us and in it everything.

## Know his whereabouts

It has been said that:

"*Andaththil ullathu pindhaththil unddu*
*Pindhaththil ullathu andhaththil unddu*"

That is:

"That which is in the universe is in the body
That which is in the body is in the universe"

## 'Thiru Chith Ambalam'

In order to realize God you got to have a clear pure mind. A clean mind is conducive to realize that the path to the origin begins from within one's self.

The tradition of saying *Thiruchithambalam* before and after singing holy hymns is particularly noteworthy.

It is commonly understood that by saying *Thiruchzithambalam* you are able to concentrate on the *Thevaram* (hymn), it's meaning and effect. At the same time you are also able to focus your mind towards the centre of worship of Siva at Thillai commonly known as Chithamparam, in Thamil Nadu, India. Chithamparam is also known as Thillai Ambalam (the temple amidst *Thillai* Trees) because, in earlier days, the temple was surrounded by *Thillai* (*Excoecaria agallocha* Linn) Trees. Siva, it is well known, is seen as the cosmic dancer, Nadaraja, in Thillai and is fondly known as Thillai Kooththan.



Though the word *Gangai* means river, when mentioned unqualified, would refer to the river of rivers, the sacred Gangai, flowing from the Holy Himalayas. Like wise, when it is unqualified, the word *Koyil,* which means temple, denotes Thillai Ambalam.

## Rahasyam (Secret) Concealed

In the minds of every saiva is an urge to visit Chithamparam at least once in his lifetime. Many devotees would undertake a pilgrimage to Chithamparam, to see Sivaperuman as Nadaraja along with his consort Sivakama Sundhari. You enter the *Kovil* of the cosmic dancer Thillai Kooththan. To his right is the

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது விருந்தினரைப் பேணாது விடுதல். அதுபோல வலிமையுள் வலிமையாவது அறிவிலார் செய்த தீங்கினைப் பொறுத்தலாகும்.

area of *Chithampara Rahasyam.* The priest would invite you to glimpse the rahasyam.

All you can see is a garland of a *Vilva [Aegle marmelos (L.) Corr.]* leaves made of beaten gold. You are bound to appear puzzled or disappointed because you had hoped to see something marvelous and awesome. Where upon the priest will tell you firmly that is the *Chithampara Rahasyam.* You will have to move away in order to make room for other eager devotees who have paid a fee to see nothing but nothing.

## Rahasyam (Secret) Revealed

In Chithamparam when you see Sivakama Sundhari samedha Nadaraja (Nadaraja with Sivakama Sundhari) in the ***Perambalam*** (big temple), you see him **externally.** Looking on at the space allotted as the Chithampara Rahasyam you become alive to the fact that he is performing his **cosmic dance** of creation in the ***chit*** **(small)** ***ambalam*** **(temple)** of your ***chiththam*** **(mind).** You see him **internally.** This is a reward and benefit of the pilgrimage. One can gain the same result, that is see Him internally, by intoning ***"thiruchitambalam"*** **(the small temple)** or ***thiruchithambalam*** **(temple in your mind).**

The *chiththars* (great seers) achieved *chiththi* (success) by seeing in the ***chiththam*** the ***Param.*** To see in the *chiththam* (mind), Him, the ***Param*** in the luminous ***amparam*** (expanse) within one's self is the ***Chithampara Rahasyam,*** the secret of secrets.

It is worth emphasizing that the pilgrimage to the temple brings the same success to us. Uttering *"Thiruchithambalam"* also brings the same success to us. The Supreme Chiththar dwells in our mind. Not only that, everything in the universe is within us. We realize that, indeed *andaththi ullathu pindhaththil unddu.*

When we sing *thevaram* with open eyes God cannot but appear before us. When we sing *thevaram* with eyes closed we see Him Who dwells in our mind, in all His glory, internally.

## A healthy mind in a healthy body

Since God dwells within us it behoves us to keep the mind pure; and only a pure and healthy body befits a pure and healthy mind. Is it not for this reason that saint Thirumoolar, who gave us the priceless work titled "Thirumanthiram", said

*Udambinai munnam illukendru irunthane*
*Undambinukku ulle uruporul kandane*
*Undambulay uththaman koyil kondaan endru*
*Unambinai yaanirunthu ombuhindranay*

Thirumoolar says, "Previously, I thought that my physical body was a base burden and a despicable liability. Then, I realized that the essence of everything (God, Sivaperuman) dwells within my body, an, because my body is a temple for the Supreme One, I now value it and take intense and infinite care of it".

Since God's abode (or, rather, one of God's many abodes) is the self, the way to God, or the path to the Divine is also within one's self.

We care for the outer body by washing and cleaning.

What about the inner body? All of us take in food. How many of us eat the proper food at the proper time in the proper quantity? The inner body is cleaned automatically by the elimination of waste, foreign matter and some substances that are in excess of immediate requirements.

However, some essentials, for example fat, are stored for furture use. During a time of shortage or when food is not taken in, stored fat sustains us. People who live in those parts of

the world where periodic famines are experienced have a physique that is able to store considerable amounts of fat.

Though stored fat can come to your aid when food from outside can become scarce, excess storage could prove to be a hindrance.

Once in a while it is prudent to clean up the warehouse.

## Kandha Shasti Viratham - For a Cleaner Interior

Kandha shasti viratham is observed once a year in the month of *'Aippasi'* (October - November) starting from the *'pirathamai'* the 1st phase of the brightening moon. Of all Kandha temples it is the one in Thirunchendur in Thamil Nadu, India that draws the largest number of Kandha devotees. All roads, at the time of the *viratham,* seem to lead to Thirunchendur. Beside the temple by the sea there appears to be a sea of heads. The Kandhan's *'Thiruvilaiaadal'* (divine sport) *Soora Samharam* is enacted during the sixth day of the festival. This is a drama to grant a great boon to Soorapthman by Kandhan. Soorapathman is given the honour of be coming Kandhan's vehicle *mayil vahanam* (Peacock vehicle) and *cheval kodi* (the rooster on Kandhan's flag).

During the six days of kandha shasti, devotees, usually fast. They fast in many different forms: some devotees take only one meal a day and that single meal is the evening meal; to some that single meal consist of fruit and milk; others forego all solid foods, even abstain from taking medication take only a liquid diet; some even forego the liquid diet. Of the above forms taking milk would defeat the purpose of clearing long stored fat. Not taking any liquids could be harmful, as many unwanted matters tend to remain in the body. The ideal form of fast would be that during all six days and nights to abstain from all solid food and even medicine but take water, coconut water, strained orange juice and or such permissible liquides. These liquids help to flush out unwanted substances and to clean the body.

At the end of the six-day fast the body is indeed cleaner than it was before. The mind is cleansed by the pilgrimage, meditation, worship and other devotional activities. **A pure mind in a pure body** is a sublime combination and conducive to realizing the Divine. This is the reward and benefit of Kandha shasti viratham.

## The secret of fasting without experiencing the pangs of hunger

Many devotees, very much though they would like to undertake a complete fast, hesitate to do so at the thought of going without solid food for six days and six nights. Some devotees are concerned that the acidic digestive juices normally and habitually produced would irritate the lining of the stomach if there in no food for them to digest.

If you are hungry and do not take food to assuage the pangs of hunger are you likely to develop stomach ulcers? In most cased, yes.

However, *viratham* is a misunderstood word. It does not mean mere fasting. Not quite. It means adhering to certain principles. This may include fasting, but does not have to include fasting. At the annual temple festivals in villages it is customary for everyone to skip at least one meal, and this meal is almost always the morning meal, or breakfast. The custom is almost universal and there is no choice in the matter of fasting; it is more or less compulsory. It should not be so; fasting should be voluntary. In those who undertake the fast

நிறையுடைய நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். 154
நற்குண நிறைவு தன்னிடத்திலிருந்து நீங்காமையை விரும்பினால், பொறுமையைப் பேணிக்காத்து வாழவேண்டும்.

unwillingly and without proper understanding there is hunger. Remember that, if you feel hunger, digestive acids are produced and the fast is broken. You might as well take food. More over it may not be appropriate to fast during all these festivals.

There was a time when I doubted that I would be able to undertake the six-day *Kanda shasti* fast. However, years ago, a calamity proved to be a blessing in disguise. It was just after my marriage. Just as any couple we too had our quota of 'oodal' and 'koodal'. During on of those 'oodal' times, both of us hadn't talked to each other for two full days. At the end I realized I hadn't eaten anything during those two days. I had not felt hunger, in fact not thought of food, for two days. A truth dawned on me. It was a significant realization. If I could fast for two days then I could fast for six. I too could observe *Kanda shasti viratham,* specifically the fasting part of it. The success lies not in the denial of food but in refraining from all thoughts of it. Then brain is prepared and preprogrammed (that is, the brain is told in so many words) not to expect food for the stomach for the next six days and, therefore, not to trigger the formation of chemicals essential for digestion. This is the secret how to fast without experiencing the pangs of hunger.

I discovered that this truth is known to the Vedar (aboriginal hunters). I once had the opportunity of meeting a Vedan (aboriginal hunter) and taking him to my home in the city. The modern conditions did attract his attention. He was quite at home, however he didn't show any attachment. I did ask him whether he alongwith his family, would like to live with us for a good reason that he wouldn't have to go without meals at times like in the jungle. And here anytime you go downstairs to the dining hall you can have food. His reply suprised me. In spite of the comfort here he said he prefers the jungle habitat. He told me that he never felt hungry until he had food in his hands. That is he never thought of eating food until food was in his hands. He knew the secret of fasting and would not suffer the ailments that come from craving for or anticipating food. His wisdom may have been the common heritage of his people.

Fasting rituals should never be compulsory. Fasting rituals should be undertaken only after being understood. But never compulsorily.

The great *Chiththars* are reputed to subsist on very little food. There are the great seers who go on for long periods apparently not taking food. They do not grow thin; they do not show signs of starvation as we lesser mortals would under the circumstances. These great ones have succeeded in arresting the aging process. If they attain *chiththi* at 50 years of age they look as if they are 50 years old even when they reach the age of 100. If *chiththi* is attained at 16 years, they retain the looks of a 16 year old even at 60 years or forever for that matte.

Such *chiththars,* how do they manage not to eat for long periods not showing any signs of hunger, or starvation. They produce 'amirtham' from within the body and that sustains them.

During the *viratham,* the mind is focused on religious observances and due to pre programming the brain does not think of food; the brain is relaxed, as it does not have to cope with processing food for seven days. We are free to listen to, and to see the *chiththam* and the *ambalam* within us. The *Om natham* (Om sound) we hear, we realize is the same sound at the time of creation created matter. we realize that Pillaiyar is the embodiment of the

*If you desire that greatness should never leave, you must preserve in your conduct the exercise of patience.* *154*

*Om natham* arising from the cosmic dance of the almighty. We also realize Kandhan is the embodiment of the light of the almighty. Pillaiyar and Murugan are not different Gods but Siva himself appearing in different forms. A God has no *aathi* (begnning) or *andham* (end). The *Param Porul* has no birth or death.

## Some Undesirable Practices

During the period of *Kandha shasti viratham* many devotees recite "Kandha Sasthi Kavasam". These are verses asking Kandha for protection. In verse after verse, numerous parts of the body are mentioned as requiring protection, but many more parts, and, it must be mentioned, vital parts are left unmentioned. It has been said "Ask, and it shall be given unto you". God always grants you what you ardently desire, so it might be prudent to ask for protection and leave it at that, and Kana will protect your whole self.

Moreover, in reciting "Kanda Shasti Kavasam" the devotees ask for the torture and destruction of *kaala thoothar.* Such infliction or annihilation, if carried out according to your instructions and request, would detract from your current account of merit. Did not some of your wishes, or rather curses, take the following form:

*"Kattu kattu katharidak kattu*
(tie them up, tie them up even as they scream)

*Katti uruttu kaal kai muriya*
(having tied them up roll them about so that their legs and arms break)

*Kuththu kuththu koor vadi velal*
(prick them, prick them with your sharp and resplendent spear)

*Sekku sekku sethil sethlaaka"*

And so on.

In another instance by reciting the Kandha Shati Kavasam you are asking for the diffusion of the *"manaiyil puthaiththa vanjanai",* evil crafts buried in the home compound. At times of distress, many are inclined to believe that evil forces have been set upon them by enemies. Some fear that the cause of all the distress, disunion, misery they are experiencing are due to their enemies having evil crafts buried in home compounds. Surely such things cannot be lying buried in all home compounds of all those who recite the Kandha Shasti Kavasam.

In this instance too, "Ask, and it shall be given unto you" God has to grant your wish. But how could He help to diffuse a buried evil craft when such a thing is not buried. However He is obliged to grant your wish. Prerequisite to fulfill your wish is initially an enemy who will have to bury the evil crafts in the home compound. Only then the evil crafts could be diffused. Imagine the complications.

Until a decade ago, the Thiruchendur Kandha Shasti festival invitation cum programme bulletin printed every year included "Kandha Shasti Kavasam". I explained the consequences to the temple authorities who have since discontinued the practice and, instead, print "Thiruchendur Thiruppugal" and other inestimable hymns in praise of Kandhan.

There is another practice that needs reform. In enacting the *Soora Samhaara Thiruvilayaadal* the actors choose to jolt a live rooster vigorously. I appeal to theose concerned to spare to rooster the pathetic ordeal. No harm should befall any peacock, rooster or for that matter any being and that too while enacting a *Thiruvilayaadal.*

Thiruchthampalam

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 155**

பிறன் செய்த தீங்கைப் பொறுக்காமல் அவனைத் தண்டித்தவரை அறிவுடையோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார். ஆனால் பொறுத்தவரையோ பொன்போல் போற்றி வைத்துக் கொள்வர்.

# சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம்

மட்டுவில் ஆ. நடராசா

உலகில் பல்வேறு மதங்கள் உண்டு. அம் மதங்களை அனுட்டிப்போர் பலருண்டு. ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் மதத்துக்குரிய கடவுளை வணங்குகின்றனர்.

அல்லாவை வணங்குவோர் இஸ்லாமியர். இயேசு கிறிஸ்து நாதரை வழிபடுவோர் கிறிஸ்தவர். புத்தரை வணங்குவோர் பௌத்தர். சிவனை வணங்குவோர் சைவர். சைவம் என்னுஞ் சொல் சிவசம்பந்தமுடையது என்னும் பொருளைத் தரும். இந்து என்னுஞ் சொல் சிவசம்பந்தமுடையது என்னும் பொருளைத் தராது. அதனால் சிவனை முதற்கடவுளாகக் கொண்டொழுகுவோரை இந்துக் கள் என்று கூறுவது பொருந்தாது; சைவசமயிகள் என்று கூறுவதே பொருந்தும்.

சிவனை வணங்குவோரே சைவசமயிகளாத லால், பிறந்திருந்து இறந்து போனவர்களையும் பிறந்திருப்போரையும் வழிபடுவோரைச் சைவசமயி களென்று கூறமுடியாது.

சிவனே மெய்ப்பொருள், வேறு தெய்வங்கள் மெய்த் தெய்வங்கள் அல்ல. அன்னையையும் தந்தையையும் மதிக்கவேண்டும் என்ற கருத்தில் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஔவையார் உபசாரமாகக் கூறியதுபோல, மதிப் புக்குரியவர்களைத் தெய்வமெனப் போற்றுவதும் உபசாரமே ஒழிய உண்மையல்ல.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."**

என்னுந் திருக்குறளும் 'வானுறையுந் தெய் வத்துள் வைக்கப்படும்' என்பதற்கு, "வையத்தானே எனினும் வானின் கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்' எனப் பரிமேலழகர் எழுதிய உரையும் இதற்குச் சான் றாகும். இவ்வுரைக்கு, 'பின் தேவராய் அவ்வறப் பயன் நுகர்தல் ஒருதலையாகலின் தெய்வத்துள் வைக்கப்படும் என்றார்' எனப் பரிமேலழகர் விளக் கங் கூறியிருக்கின்றார்.

தேவராய் அறப்பயன் நுகர்வோர் அதை நுகர்ந்தபின் நுகராதெஞ்சி நின்ற வினைப்பயனை நுகர்வதற்காகத் தேவசரீரத்தினீங்கி வேறு பிறப் பெடுக்கவேண்டி இருக்கும். இவ்வாறு பிறந்திறந்து முற்பிறப்புக்களில் நிகழ்ந்ததை மறந்து வேறு வேறு ஊனுடம்புகளோடு கூடிவாழும் உயிர்கள் பிறர் தம்மை வழிபடுவதை அறியவும் அவ்வழி பாட்டை ஏற்றுத் தம்மை வழிபடுவோருக்கு வரங் கொடுக்கவும் மாட்டா. அதனால் அத்தெய்வங்க ளுக்குச் செய்யும் வழிபாடு பயனற்ற வீண்செய லாகும்.

இத்தெய்வங்களுக்குக் கோயிலமைத்து அக் கோயில்களில் விநாயகர், சுப்பிரமணியர், வயிரவர் முதலிய சிவகுமாரர்களைப் பரிவாரத் தெய்வங் களாக வைப்பது சிவநிந்தனையாகிய மாபெருங் குற்றமாகும்.

தன்னை வழிபடுவோரை அறியவும் அவ்வழி பாட்டை ஏற்றுத் தன்னை வழிபடுவோருக்கு வர மளிக்கவும் பிறப்பிறப்பற்ற முற்றறிவும் முடிவிலாற் றலுமுடைய சிவபெருமானுக்கே முடியும். 'மற்றத் தெய்வங்கள் வேதனைப்படும், இறக்கும், பிறக்கும், மேல் வினையுஞ் செய்யும் ஆதலின் இவையிலா

*(The wise) will not at all esteem the resentful. They will esteem the patient even as the gold which they lay up with care.* *155*

* சுகம் வித்தை ஒன்றுக்கொன்று எதிரானவை சுகம வேண்டுமானாலும் வித்தையை விட வேண்டும். வித்தை வேண்டுமானால் சுகத்தை கைவிட வேண்டும். ஆனால் வித்தை முழுவதும் கற்ற பின் சுகம் தானாக வருவது போல் சுகம் முடீவதையும் அனுபவித்து அலுத்து போனவனுக்கு வித்தை ஒரு போதும் வராது. அதனால் கல்வியும் வித்தையும் ஆரம்பத்தில் சுகத்திற்கு இடைந்தலாக இருந்தாலும் பின்பு அதுவே சுகத்துக்கு காரணமாக இருக்கிறது. ஒருவன் கல்வி கற்கும் போது சுகத்தைப் பற்றி நினைக்கக் கூடாது.

தான் அறிந்தருள் செய்வனன்றே' என்கின்றார் அருணந்தி சிவாச்சாரியார்.

'சிவன் இறந்தான், பிறந்தான் என்று கூறும் வரலாறு ஏதுமில்லை. உயிர் வர்க்கமாகிய சிறு தெய்வங்களுக்குப் பிறந்திறந்த வரலாறுண்டு. அதனால் அத்தெய்வங்களை மெய்த்தெய்வங் களென்று கூறுவதை விட்டுவிடுங்கள்' என்கிறார் திருமூலர்.

**"கூறுமின் நீர்முன் பிறந்திங் கிறந்தமை**

**வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீக்குமின்..."**

என்பது திருமந்திரம் (1822).

பித்துப் பிடித்தவர்கள் தாம் என்ன சொல்லு கின்றார்கள் என்பதை அறியாமல் வாயில் வந்ததை எல்லாம் சொல்வது போல, மயக்க உணர்வோடு கருத்துக் கூறுவோர் தெளிவின்றிப் பொருத்தமற்ற பேச்சுக்களைப் பேசுவது போல, சில நோயாளிகள் நோய் காரணமாகப் பிதற்றுவது போல, சிவனடியார் வாயில் வந்ததையெல்லாம் பேசமாட்டார். சிவனு டைய திருப்பாதங்களை நியமந் தவறாது போற்றிப் புகழ்ந்து பாடும் பழக்கங் காரணமாக அவர்களு டைய வாய் அவர்களை அறியாமலே எந்நிலை யிலும் அவன் புகழ் பாடும். சிறுதெய்வங்களை யுந் தொழுவோர் இந்நிலையை எய்தமுடியாது. சிவனை மாத்திரம் வணங்குவோரே இந்நிலை எய்துவர். சம்பந்தப் பிள்ளையார் பெறற்கரும் இப்பேற்றைப் பெற்றவர். அதனால் அவர் சிவனை நோக்கி,

**"பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்**

**அத்தாவுன் அடியலால் அரற்றா தென்நா...."**

என்று கூறினார் (திருவாவடுதுறை 2-10).

சிவனடியார் சிவன் புகழைப் பாடிப் பரவுவ தோடமையாது, பிறர் சிறுதெய்வங்களின் புகழ் பாடுவதைக் கேட்கவும் மாட்டார்.

**"பூவுந்நீரும் பலியுந் சுமந்து புகலூரையே**

**நாவினாலே நவின் றேத்த லோவார், செவித் துளைகளால்**

**யாவுங் கேளார் அவன் பெருமையல்லால் அடியார் கள்தாம்..."**

(திருப்புகலூர் 2-4) என்கின்றான் சம்பந்தன்.

**"பற்றி நின்ற...**

**உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்**

**உன்னையல் லாலொரு தெய்வ முள்கே னென்றும்**

**புற்றரவக் கச்சார்ந்த புனிதா வென்றும்**

**பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே"**

என்கின்றார் அப்பர். (திருவாரூர் 6-7)

**"பேணா தொழிந்தேன் உன்னையல் லாற்பிற தேவரை...."**

(திருப்புக்கொளியூர் அவிநாசி 7-8) என்றும்

**"மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன்..."**

(திருவொற்றியூர் 7-7) என்றும் பாடுகின்றார் சுந்தரர்.

* மஞ்சள், குங்குமம், ஆடு, பசு, வீணை, சந்தனம், தேன், நெய், கண்ணாடி, தாமிரப் பத்திரம், சாளக் கிராமம், கோரோசனை, வலம்புரிச்சங்கு இவைகளை வீட்டில் இருந்தால் பணவசதி தானாகவே வரும் எனபதோடு மகாலக்ஷ்மி நித்யம் வாசம் செய்வாள். (லேலே கூறப்பட்ட எல்லாப் பொருட்களும் எல்லோரி டமும் இருக்காது. ஒவ்வொன்றாக சேர்க்க முயற்சித் தால் நிச்சயம் முடியும். மனிதனால் ஆகாதது எதுவும் இல்லை.)

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்.** 156

பிறன் செய்த தீங்கைப் பொறுக்காமல் தண்டித்தவர்க்கு உண்டாவது அவ்வொரு நாளைய இன்பமே. ஆனால் பொறுத்தவர்க்கோ உலகம் அழியும் வரையும் புகழுண்டு.

மாணிக்கவாசக சுவாமிகள், **"வெருவரேன்... மற்றோர் தேவர் எத்தேவரென்ன அருவராதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே"** என்பது போன்ற முடிவுகளைக் கொண்ட அச்சப் பத்தைப் பாடியது மட்டுமன்றி, சைவ சமயிகள் பிறதெய் வங்களை வழிபடக் கூடாதென்பதை மேலும் பல் வேறிடங்களில் வலியுறுத்தியிருக்கிறார்.

இவ்வாறு நால்வர் நாயன்மார்களும் கூறுவதால் அவர்கள் சமய சமரசத்துக்குக் குழிதோண்டு கின்றார்களென்று யாரும் குறை கூறக்கூடாது. சிவனலாற் தெய்வமில்லை, அதனாற் பிறதெய் வங்களை வணங்கக் கூடாதென்று கூறுஞ் சித் தாந்த சைவம். அதேமாதிரியான அறிவுரையைத் தான் மற்றச் சமயத்தவர்களுக்குங் கூறுகின்றது. அல்லாவை வணங்குவோர், அந்தோனியாரை வணங்கலாமென்றோ, கிறிஸ்தவர் புத்தரைப் போற்றலாமென்றோ சைவசமயம் கூறவில்லை. ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயநெறியில் உறுதியாக நிற்கவேண்டுமென்பது சைவசித்தாந் தங் கூறும் அறிவுரை.

**"தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை**
**அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி**
**எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே**
**மெய்த்தண்டஞ் செய்வது அவ்வேந்தன் கடனே."**

(247) என்கின்றார் திருமூலர்.

ஒருவர் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். அவர் அந்தச் சமயக் கோட்பாட்டுக்கு அமைந்து நடக்கவேண்டும். அரசன் ஒவ்வொரு சமயத்தவரையும் அவரவர் சமய விதிகளுக்கு அமைவாக ஒழுகச் செய்யவேண்டும். அவ்வாறு ஒழுகாதோருக்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அரசதண்டனை கிடைக் காவிட்டால், மறுமையில் அதற்குரிய தண்டனை யைத் தான் சொன்ன ஆகம விதிக்கமைவாகச் சிவனே கொடுப்பான் என்பது இந்தத் திருமந்தி ரத்தின் கருத்து. இந்நாட்டரசு இக்கடமையைச் சரியாகச் செய்திருந்தால் இன்று இந்நாட்டுக்கு இக்கதி ஏற்பட்டிருக்காது.

**"புறச்சமய நெறி நின்றும் அகச் சமயம் புக்கும்...... சைவத்திறத் தடைவர்"** என்கின்றார் அருணந்தி சிவாச்சாரியார். எவரும் எந்தச் சமயத் தையும் அனுட்டிக்கலாம். ஒவ்வொருவ ருக்கும் தாம் விரும்பிய சமயத்தை அனுட்டிக்கும் உரி மையுண்டு. இதுதான் சைவசமயங் கூறும் சமய சமரசம்.

சிவனை வழிபடுவோர் சைவ சமயத்தவர். கிறிஸ்து நாதரை வழிபடுவோர் கிறிஸ்தவ சம யத்தவர். அல்லாவை வணங்குவோர் இஸ்லாமியர். இதை எல்லாச் சமயத்தவரும் ஒப்புக்கொள்ளுகின் றனர். அப்படியானால், சிவனையும் கிறிஸ்துவை யும் வணங்குபவர் எந்தச் சமயத்தவர்? அவர் சைவசமயியா! கிறிஸ்தவரா! உண்மையைச் சொன்னால் அவர் எந்தச் சமயத்துக்கும் தகுதி யற்றவர். அவர் அம்மையில் சிவன் சொன்ன ஆகம விதிப்படி தண்டனைக்குரியவர் ஆவார்.

இனி, மேலே கூறப்பட்ட விடயந் தொடர்பாக, நல்லை நகர் ஆறுமுகநாவலர் அவர்களின் கருத்தென்ன என்பதைப் பார்ப்போம்.

"சைவ சமய குருமார்களும் சைவ பண்டி தர்களும் சிவாகமப் பிரமாணங் கொண்டு வாதித்து உண்மையை நிறுத்தக் கடவர்கள். உண்மை யென்று நிறுத்தப் பட்டவைகளைச் சைவசமயிகள்

* மனநிம்மதி தருவதும், சந்தோஷத்தை கொடுப்பதும், பாபத்தை நீக்கி புண்ணியத்தை தருவதும் தர்மம் ஆகும். தர்மம் என்றும் அழியாது. மனிதன் இறந்த பின்பு காதில் உள்ள கடுக்கனையும் கையில் உள்ள மோதிரத்தையும் கழட்டி வைத்துக் கொண்டு தான் மயானத்துக்கு அனுப்புகின்றோம். ஆனால் அவன் செய்த தர்மத்தை எவராலும் கழற்ற முடியாது.

* வேதம் அறிந்த பிராமணர், வயது அதிகமான தாயாதிக்காரர், வசதியுடன் வாழ்ந்து கெட்டுப் போன கிரஹஸ்தன், ஜோதிடர், வைத்தியர் இவர்களுக்கு தன் மனத்தால், வாக்கால், பொருளால் உதவி செய்வது பேன்ற புண்ணியம் எதுவும் இல்லை.

*The pleasure of the resentful continues for a day. The praise of the patient will continue until (the world) passes away.* 156

எல்லாருங் கைக்கொண்டு நடக்கக் கடவர்கள். பொருளாசை கொண்டும், அதிகாரத்துக்குப் பயந்தும், வழக்கம் வழக்கமென்று நழுவியும் சிவாகம விரோதஞ் செய்பவர்கள் சிவபெருமானுடைய சாபத்துக்கு ஆளாவார்கள். அவர்கள் சைவசமயப் பற்றுச் சற்றுமற்று கிறிஸ்து சமயப் பற்று முற்று முற்று நடப்பதே மிகநலம். அதனாற் பிறருக்குத் தீங்கு விளையாது..” (இலங்கைநேசன் 1 ஆம் புத்தகம் இல. 13).

இவ்வாறு கூறிய நாவலர், “மனிதர்களைப் போலவே பிறந்தும் இறந்தும் உழலுகின்ற தேவர்களைப் பரம் என்று கொள்வது சைவ சமயத்துக்கு முற்றும் விரோதம்” என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருக்கிறார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இரண்டாவது பத்திரிகையில் “செட்டிச்சியும் புறச்சமயத்தவளுமாகிய கண்ணகி பரம்பொருள் எனவும் விநாயகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் இருவரும் அவளிற்றாழ்ந்தவர்கள் எனவும் மயங்கி அவளுக்குக் கோயில் கட்டுவித்து அவ்விருவர் விக்கிரகத்துக்கும் நடுவே அவர் விக்கிரகந் தாபித்து வழிபடும் அதிபாதகர்களும் அவளுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்து அவளெச்சில் புசிக்கும் அதிபாதக சிரோமணிகளாகிய......... அவர்களை நமஸ்கரித்துங் கும்பிட்டும் அவர்களுக்குத் தக்ஷிணை கொடுத்தும் அவர்களைக் கொண்டு தீக்ஷை, அந்தியேட்டி, சிரார்த்தம், கலியாணச் சடங்கு, விரதோத்தியாபனம் முதலியவற்றையும் சிவாலய, விக்கினேசுராலய சுப்பி மணியாலயப் பிரதிட்டை, பூசை, திருவிழாக்களையுஞ் செய்விக்கும் நீங்களுமா சைவசமய நிந்தகர்கள்? உங்களுக்கு இரங்கி இவையெல்லாம் பாவம் பாவமென்று போதிக்கும் நாமும் நம் போல்வார்களுமா சைவசமய நிந்தகர்கள்? விசாரியுங்கள்....” என எழுதியிருக்கின்றார்.


மேலே தரப்பட்ட நாவலரின் கூற்றுக்கள் நால்வர் நாயன்மார்களதும் திருமூலரதும் கருத்துக்களையே வலியுறுத்துகின்றன. உண்மை எப்பொழுதும் உண்மையாகவே இருக்கும். அது மாறமாட்டாது. ஆனாலும் உள்ளதை உள்ளபடி எடுத்துரைக்க எல்லோரும் முன்வருவதில்லை. நாவலர் தான் வாழ்ந்த காலத்தின் தேவை காரணமாக உள்ளதை உள்ளபடி எடுத்துரைத்தார். அவர் கூறிய கருத்துக்களை மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டியது இக்காலத்தின் முக்கிய தேவையாகும்.

நாவலரைப் போற்றனித்து நின்று இன்றைய தேவையை நிறைவு செய்ய எவராலும் முடியாது. அதனால் சைவ சமயிகள் பலர் கூடியாவது எமது தேவையை நிறைவு செய்யவேண்டும். அதற்கு முதற்படியாக, ‘சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்’ என்னும் அப்பர் வாக்கைப் போற்றுவோம்.

* எவன் ஒருவன் தன்னை அழைக்காமல் இருக்கும் திருமண வீட்டுக்குச் செல்கிறானோ, எவன் குலத் தெய்வம் அருகிலிருந்தும் வணங்காமல் இருக்கிறானோ எவன் தன் இரகசியங்களை பிறர் கேளாமல் இருக்கும் போது சொல்கிறானோ, எவன் வசதி இருந்தும் பிதுர்களை திருப்திப் படுத்தவில்லையோ, எவன் நல்ல குணம் உள்ளவனை சினேகம் செய்துகொள்ளவில்லையோ, எவன் சத்ருவை நம்பிக்கொண்டு சினேகிதனை வெறுக்கிறானோ, எவன் தனது கலகலப்பாக உள்ள மனைவி மீது வீண் சந்தேகப்படுகிறானோ, எவன் உடனடியாக செய்யவேண்டிய காரியத்துக்கு தாமதிக்கிறானோ, எவன் படிக்காமல் கர்வம் கொள்கிறானோ, எவன் சோம்பேறியாக இருந்து கொண்டு சம்பாதிக்க ஆசைப்படுகிறானோ, குடும்ப நல கௌரவத்தை எவன் அழிக்க முற்படுகிறானோ, எவன் தனக்குப் பக்கபலமாக உள்ள பலசாலியைத் துவேஷம் செய்கிறானோ, எவன் நாஸ்தீகவாதம் புரிபவனிடம் சினேகம் கொள்ளுகிறானோ எவன் குருபக்தியை தன் இஷ்ட காரியத்திற்குப் பயன்படுத்துவானோ, அவனவன் எல்லாம் தான் விரித்தவலையில் தானாக விழுந்து மீள முடியாமல் தவிப்பவர்கள் ஆவார்கள்.

திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று. 157

செய்யத்தகாத கொடியவற்றைத் தனக்குப் பிறர் செய்த போதிலும், அதனால் அவர்க்கு வரும் துன்பத்திற்காக நொந்து, அறம் அல்லாதவைகளைச் செய்யாதிருத்தல் நல்லது.



# மகேசுர வடிவங்கள்

## (64 சிவவடிவங்கள்)


1. இலிங்க மூர்த்தி
2. இலிங்கோத்பவ மூர்த்தி
3. முகலிங்க மூர்த்தி
4. சதாசிவ மூர்த்தி
5. மகாசதாசிவ மூர்த்தி
6. உமாமகேச மூர்த்தி
7. சுகாசன மூர்த்தி
8. உமேச மூர்த்தி
9. சோமாஸ்கந்த மூர்த்தி
10. சந்திரசேகர மூர்த்தி
11. விருஷபாரூட மூர்த்தி
12. விருஷபாந்திக மூர்த்தி
13. புஜங்கலளித மூர்த்தி
14. புஜங்கத்ராஸ மூர்த்தி
15. சந்தியா நிருத்த மூர்த்தி
16. சதாநிருத்த மூர்த்தி
17. சண்டதாண்டவ மூர்த்தி
18. கங்காதர மூர்த்தி
19. கங்கா விசர்ஜன மூர்த்தி
20. திரிபுராந்தக மூர்த்தி
21. கல்யாண சுந்தர மூர்த்தி
22. அர்த்த நாரீஸ்வர மூர்த்தி
23. கஜாயுக்த மூர்த்தி
24. ஜ்வராபக்ன மூர்த்தி
25. ஸார்த்தூலஹர மூர்த்தி
26. பாசுபத மூர்த்தி
27. கங்காள மூர்த்தி
28. கேசவார்த்த மூர்த்தி
29. பிட்சாடன மூர்த்தி
30. சிம்ஹக்ன மூர்த்தி
31. சண்டேசானுக்ரஹ மூர்த்தி
32. தட்சிணா மூர்த்தி
33. யோகதட்சிணா மூர்த்தி
34. வீணாதர தட்சிணா மூர்த்தி
35. காலாந்தக மூர்த்தி
36. காமதகன மூர்த்தி
37. லகுளேஸ்வர மூர்த்தி
38. பைரவ மூர்த்தி
39. ஆபதுத்தாரண மூர்த்தி
40. வடுக மூர்த்தி
41. க்ஷேத்திரபால மூர்த்தி
42. வீரபத்ர மூர்த்தி
43. அகோர மூர்த்தி
44. தக்ஷயக்ஞஹத மூர்த்தி
45. கிராத மூர்த்தி
46. குருமூர்த்தி மூர்த்தி
47. அச்வாரூட மூர்த்தி
48. கஜாந்திக மூர்த்தி
49. ஜலந்தரவத மூர்த்தி
50. ஏகபாதத்ரி மூர்த்தி
51. த்ரிபாதத்ரி மூர்த்தி
52. ஏகபாத மூர்த்தி
53. கௌரிவரப்ரத மூர்த்தி
54. சக்ரதான மூர்த்தி
55. கௌரிலீலாசமன்வித மூர்த்தி
56. விஷாபஹரண மூர்த்தி
57. கருடாந்திக மூர்த்தி
58. பிரம்ம சிரஸ்சேத மூர்த்தி
59. கூர்மஸம்ஹார மூர்த்தி
60. மத்ஸ்ய ஸம்ஹார மூர்த்தி
61. வராஹ ஸம்ஹார மூர்த்தி
62. பிரார்த்தனா மூர்த்தி
63. ரக்தபிக்ஷப்ரதான மூர்த்தி
64. சிஷ்யபாவமூர்த்தி மூர்த்தி

*நன்றி:* ***இலிங்கோத்பவர்***

*Though others inflict injuries on you, yet compassionating the sorrow (that will come upon them) it will be well not to do to them anything contrary to virtue.* 157

# அர்த்த நாரீசுவர தத்துவம்

அறங்காவலர் சிவநெறிச் செம்மல்
சமாதான நீதிவான் தர்மஜோதி
டாக்டர். தி. செந்தில்வேள்



பெண் விடுதலை எனப் பொங்கி யெழும் பேரெழுச்சியைப் பரவலாகப் பல நாடுகளிலும் பார்க்கிறோம் இன்று.

மேனாடாம் கனடாவில் உலகச் சைவ மாநாடு நடக்கின்ற இந்தச் சமயத்தில் ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானம் என்கின்ற கொள்கை எமது சமயத்தில், சமயம் உண்டான சமயத்திலேயே உண்டென்பதை இப் பேரவையிலே சிந்திக்கச் சரியான சமயம் தந்த சான்றோர்க்கு நன்றி.

ஆண்களோ பெண்களோ ஒருவருக்கொருவர் குறைந்தவர்கள் அல்லர். மதிப்பிலே மங்கைய ருக்கும் சரிபங்கு உண்டு என்பதை உணர்த்த அன்றோ மங்கையைப் பாகங்கொண்டு மாதொரு பாகன் என்னும் பேரும் கொண்டான் ஆண்டவன்.

## ஆதி பகவன் முதற்கே உலகு

உலகின் பொதுமறை என்று போற்றப்படும் அளவிற்கு ஏற்றமிகு செய்திகள் எல்லாம் உலகெலாம் ஏற்கும்படி தந்த திருவள்ளுவர், திருக்குறளின் முதல் பாடலிலேயே ஆதிபகவன் முதற்கே உலகு என்றாரே. முழுமுதற் கடவுளைப் பகவன் என்று தனியே சொல்லாமல் அம்மை அப்பனாகவே கண்டு "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு," என்று திருக் குறளின் முதல் அதிகாரத்தின் முதற் பாடலைத் தொடங்கிய பெருஞ் செய்தியை இங்கே தொட்டுக் காட்டுகிறேன்.

எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாய் இருப்பது போல் உலகத்துக்கெல்லாம் கடவுள் முதலாய் இருக்கிறார் என்றே இதுவரை இக்குற ளுக்குப் பொருள் சொன்னார்கள்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் இப்பொருள் வைத்தா பாடினார். மனம் ஏனோ ஒப்ப மறுக்கிறது. கடுகையும் ஏன் அணுவைக் கூடத் துளைத்து ஏழு கடலையும் அதற்குள் புகுத்தி அடக்கும் ஆற்றல் உள்ளவர் அல் லவா வள்ளுவர். அதாவது, அவரது ஈரடிக் குற ளுக்குள்ளே ஏழு கடலையும் மிஞ்சும் கருத்துப் பெருக்கு இருக்கும் என்பது தானே. அறிவதற்கு ஆவல் மிகுகிறது.

உமையும் சிவனும் இரண்டா, ஒன்றா? சக்தியும் சிவமும் வேறானாலும் இரண்டும் இணைந்தபோது தான் உலகங்கள் உண்டாயின. இரண்டும் இணைந்திருக்கும் வரை தான் உலகங்கள் இயங்கும். பிரிந்தால் அண்ட பகிரண்டமெல்லாம் அடங்கி ஒடுங்கும் பேருழிக் காலம். ஆதியும் பக வனும் இணைந்த போதுதான் உலகங்கள் உண் டாயின என்பதற்காகவே ஆதிபகவன் முதற்றே உலகு என்றார்.

இது எது போல என்றால் 'அ' எழுத்துக்களுக்கு முதலெழுத்து ஆனாலும் அது 'க்' என்னும் மெய் யெழுத்துடன் இணைந்தபோது தானே மேலும் எழுத்து உண்டாயிற்று.

'அ' என்னும் முதலெழுத்து 'க்' என்னும் எழுத்துடன் இணைந்த போது எப்படி மேலும் எழுத்து உண்டாக ஏதுவாயிற்றோ அது போல் சக்தியும் சிவமும் இணைந்தபோதுதான் உலகு உண்டாயிற்று என்னும் பெருஞ்செய்தியை உள் ளடக்கிய முதற் பாடலே

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். 158
செருக்கினால் தனக்குத் தீயவை செய்தவரை, தாம் தம் பொறுமையினால் வென்றுவிட வேண்டும்.

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு."**

சக்தி பெரிதா சிவம் பெரிதா என்ற சர்ச்சைக்கே இடமில்லை. இரண்டும் இணைந்து செயற்பட்டால் மட்டுமே அனைத்தும் இயங்கும். இதிலே ஆண் பெரிதா, பெண் பெரிதா என்ற சர்ச்சைக்கு இடமேது? சக்தி இன்றிச் சிவம் இயங்காது. சிவம் இன்றிச் சக்தி இயங்காது. ஆணும் பெண்ணும் மதிப்பிலே ஒருவருக்கொருவர் குறைந்தவரே அல்லர். ஆணுக்கும் பெண்ணுக்கும் சமூகத்திலே சம பங்கு உண்டு என்பதை உணர்த்துவது சைவ சமயம்.

## இறைசக்தியை இகழ்ந்து தன் சக்தியை இழந்தமை

பிருங்கி முனிவர் கதையிலே சிவனை மட்டுமே வலம் வருவேன். உமை சிவன் உடன் இருந்தாலும் உமையை மதியேன் என்று பிடிவாதம் பிடித்தாரல்லவா! நடந்தது என்ன? அவரால் நடக்கக்கூட முடியாது போயிற்று. அனைத்துச் சீவராசிகளிலும் ஆதியும் பகவனும் ஆண் பக்கமும் பெண் பக்கமுமாக இணைந்திருப்பதாலேயே இயக்கம் என்பதை உணராத பிருங்கியின் இடப் பக்கத்திருந்து சக்தியம்சம் அகல்கின்றது; தளர்கிறார்; தள்ளாடுகிறார்; தடக்கி வீழ்கிறார். உடலில் இடப்பக்கம் நொந்தால் நின்றவன் கிடப்பது இயற்கை தானே! தவறுணர்கின்றார்; திருத்துகிறார் தனது கொள்கையை. காலம் தாழ்த்திய ஞானம் என்பதனால் உதவிக்கு வருகிறது ஓர் ஊன்றுகோல். அதுவும் சக்தியின் கருணையால்!

## முந்தானை

சேலை அணிகின்றபோது பெண்கள் முந்தானையை அப்படியே அள்ளி எடுத்துத் தம் இடப் பக்கத் தோள் மேல் போர்த்துவார்கள். அது என்ன சில பெண்கள் இடப்பக்கம் போர்த்தினால் இதரப் பெண்கள் வலத்தோளில் போர்த்த வேண்டியதுதானே? அது ஏன், சொல்லி வைத்தாற்போல் அனைத்துப் பெண்களும் இடப் பக்கமாகவே போர்த்தும் வழக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டும்? வலங்காட்டி இடம் மறைத்த மார்மம் என்ன?

அங்கேதான் ஒரு பேருண்மை போர்த்தப்பட்டிருக்கின்றது.

ஆசாரம் காக்கும் குலப் பெண்கள் இடத் தோளை மட்டுமன்றி இடது காலைப் பாதம் வரை மூடி மறைத்துவிட்டு தமது வலது பாதம் முழுவதும் தெரியும் படியாக வலது காலின் மேல் சேலையைச் சற்றே உயர்த்திக் கட்டியிருப்பார்கள். பேருண்மை இங்கு சற்றே வெளிப்படுகிறது.

## மூக்குத்தி

ஆரணங்குகளுக்கு அழகு சேர்க்கும் ஆபரணங்களுள் அற்புதமாக அமைவது மூக்குத்தி. பாரம்பரியம் பேணும் பெண்களெல்லாம் மூக்கின் இடப்பக்கமே மூக்குத்தி அணிவார்கள்.

## உத்தரீயம்

ஆண்கள் உத்தரீயம் தரிக்கும் போது அதனை இடத்தோளின் மேலிருந்தே அணிவது பாரம்பரியம்.

உடை உடுத்துவது என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது அல்லவா. ஆணும் உடை உடுத்துவதுதான். பெண்ணும் உடை உடுத்துவதுதான். ஆனால் அதில் இருபாலாருமே உடலின் இடப் பக்கத்தை மறைத்து உடுத்துகிறார்களே, காரணம் என்னவென்று எண்ணத் தோன்றுகிறதல்லவா.

ஆணோ பெண்ணோ அனைவரிடத்திலும் ஆண் பெண் குணாதிசயங்கள் உண்டு. உடலிலே கூட இருபாலரிடமும் இருபாலுக்குமுரிய ஆண் பெண் அவயவ அடையாளங்களைக் காணலாம். பெண்களுக்குப் பெண் தன்மை தரும் மூல ரசாயனங்களை மூளை உற்பத்தி செய்யத் தூண்டுவதும் ஆண்களில் ஆண் தன்மை தரும் மூல ரசாயனங்களை அதிகமாகச் சுரப்பதும் இயற்கை. பெண்களுக்குப் பெண்மை கூடியும், ஆண்களுக்கு ஆண்மை கூடியும் காணப்படுவது கண்கூடு.

*Let a man by patience overcome those who through pride commit excesses.* 158

செயற்கையாக மாற்றங்களைச் செய்யவும் இயலும். ஆயினும் இயற்கைக்கு மாறான மாற்றங்கள் இடும்பையே தரும்.

### சால்வையும் சேலை முந்தானையும்

சக்தியும் சிவமும் இரண்டும் இரண்டறக் கலந்ததே ஆதிமூலம் என ஆதி முதலிலேயே அறியத் தந்தது சைவ சமயம். உமை இடப் பாகமாகவும் சிவம் வலப் பாகமாகவும் நாரீமணி ஈசுவரியும் பரமேசுவரனும் இணைந்து காட்டும் திருக்கோலமே அர்த்தநாரீசுவர திருமேனி.

பெண் பாகம் இடப்பாகம் என்பதாலேயே சக்தியின் பக்கத்தை மேலிருந்து கீழ் வரை மறைத்து உடுத்தும் வழக்கம் மரபானது.

ஆடைகள் அணிவதிலே மட்டுமா ஆபரணங்கள் அணிவதிலும் அர்த்தமுள்ள தத்துவங்கள் அநேகம்!

பெண் தம்முடலில் இடப்பாகத்தை இயன்ற வரை மறைத்துத் துணி அணியும்போது அங்கே பெண்மையின் பேரழகு ததும்புகிறது. பெண்களுக்கு மட்டுமே பிரத்தியேகமான மூக்குத்தியைப் பெண்கள் இடது மூக்கில் அணிந்திருக்கும்போது அவ்வணிகலன் பெண்ணழகுக்கே அழகு சேர்க்கிறது. இலட்சுமீகரம் அங்கே பளிச்சிடுகின்றது.

மாறாக இடது புறத்தை வெளிப்படுத்தி வலது புறத்தோளில் முந்தானை அணிவதும், மூக்கின் வலது பக்கமாக மூக்குத்தி அணிவதும் பெண்மைக்கு மங்கலம் தராது. மாறாகப் பெண்மை மங்கவும், அவர்களில் ஆண் குணாதிசயங்கள் ஓங்கவும் வழி செய்யும்.

ஆண்களானாலும் இடது தோளில் இடவேண்டிய சால்வையை இடம் மாறி வலம் போட்டால் அது அவர்களது ஆண்மை மங்கவும், அவர்களில் பெண் குணாதிசயங்கள் ஓங்கவும் வழி செய்யும்.

### தனித்தனியே பெயர் பெறும் ஆண் பெண் அணிகலன்கள்

துணிகளிலே, பெண்கள் அணியும் துணி சேலை என்றும், ஆண்கள் அணிவது வேட்டி சால்வை என்றும் பெயர் பெறுமாற் போல் ஆபரணங்களும் வெவ்வேறு பெயர்கள் பெறுவன.

பெண் பூ ஆரம் சூடினால் அது **மாலை** எனப் பெயர் பெறும். ஆண் பூ ஆரம் சூடினால் **தார்** எனச் சிறப்புறும்.

திருவெம்பாவை பாடும் பாவையர் அமுதனைப் பாடும் போது சூழ்கொன்றைத் தார் பாடி என்பார். பாடுந் தோறும் அமுதூறும் திருவாசகத்தில் தித்திக்கும் ஓர் பாடல்.

*காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்*
*கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்*
*சீதப்புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி*
*வேதப் பொருள் பாடி அப்பொருளாமாபாடிச்*
*சோதி திறம்பாடிச்* ***சூழ்கொன்றைத்தார் பாடி***
*ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி*
*பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்*
*பாதத்திறம் பாடி ஆடேலோர் எம்பாவாய்.*

ஆண்கள் காலிலே அணிவது **வீரக்கழல்.** பெண்கள் பெருமையுடன் அணிவது **காற்சிலம்பு.** கோணமாமலைப் பதிகத்தை அக்கரையில் இருந்து பாடியபோது சம்பந்தருக்கு ஆழி அலை ஓசையும் கேட்கிறது. கழல் அரவமும் கேட்கிறது. கூடவே காற்சிலம்பு அலம்பும் ஓசையும் கேட்கிறது மாதுமையாளைப் பாகமாய்ப் புணர்ந்த வடிவினர் கோணமாமலையார், வலதுகாலில் கழல் பூண்டிருக்கிறார், இடதுகாலில் சிலம்பு அணிந்திருக்கிறார்.

*நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்*
*நிமலர் நீறணி திருமேனி*
*வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த*
*வடிவினர் கொடியணி விடையர்*
*கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்*
*அளப்பரும் கனமணி வரன்றிக்*
*குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்*
*கோணமாமலை யமர்ந்தாரே.*

**துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்.** 159

நெறி கடந்து நடப்பவரின் வாயில் வரும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர், (இல்லறத்தில் வாழ்ந்தாலும்), துறவியரை விடத் தூய்மையுடையவர் ஆவர்.

உழலும் வினை போகவேண்டுமா. வாருங்கள் இடை மருதூருக்கு. மருதூர் மேவிய பெருமான் மகாலிங்கேசுவரர் எனப் பெயர் பொலிபவர். அது என்ன எத்தனை கோயில் இருக்க மருதீசர் மட்டும் மகாலிங்கேசுவரர் எனப்பட வேண்டும். தில்லை அம்பலம் பேரம்பலம் தான். அப்படியானால் மருதீசரை ஏன் மகாலிங்க ஈசுவரர் என்று சொல்ல வேண்டும். தில்லையிலே அது நர்த்தன சாலை எல்லோ. நர்த்தன மண்டபம் தில்லை என்றால் தில்லைக்குரிய மூலவர் இடை மருதூரின் மகாலிங்கர். விண்ணிலே இருந்த வண்ணம் பார்த்தால் சிதம்பரத்தையும் இடைமருதூரையும் ஒரே கோயிலாக இணைத்துக் காட்டும் ஒரு பெரிய ஆலய அமைப்பு வண்ணம் அழகுறத் தெரியும்.

*'இடைமருதில் சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தார்'* என்றும்

*'இடை மருதில் பொருந்திய கோயிலே கோயிலாகப் பொலிந்தார்'* என்றும்

அழுத்தமாக இடைமருதுக் கோயிலே கோயில் என்று ஐயமறச் சொல்வதை அவதானிக்க வேண்டுகிறேன்.

பண்ணின் மொழி சொல்லி விண்ணைத் தமதாக்கிய தமிழ்ஞான சம்பந்தர் இடைமருதூர் இறைவன் மீது பாடிய ஈரடிக் குறளில்,

**"கழலுஞ் சிலம்பார்க்கும் எழிலார் மருதரைத்**
**தொழவே பேணுவார்க் குழலும் வினை போமே."**

என்று சிவபாக வலக் காலில் கழல் இயற்றும் ஓசையும், சக்தியாக இடக்காலில் சிலம்பு ஆர்க்கும் ஓசையும் கேட்கும் திறம் பாடுகிறார்.

சிவன் உமைக்குச் சரிபாகந் தந்தான், சரிபாகந் தந்தான் என்று சொல்கிறோமே, கண்டவர் யார்?

மங்கையைப் பாகங் கொண்டான் மாதொரு பாகன் என்று பேருங் கொண்டான் ஆண்டவன் என்று சொல்கிறோமே.

விண்டவர் யார்?

மூவரும் தேவரும் கண்டறிய அரிய எம்பிரானை நேரில் கண்டு எண்ணுதற்கரிய பெருந் தொகைத் தேவாரங்களைப் பாடிய திருஞான சம்பந்தர் தான் பாடிய முதற்பாட்டைத் தோடுடைய செவியன் என்று தொடங்கியது சிந்திக்க வைக்கின்றது.

சீகாழித் திருக்குளத்தின் படிக்கட்டில் மூன்று வயதுக் குழந்தையை இருத்திவிட்டு நீரில் இறங்குகின்றார் சிவபாதவிருதயர். ரிக் வேதத்தில் அகமர்ஷணம் என்றொரு சூக்தம் வருகிறது அல்லவா. ரிக் வேதத்தில் பத்தாவது மண்டலத்தில் நூற்றுத்தொண்ணூறாவது சூக்தம். இந்தச் சுலோகத்தை மூன்று தரம் செப்பி மூச்சடக்கி நீரில் மூழ்கி இருக்கின்ற வேளை தந்தையைக் காணாது தவிக்கின்றது பிள்ளை. அப்பா அப்பா என்று கதறியது. நீரினுள் மூழ்கி இருக்கும் அப்பாவுக்குக் அது கேட்கவில்லை. வேறொருவரும் வரவும் இல்லை.

கண்ணீர் தாரை தாரையாகச் சொரிய, எந்த அம்மை அப்பனைக் காண ஆலயம் வந்ததோ அக்கோயில் விமானத்தைப் பார்த்தபடி அம்மே அப்பா என ஏங்கி அழுதது.

அம்மே அப்பா என்று வாயார அழைத்தால் வாராதிருப்பாரோ. உலக மாதாவாகிய உமையன்னையே முன் வந்து தன் பொங்கு கொங்கையில் சுரக்கின்ற பாலினைப் பொற்கிண்ணத்தில் ஏந்தி ஆளுடைப் பிள்ளையாருக்கு அருந்தக் கொடுத்து அன்பு காட்டி மறைந்ததும் இடபாரூடராக இறை பாகராகக் காட்சி கொடுக்கிறார். எம்பெருமான் கதை கேட்ட அப்பனுக்கு, அப்பனை வர்ணிக்கின்ற அழகைப் பாருங்கள். உலக அப்பனுக்கு உலகத்துக்கே அப்பனை அடையாளம் காட்டுகின்றார் அழகு தமிழில் ஞானப்பால் உண்ட திருவாயால்.

*தோடுடைய செவியன் விடையேறியோர்*
*தூவெண்மதி சூடிக்*
*காடுடைய சுடலைப் பொடிபூசி*
*என்னுள்ளங் கவர் கள்வன்*
*ஏடுடைய மலரான் முன்னைநாள் பணிந்து*
*ஏத்த அருள் செய்த*
*பீடுடைய பிரமாபுரம் மேவிய*
*பெம்மான் இவனன்றே.*

*Those who bear with the uncourteous speech of the insolent are purer than ascetics.* 159

அப்பா, அப்பா, அதோ விடை ஏறி இருக்கிறாரே, சுடலைச் சாம்பலைப் பூசி இருக்கிறார் அல்லவா. என் உள்ளம் கவர்ந்த கள்வன் இவனே என்று சொல்ல வந்தவர் அதற்கு முதலிலேயே தோடுடைய செவியன் என்றாரே, தோடு என்பது பெண்கள் மட்டுமே அணியும் காதணி அல்லவா. ஆண்கள் கடுக்கனோ குண்டலமோ அணிவது தானே வழக்கம். வழக்கம் என்பதால் கடுக்கனோ குண்டலமோ அணிந்திருந்தால் அதைச் சுட்டிக் காட்டவோ, அடையாளமாகவோ சொல்ல வேண்டியதில்லை. உலக வழக்கத்திற்கு மாறாக ஒரு காதில் குண்டலமும் மறு காதில் தோடும் அணிந்திருந்த காரணத்தால் தான் தோடுடைய செவியன் என்றார்.

அம்மையின் பாகத்தில் தோடு அணிந்திருந்த தன்மையைக் கண்டவர் ஞானசம்பந்தர்.

திருநீறு கொண்டு தென்னவன் நோய் தீர்த்த திருஞானசம்பந்தர் திருவாலவாய் மேவிய சிவனை உமைபங்கன் என்றே பாடுகின்றார்.

*மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு*
*சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு*
*தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு*
*செந்துவர் வாயுமைபங்கன் திருஆலவாயான் திருநீறே.*

திருநீற்றின் ஒளி விளங்க திருஞானசம்பந்தர் திருஆலவாய் வந்த காலம் புறச் சமய இருள் சூழ்ந்த காலம். ஒரு சைவனைக் கண்டாலே தீட்டு என்றிருந்த கூன்பாண்டியன் காலம். மகாராணி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மதுரைக்கு வர அழைப்பு விடுக்கிறார்கள். இடையூறு செய்வார் சமணர் என்று ஞானக் கண்ணால் கண்ட நாவுக்கரசர் கவனம் என்கின்றார். இறைவன் என் உள்ளம் புகுந்த அதனால் வருகின்ற ஊறு விலகிவிடும். இடையூறு சிரமம் தர இராது. எல்லாம் நல்லதாகவே நிறைவேறும் என்று சொல்ல வந்தவர் - அந்தச் சந்தர்ப்பத்திலும் விடமுண்ட கண்டனை வேயுறு தோளி பங்கன் என்றல்லவா ஏத்துகின்றார்.

*வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்*
*மிகநல்ல வீணைதடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்*
*உளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி*
*சனிபாம்பிரண்டு முடனே*
*ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல*
*அடியாரவர்க்கு மிகவே.*

சென்ற தலங்கள் தோறும் தலைவனைத் தவறாது நேரிற் தரிசித்த ஞானசம்பந்தர் பாடுந் தோறும் மாதொருபாகங் கொண்ட செய்தியைத் தவறாது சொல்லும் பாங்கினைப் பாரீர்.

முன்வினை வலியால் திருமணம் தடையானோர், ஒரு முறை நாடி வந்தாலே உடனே திருணம் கைகூடும் திருப்பதியே திருமணஞ்சேரி, *மென்மொழியாள் ஒரு கூறாகி* மயிலாரும் மல்கிய சோலை பயில்வானைப் பற்றி நின்றார்க்கில்லை பாவமே என்று நிச்சயமாக வாக்களிக்கின்றார்.

பிரமகத்தி பாவத்தையே போக்க வல்ல திருஇடைமருதூர் திருத்தலம் மேவிய பெம்மானை ஏரார்ந்த மேகலையாள் பாகங் கொண்டீர் என்கிறார்.

*நீரார்ந்த பெருஞ்சடையீர் நெற்றித்*
*திருக்கண் நிகழ்வித்தீர்*
*போரார்ந்த வெண்மழு வொன்றுடையீர்*
*பூதம் பாடலில்*
*ஏரார்ந்த* **மேகலையாள் பாகங்**
**கொண்டீர்** *இடைமருதில்*
*சீரார்ந்த கோயிலே*
*கோயிலாகச் சேர்ந்தீரே.*

**உண்ணாது நோற்பர் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.** 160

உண்ணாமல் நோன்பு மேற்கொள்ளும் துறவியர் பெரியவரே, ஆயினும் பிறர் சொல்லும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் இல்லறத்தாருக்கு அடுத்த நிலையில்தான் அவர் பெரியவர்.

> * பிறர் கஷ்டத்தை அறிந்து அதைப் போக்க உதவி செய்கிறவன், தண்ணீரில் தத்தளிக்கும் ஒருவனைக் காப்பாற்றுபவன், கர்ப்பஸ்திரிகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வாகன வசதி செய்பவன், கடன் தொல்லையால் கஷ்டப்படுகிறவனுக்கு ஆறுதல் சொல்பவன், அடிபட்டு அவஸ்தைப்படும் மிருகங்களுக்கு மருந்து போட்டுக் குணப்படுத்துபவன், மழையில் நனைந்தவனுக்கு வஸ்திரம் கொடுப்பவன் ஆகிய இவர்கள் கலியுகத்திலே நல்ல பலனை அடைவார்கள்.

கடவுளை நேரில்கண்ட அனைவருமே மங்கை பாகமாயிருக்கும் செய்தியைக் குறிப்பிடுவதைக் காண்பீர்.

நரியைப் பரியாக்கிப் பின் பரியை நரியாக்கிய பரமனின் திருவிளையாட்டால் தென்னவன் சீற்றத்துக்கு ஆளாகிறார் மாணிக்கவாசகர். மீண்டும் விளையாட்டா. வைகை பெருகத் தன் பங்குக் கரை அடைக்க வகை தெரியாதிருந்த செம்மனச் செல்வியிடம் கூலிக்குப் பிட்டு வாங்கிச் சாப்பிட்டும் கரைகட்டாது விளையாடிப் பாண்டியனால் பிரம்படி பட்டபோது அது அனைத்து சீவராசிகளுக்கும் வலிக்க மாணிக்கவாசகரின் வலிய பக்தியை வையம் அறிகின்றது.

இக்கதையைத் திருவாதவூரர் *பெண் சுமந்த பாகத்தான்* என்று திருஅம்மானை பாடுகிறார்.

*பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்*
***பெண் சுமந்த பாகத்தான்*** *பெம்மான் பெருந்துறையான்*
*விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்*
*கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை*
*மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு*
*புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.*

இப்படியாகவே இறைவனைக் கண்டவர்கள் சக்தியும் சிவமும் சரிபாதி சங்கதியைச் சொன்னார்கள்.

நீந்துவன, ஊர்வன, நடப்பன, பறப்பன ஆதிய சீவராசிகளிலே ஆண் பெண் என்று இருபால் இருப்பது போல் தாவரங்களிலும் இருபால் உண்டு. ஆண்பனை, பெண்பனை என்றுள்ளது அனைவரும் அறிந்ததே.

## வெற்றிலையில் இருபால்

வெற்றிலையில் கூட ஆண் வெற்றிலை, பெண் வெற்றிலை என்றுண்டு. ஆண் தெய்வ மூர்த்தத்திற்குப் படைப்பது ஆண் வெற்றிலையாக இருத்தல் அவசியம். பெண் தெய்வ மூர்த்தத்திற்குப் படைக்கும் வெற்றிலை பெண் வெற்றிலையாக இருக்கவேண்டியது முக்கியம். இதனை எடுத்துச் சொல்ல வேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

## கல்லில் இருபால்

அசையும் சீவராசிகளிலும் தாவரங்களிலும் ஆண், பெண் என்று பாகுபாடு உண்டு. அசையாத கல்லிலும் ஆண் பெண் உண்டு. ஆண் மூர்த்தமாக ஆண்டவனுக்குச் சிலை செய்யும் சிற்பி ஆண் கல்லிலே தான் சிலை பொழிய வேண்டும். பெண் சிலைக்கு பெண் கல்லையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

அப்படியானால் சிவலிங்கத் திருமேனி செய்வது எங்ஙனமோ? இலிங்கத்தை ஆண் கல்லிலும் ஆவுடையாரைப் பெண் கல்லிலும் செய்வது

> * மிகவும் ருசியுள்ள பதார்த்தங்களைத் தனியாக ஒருவன் சாப்பிடக் கூடாது. தன்னந்தனியாக தனி வழியே துணையின்றி ஒருவன் செல்லக் கூடாது. பொதுஜனங்களின் நன்மைக்கான காரியங்கள் செய்யும்போது அதனால் வரும் நன்மை தீமைகளைத் தனியாக ஆலோசனை செய்யக்கூடாது. எல்லோரும் நன்கு தூங்கிக் கொண்டு இருக்கும் பொழுது தான் மட்டும் முழித்துக் கொண்டு இருக்கக்கூடாது. (காவல்காரனுக்கு இவ்விதி பொருந்தாது) எல்லோரும் பந்தியில் உட்காந்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் பொழுது தான் மட்டும் முதுலில் எழுந்து கை கழுவச் செல்லக்கூடாது.

*Those who endure abstinence from food are great, next to those who endure the uncourteous speech of others.* *160*

மரபு. இப்படி நுணுக்கமாகச் சிற்பக்கலை பிசகாது சிலை செய்தால் இறையருள் தங்கும்.

சிவலிங்கத் திருமேனி செய்வார் ஆவுடையாரைப் பெண் கல்லிலும் இலிங்கத்தை ஆண் கல்லிலும் பொழிந்து ஒன்று சேர்க்கலாம் என்றால் அர்த்தநாரீசுவரர் சிலை பொழிய எந்தக் கல்லை எங்கே எடுப்பதாம்.

ஆண்கல்லும் பெண்கல்லும் இயற்கையாகவே இணைந்திருக்கும் மலையின் பகுதி பார்த்துத் தெளிந்து பிரமாணம் பிசகாது சிவபாகம் சக்தி பாகம் இரண்டும், ஆண்கல் பகுதியாலும் பெண்கல் பகுதியாலும் சரிபாதியாய் அமையப் பொழிந்திட்டால் அதுவே அருள்பொங்கும் அர்த்தநாரீசுவரர் சிலையாகும்.

சிற்பங்கள் செய்யும் ஓர் தமிழகக் கடற்கரை ஊருக்குச் சென்ற சமயம், விநாயகர் சிலை ஒன்று அவசரமாக வேண்டித் தரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார் ஓர் பாடசாலை அதிபர். சிற்பங்களுக்குப் பேர்போன அந்த ஊரின் சாலைகளில் எல்லாம் சிற்பச் சாலைகள். விற்பனைக்கு வைத்திருக்கும் கணக்கற்ற சிலைகள். சரி, ஒரு சிலை வ்ாங்கலாமே என்று அருகே சென்று பார்த்தோம். கண், காது, தும்பிக்கை எல்லாம் அழகாகச் செய்திருந்தார்கள். சற்றுக் குனிந்து பக்கத்தால் தும்பிக்கையின் அடியே பார்த்தால் பிள்ளையாருக்கு வாயே வைக்கவில்லை. அப்படியானால் பிள்ளையாருக்கு எப்படி நைவேத்தியம் கொடுப்பதாம்? தும்பிக்கைக்கு மறைந்திருக்கும் பகுதிதானே, யாரும் பார்க்கமாட்டார்கள் என்ற தைரியமா? அந்த ஒரு சிலை தான் அப்படி என்றால் அந்த ஊரில் பார்த்த அனைத்துச் சிலைகளையும் அப்படியே செய்திருந்தார்கள். அரச கலைக் கல்லூரியிலும் பார்த்தோம். அங்கும் அப்படித்தான். குறுகியகாலத்தில் கூடுதல் சிலை செய்து சம்பாதிக்க என்று இப்படிச் செய்கிறார்கள் என்பதை அறிந்தோம். இனிமேல் இலட்சணம் பார்த்துச் சிலை வடியுங்கள் என்று இரங்கிச் சொல்லவேண்டியிருந்தது.

இப்படியான கால சந்தர்ப்பத்தில் ஆண் சிலைக்கு ஆண் கல்லும், பெண் சிலைக்குப் பெண் கல்லும் தேடிப் பொழியுங்கள் என்று யாரிடம் சொல்வது. இதுவே இப்படியானால் அர்த்தநாரீசுவரர் சிலை செய்ய ஆண்கல்லும் பெண்கல்லும் இயற்கையாய் இணைந்திருக்கும் மலை பார்த்து இலக்கணமாய்ச் சிலை வடியுங்கள் என்று எடுத்துச் சொல்வது எங்ஙனமோ? கல்லில் கலை பிசகாது சிலை பொழியும் கலை உள்ளங்களைக் காண இறையருள் கூட்ட வேண்டும் என்று கேட்டு,

*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம் என்று கேட்ட வரத்தின் ஒரு பயனாய் மேணாடெல்லாம் பரவி சைவத்துறை விளங்க வாழ்கின்ற அனைவருக்கும் என் அன்பினைத் தெரியக் காட்டி*

*தமிழ் வாழச் சைவம் வாழ கனடாவில் மாநாடு கூட்டும் மாண்புமிகு மாந்தரை மகிழ்வோடு பாராட்டி*

*அர்த்தநாரீசுவரத் தத்துவப் பெரும் பொருளை ஆன்றோர் நிறைந்த இப்பேரவையில் சற்றே சிந்திக்கும் வாய்ப்பினைத்தந்த சான்றோர் அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் அறியத் தந்து*

*விடையேறும் பெருமானின் பேருளைப் போற்றி விடைபெறுகிறேன்.*

* உலகத்தில் ஜனித்த எவன் ஒருவன் கொடுமையான சொல்லைச் சொல்லாமலும், துஷ்டனுடன் சகவாசம் செய்யாமலும் இருக்கிறானோ அவன் நன்கு பிரகாசிக்கிறான்.

* எவன் ஒருவன் வசதியிருந்தும் தன்னிடம் வேலை செய்யும் பணியாட்களுக்கு கொடுக்காமல் தான் மட்டும் நல்ல உணவை உட்கொள்கிறானோ, எவன் கன்று குட்டிக்கு பால் கொடுக்காமல் பசுமாட்டின் பாலை ஒட்டக் கறந்து குடிப்பானோ அவன் கஞ்சனுக்கு ஒப்பாவான்.

# குமரகுருபரசுவாமிகள்

**– வ. சிவராசசிங்கம்**

தமிழ் மொழியில் தீவிர பற்று டையவர்கள் அதனைத் தெய்வத் தமிழ் என்று பாராட்டுவது இயல்பு. அத்தமிழின் பெருமையினையும் சுவை நலத்தினையும் உணர்ந்து அவ்வாறு பாராட்டி மகிழ்ந்தவர்களுள் குமரகுருபரர் தலை நின்றவர்எனச் சொல்லலாம். தாம் போற்றும் தெய்வங்களையெல்லாம் தமிழ் தொடர்பும் தமிழினபால் வேட்கையுமுடையவர்களாகக் கூறுவது இவரது கவி நலன்களில் ஒரு முக்கிய பண்பாகும். நூலின் பயன் அறம், பொருள், இன்பம், வீடு பேறு செந்தமிழின் பயன் என்பார் இத்திவ்விய கவிஞர். 'பண்முத்தமிழ்க்கோர் பயனே சவுந்தர பாண்டியனே' என்று சிவபிரானை முன்னிலைப்படுத்திப் பேசுகின்றார் மது ரைக் கலம்பகம் என்னும் நூலில். திருமாலின் சிறப்பைக் கூறவந்த கவிஞர், பைந்தமிழ்ப்பின் சென்ற பச்சைப்பசுங் கொண்டல் எனப் பாடி மகிழ்வர். மீனாட்சியம்மையை 'நறை பழுத்த து றைத்தீந் தமிழின் ஒழுகு நறும் சுவை' என வாயினிக்கப் பேசியுவப்பர். தெளிதமிழின் வடித்திடு நவரசமென முருகவேளை முக்கனித் தேன்மொழியில் உருவகிப்பர்.

இவ்வாறு தமிழ் மொழியினையும் தாம் வணங்கும் தெய்வங்களையும் ஒன்றாகவே கருதிப் போற்றிய குமரகுருபரர் தென் தமிழ் நாட்டில் பொருநையாற்றின் வடபாலமைந்த சிறீவை குண்டமென்னு மூரில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாம சுந்தரியம்மையார்க்கும் மகனாகத் தோன்றியவர். இவர் ஐந்து வயது வரையும் ஊமையாயிருந்து பின்னர் திருச்செந்தூர் முருகன் அருளால் பேச்சுத்திறன் பெற்றார் எனவும் பேச்சாற்றல் பெற்றவுடனேயே கந்தர் கலிவெண்பா என்னும் பிரபந்தத்தைப் பாடினர் எனவும் வரலாறு கூறு கிறது .

தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் பல்வகைய ஞானநூல்களையும் விரைவில் கற்றுத் தேறிய குமரகுருபரர்பால் இளமையிலேயே பக்தி வைராக்கியம் குடிகொள்ளலாயிற்று . அத்து டன் து றவு பூண வேண்டுமென்ற உறு திப்பாடும் ஏற்பட்டது . சிவநெறியில் சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் வாய்க்கப்பெற்ற குமரகுருபரர் அக்காலத்து தருமபுர ஆதீன முதல்வராக விளங்கிய மாசிலாமணி தேசிகரையடைந்து தமக்குத் து றவு நிலையருளுமாறு வேண்டினர். அப்பெரியார் ஆதீன முறைப்படி காசியாத்திரை செய்து வருமாறு பணித்தனர்.அதற்கு நெடுங்காலமாகுமேயென்று கவன்ற குருபரரிடம் சிதம்பர தரிசனமேனும் செய்து வருமாறு பணித்தனர். அவ்வண்ணம் செய்ய முற்பட்ட குமரகுருபரர் ஊரிலுள்ள சிவாலயங்களைத் தரிசிக்கத் தொடங்கி மது ரையிற் சில நாள் தங்கியிருந்த காலத்தில் மீனாட்சியம்மை மீது ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார். இக்காலத்திலேயே மது ரைக் கலம்பகம் என்னு ம் பிரகந்தமும் பாடப்பெற்றது .

திருவாரூரைத் தரிசிக்கச் சென்ற நாள்களில் தியாகேசப் பெருமாள்மீது நான்மணி மாலையொன்றினைப் பாடி பின் சிதம்பர தரிசனம் பொருட்டு பிரயாணம் மேற்கொண்டு செல்கையில் இடையில் தங்கி வைத்தீசுவரன் கோயிலை வழிபட்டு அவ்விடம் எழுந்தருளி யிருக்கும் முத்து க்குமாரசுவாமி மீது ஒரு பிள்ளைக்கவி பாடியருளினர். பின்னர் இன்னருள் பழுத்த சந்நிதியாகிய சிதம்பரத் தினையடைந்து ஆட்டுவிப்பாரின்றி மன்று ள் ஆடும் ஆனந்தத்தேன் காட்டுகின்ற முக்கட் கரும்பினைக் கண்டு கைதொழுது சிதம்பர மும்மணிக்கோவை என்னும் நூலினை இயற்றினர். மேலு ம் இக்கவிஞர்பிரான்

சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்து சில தமிழன்பர்கள் அவரையணுகி யாப்பருங் காரிகையிலுள்ள உதாரணப் பாடல்கள் சமணமதச் சார்புடையவையாயிருத்தலைச் சுட்டிக்காட்டி சிவன் தொடர்பிலான உதாரணச் செய்யுள்களை ஆக்கித் தருமாறு வேண்டியதற்கிசைந்து சிதம்பரச் செய்யுள் கோவை என்னும் நூலைப்பாடி வழங்கினர். இங்ஙனமாகப் பல சிவதலங்களை நாடிச் சென்று பராவியும் அவ்வத்தல நாயகர்கள்மீது பல்வகைய பாமாலைகளைத் தொடுத்துச் சூடியும் விளங்கிய குமரகுருபரர் உள்ளத்தே சிவஞான உபதேசம் பெற வேண்டுமென்ற வேட்கை மீண்டும் மேலோங்கவே தம் ஞான தேசிகராகிய மாசிலாமணி தேசிகரையடைந்து விருப்பத்தை நினைவுபடித்தினர்.இவரது பரிபக்குவத்தை உணர்ந்த தேசிகர் அவர் விரும்பியவாறே துறவுக்கோல ஆடையளித்தனர். இவ்வேளையில் குமரகுருபரர் ஞானதேசிகர் மீது பண்டார மும்மணிக் கோவை எனும் பிரபந்தத்தை இயற்றினர். பின்னர் தேசிகரிடம் விடைபெற்றுக் காசியாத்திரை மேற்கொண்டனர். அந்நாளில் தில்லிப்பிரதேசத்தையாண்டிருந்த பாதுஷாவுடன் தொடர்புகொள்ளுதற் பொருட்டு இந்துஸ்தானி மொழியை விரைவில் கற்கவெண்ணி கலைமகளின் கடாட்சம் வேண்டிச் சகலகலா வல்லி மாலை பாடி அவர் அருளால் அம்மொழியில் தேர்ச்சிபெற்று பாதுஷாவின் நட்பையும் மதிப்பையும் சம்பாதித்துக் கொண்டனர் இச் செல்வாக்கினால் காசியில் மடம் அமைப்பதற்கு நிலம்பெற்று விரும்பியவாறே மடம் தாபித்ததோடு புராணசாலையொன்றும் நிறுவி இந்துஸ்தானி மொழியில் சிவமகிமை விளங்கும் புராணம் பேருரைகள் நிகழ்த்தலாயினர். காசியம்பதியில் வாழ்ந்த காலத்தில் காசிக்கலம்பகம் என்னும் பிரபந்தத்தையியற்றியருளினர்.

குருபர அடிகள் மீண்டும் ஒருமுறை தருமபுர ஆதீனத்துக்கு வந்து தமது ஞானாசிரியரைத் தரிசித்து திரும்பவும் காசிக்குச் சென்று ஒரு வைகாசி மாத கரும்பக்கத் திருதியை நாளில்,

அகிலாண்ட மாயகண்ட மானவகி லேசா
முகிலாண்ட சோலையவி முத்தா- நகிலாண்ட
சின்ன விடைப்பாகா திருநயனம் செங்கமலம்
அன்ன விடைப்பாகா அருள் என்று

காசிப்பிரானை வேண்டி

பழங்கணுறும் உயிர்கள் துயர்க் கடல் நீத்துப்
பரங்கருணை

வழங்குபர மானந்த மர்க்கடலில் சங்கமித்தனர். இக் கவிஞர்பிரானுடைய பாடல்களில் தனிச் சிறப்பாகப் பரிணமிப்பது அவற்றின் இன்னோசையாகும். இவருடைய பாடல்களை ஏனையோர் பாடல்களிலிருந்து செவிப்புலன் கொண்டே வேறுபடுத்தி உணர்ந்து கொள்ளுமளவிற்கு சந்த நலம் வாய்ந்தவை. பொருளிலே கருத்துச் செல்வதற்கு முன் பாடல்களின் ஓசை உளத்தை ஈர்க்கும் இயல்பினை இவரது கவிதாசாமர்த்தியம் சொல்லின்பத்தை விளைவிற்கும் கருவிகள், உத்திகள் அனைத்தையும் இலாவகமாகக் கையாளும் திறத்தினையாதாரமாகக் கொண்டது. எவ்வகைப் பாடல்வகையினையும் சரளமாக ஆளும் ஆற்றல் வாய்ந்தவர். இவரது பிரபந்தங்களைத் தனித்தனி நோக்குவது கவி நலம் துய்க்க வழி செய்வதாகும்.

## CORRECTIONS

IN THE ARTICLE OF THE LAST ISSUE SOME ERRORS HAD OCCURED. READERS ARE KINDLY REQUESTED TO CORRECT THEM AND READ AS FOLLOWS:-

### PAEN TO VINAYAGA

*Adoration to the holy feet of the Lord*
*With ten arms and five faces*
*To him in whose waist-band*
*Sun - God rests as diamond stud*
*To him who bears the name of vikata chakkar Vinayaga.*
*We make obeisance.*

### PAEN TO SUBRAMANIYA

*வள்ளுவத்தில் சித்தாந்தம் - 08*

# ஊழிற் பெருவலி யாவுள?

சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம்

நாம் விரும்பியோ விரும்பாமலோ செயலாற்ற வேண்டிய நிலையில் இருக்கின்றோம். உடல் சோர்வுற்ற நிலையிலும் மனம் செயற்படுகிறது. உறக்கத்திலும் அகக்கருவிகள் வேலை செய் கின்றன.

செயல், வினை, கன்மம் என்பன ஒரு பொருட் சொற்கள் எமது வினை ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய பலனுண்டு. வினையால் வரும் பலனே ஊழ் என்றும் விதி என்றும் பலராலும் கூறப்படுவது. ஊழ் அல்லது வினைப்பலன் வலி மையுள்ளது; தவிர்க்க முடியாதது என்ற கருத் தைத் திருவள்ளுவர் பின்வருமாறு வலியுறுத்து கிறார்.

***"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று***
***சூழினும் தான்முந் துறும்*** - குறள். 380

ஊழ் என்னும் நியதி

ஊழ் அல்லது விதி பற்றிய வினைக் கொள்கை காலக் கடந்ததொன்று. உலகாயதம் தவிர்ந்த இந்திய தத்துவங்கள் அனைத்திலும் வினைக் கொள்கை இடம்பெறுகிறது. தெய்வம் பற்றிய நம்பிக்கை இல்லாத பௌத்தம், சமணம் போன்ற மதங்களும் வினைக் கொள்கையை ஏற்றுள்ளன. வினைப்பலன் வினை செய்தவனையே அடையும் என்று நம்புகின்றன. இளங்கோ அடிகள் தமது சமணம் சார்ந்த சிலப்பதிகாரக் காவியத்தை எழுதுவதற்கு இந்த நம்பிக்கையையும் ஒரு காரணமாகக் காட்டுகிறார்.

***"ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்***
***சூழ்வினைச் சிலம்பு காரணமாக***
***சிலப்பதி காரம் என்னும் பெயரால்***
***நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"***

என்பது அவரின் பதிகம் குறித்த வரிகள்

ஊழ் என்பதற்கும் பரிமேலழகர் தரும் விளக்கம் வருமாறு:

அஃதாவது இருவினைப் பயன் செய்தவ னையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட் கிளவி. இது; பொருள் இன்பங்கள் இரண்டிற்கும் பொதுவால் ஒன்றானுள் வைக்கப்பட்டாமையானும் மேற்கூறிய அறத்தோடு இயல்புடையானும், அதனது இறுதிகண் வைக்கப் பட்டுள்ளது.

ஊழ் என்ற அதிகாரம் திருக்குறளின் அறத் துப்பாலின் இறுதி அதிகாரமாக அமைந்ததுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வதிகாரத்தின் இறுதிப் பாடலாக அமைந்தது. "ஊழிற் பெருவலி யாவுள்" என்று தொடங்கும் குறள். அடுத்துவரும் பொருட் பாலுக்கும் இன்பத்துப்பாலுக்கும் முன்னர் அமைந் துள்ளதால், பொருட் பேறும் இன்ப நுகர்ச்சியும் ஊழின் அடிப்படையிலே தான் பெறப்படும் என்பது உணர்த்தப்படுகிறது. இதனை இவ்வதிகாரத்தி லுள்ள பின்வரும் குறட்பாலும் வலியுத்துகிறது.

***"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி***
***தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"*** குறள் - 377

இக்குறளுக்குப் பரிமேலழகர் "ஐம்பொறிக ளான்" நுகரப்படும் பொருட்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும் தெய்வம் வகுத்த வகையான் அல்லது நுகர்த்தல் உண்டாகாது" என்று விளக்கம் அளிக்கிறார். இதனை அவர் மேலும் விளக்கு கையில், "வெறும் முயற்சிகளால் பொருள்களைப் படைத்தல் அல்லது நுகர்த்தல் ஆகாது. அதற்கு ஊழ் வேண்டும் என்பதாயிற்று" ஊழின் அடிப் படையில் நிகழும், அதுகூட தெய்வம் வகுத்த வகையிலே அமையும் என்ற கருத்தும் பெறப்படு கிறது இது வினைப் பற்றிய சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாக அமைந்துள்ளது.

**வினையின் வகை**

தத்துவ உலகில் நாம் செய்யும் செயல், அதனால் வரும் பலன் ஆகிய இரண்டும் வினை

அல்லது கன்மம் எனப்படும். ஒருவன் புதிதாகச் செய்யும் வினை ஆகாமியம் எனப்படும். அதனால் உண்டாகும் பலன் செய்தவனுக்காக வருமாதலின், தமிழில் இதனை வருவினை என்று குறிப்பதுண்டு. நாம் ஒரே காலத்தில் செய்யும் வினைகள் எல்லாம் குறிப்பிட்ட ஒரே காலத்தில் பயனுக்கு வருவதில்லை. ஒரு வகை நியதிக்குட்பட்டு, காலத்தின் அடிப்படையில், வினைப்பலன்கள் அனுபவத்துக்கு வருகின்றன. ஒரே காலத்தில் ஓரிடத்தில் விதைத்த தானியங்கள் எல்லாம் ஒரே நேரத்தில் முளை விடுவதில்லை. இதே போன்றதே நாம் செய்யும் செயல்களின் பலன்களும் வினைப் பலன்களெல்லாம் பெரும் தொகுதியாகச் சேர்த்துள்ளன. இத்தொகுதி சஞ்சிதம் எனப்படும். தொல்வினை, பழவினை என்ற பெயர்களிலும் இது குறிக்கப்படுகின்றது. இந்தச் சஞ்சித மூடையின் ஒரு பகுதி எமக்கு அனுபவத்திற்கு வருகிறது. இதனை இறைவனே சில ஒழுங்கு முறையில் எமக்கு ஊட்டுகின்றான் என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. இப்படி அனுபவத்துக்கு வரும் வினை பிராப்தம் எனப்படும். இதனை நுகர்வினை என்று தமிழில் குறிப்பார்கள். ஊழ் விதி என்பதும் இதுவே. இந்த ஊழின் அடிப்படையிலே எமக்கு இன்ப துன்ப அனு பவங்கள் உண்டாகின்றன.

நன்மைக்குக் காரணமாக வினை நல்வினை என்றும், தீமைக்குக் காரணமான வினை தீவினை என்றும் கூறப்படுகிறது. எமது இன்ப துன்ப அனுபவங்கள் நாம் செய்த நல்வினை தீவினையின் அடிப்படையில் அமைகின்றன. இவற்றுக்கு நாமே காரணம், பிறரல்ல என்பது சமயக்கருத்தாக உள்ளது. "தீதும் நன்றும் பிறர் தர வாரா என்ற தொடர் சங்கத் தமிழரின் வாழ்வியல் அனுபவமாக வந்த கருத்து.

தீயதை அகற்றி நல்லதை விரும்புவதும், துன்பத்தை விடுத்து இன்பத்தை விரும்புவதும் மனித இயல்பு. இதனால் இன்பம் பயக்கும் வினையைச் செய்ய வேண்டும் என்பது பெறப்படும். இதனை வள்ளுவர் பின்வருமாறு விளக்குகிறார்.

***"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி***
***இன்பம் பயக்கும் வினை -*** குறள் - 669

**வினையை வகுப்பவன்**

ஒரு பிறவியில் செய்த வினையைத் தீர்ப்பதற்கு இன்னொரு பிறவி எடுத்து வினை செய்ய வேண்டியுள்ளது. முன்பு செய்த வினைப் பலன் அனுபவத்திற்கு வருவதற்கு புதிய வினை செய்ய வேண்டும். இப்புதிய வினையின் பலன்கள் மீண்டும் தொடர, திரும்பவும் இன்னொரு பிறவி எடுக்க வேண்டியுள்ளது. இங்ஙனம் வினை பிறவி வினை என்று வினையும் பிறவியும் சங்கிலித் தொடர் போல் நீள்கின்றன. இது சைவ சித்தாந்தக் கருத்து.

ஒரு பிறவியில் செய்த வினை மறு பிறவிக்கும் தொடரும் என்ற கருத்து சங்க காலத்துக்கு முன்னரே தமிழகத்தில் இருந்தது. ஆய் அண்டிரன் என்ற வள்ளல் குறித்த புறநானூற்றுப் பாடல் இதற்கான எடுத்துக்காட்டு,

***"இம்மைச் செய்தது மறுமைக் காம்எனும்***
***அறவிலை வணிகன் ஆஅய் அலன்***
***பிறரும் சான்றோர் நெறிஎன***
***ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே"***

இந்தப் பிறவியில் செய்தது மற்றப் பிறவியில் நன்மையளிக்க என்று எண்ணிச் செய்யும் வள்ளல் அல்ல ஆய் ஆண்டிரன், சான்றோரும் பிறரும் செய்து காட்டிய வழியில் சரியென்று எண்ணியதை அவன் செய்கிறான் என்று இப்பாடல் கூறுகிறது.

வினைப்பலன் சென்றடைவதற்கான நியதி, அதனைச் சேர்ப்பிக்கும் ஆற்றல் ஆகியவை பற்றி சிந்தனைகளும் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. வினை, பால், பால்வரை தெய்வம் ஆகிய சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுபவை வினையையும் சேர வேண்டிய நியதியையும் பால் என்றும், இருவினையையும் சேர்ப்பிக்கும் ஆற்றல் ஒன்றை பால்வரை தெய்வம் என்றும் தொல் காப்பியம் குறிப்பிடுகின்றது.

***"ஒன்றே வேறே என்றிரு பால்வின்***
***ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்***
***ஒத்த கிழவனும் கிழத்தியும் காண***

- தொல் பொருள் 93

***காலம் உலகம் உயிரே உடம்பே***
***பால்வரை தெய்வம் வினையே பூதம்***
***ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்***

(தொல், சொல், சேனை - 57)

பால் என்ற சொல்லை வள்ளுவரும் கையாளுகிறார்.

***"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்***
***சொரியினும் போகா தம்*** (குறள் 376)

இங்கு பால் என்பது ஊழ் என்ற கருத்தில் வருகிறது. வினைப் பயனைச் சேர்க்கும் ஒரு வித நியதி என்று கொள்ளவும் இடமுண்டு.

பால் வயரை தெய்வம் என்பதற்கு விளக்கமளிக்கும் சேனைவரையர் பின்வருமாறு எழுதுகிறார்.

பால் வரை தெய்வமென்பது எல்லோருக்கும் இன்ப துன்பத்திற்கு காரணமாகிய இரு வினையையும் வகுப்பது. வினை என்பது அறத்தெய்வம்.

வினை செய்தவனையன்றி பிறரைச் சென்று சேராதாகையால் அதனை அறத் தெய்வமென உயர்த்திப் பேசுவது சரியானதே. பால்வரை தெய்வம் குறித்த விளக்கம் இருவினையையும் வகுக்கும் ஒரு பேராற்றலை உடைய ஒன்றைக் குறிப்பதாக உள்ளது. இரு வினையையும் தானாகவே வினை செய்தவனைச் சென்று சேரமாட்டாதென்பது அதனைச் சேர்ப்பிக்கும் ஒரு பேராற்றல் வேண்டுமென்பதும் பண்டைத்தமிழர் கருத்தாக இருந்ததை அறியமுடிகிறது. வள்ளுவரும் இதனைப் பின்பற்றி "வகுத்தான்" என்ற சொல்லால் குறிக்கிறார்.

"வகுத்தான்" என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் "தெய்வம்" என்று பொருள் காண்கிறார். அனைத்துச் செயல்களும் இறையருளின் வழியே நடக்கும் என்பதும் பழங்காலம் முதல் வழங்கும் தழிழகத்துக்கு கொள்கையாக உள்ளது. வள்ளுவர் நோக்கின்படி வினைச் சேர்ப்பதற்கு ஒருவன் வேண்டும். அவன் வகுத்த வகையில் எமது வினைகளின் பலன்கள் எம்மை கூடுகின்றன. "வகுத்தான் வகுத்த..." என்று தொடங்கும் குறட்பா இதனை விளக்குவதாக உள்ளது.

## தத்துவ நோக்கு

நாம் பெறும் இன்ப துன்ப அனுபவங்களுக்கு பல வேளைகளில் காரணம் காட்ட முடியாதிருக்கிறது. ஒருவன் ஏழ்மையில் வீழ்ந்து துன்பம் அனுபவிக்க இன்னொரு செல்வச் சீருடன் வாழ்ந்து இன்பம் அனுபவிக்கிறான். காரணம் காண முடியாத நிலையில் இந்திய மதங்கள் கொண்ட வினைக் கொள்கையிலே தான் விளக்கம் காண முடிகிறது.

நாம் காணும் இன்ப துன்பம், ஏற்றத் தாழ்வு ஆகியவை அவை தொடர்பான மனிதனிலோ பொருளிலோ இயற்கையாக இருக்கின்றன என்பது கான்ற் (Kant) போன்ற மேலை நாட்டுத் தத்துவ ஞானிகள் கருத்து. இக்கருத்து இவற்றுக்கான அடிப்படைக் காரணத்தை விளக்குவதாக இல்லை. நிரந்தர சொர்க்கம், நிரந்தர நரகம் போன்ற கருத்தையும், ஒரு பிறவிக் கொள்கையையும் கொண்ட கிறிஸ்தவ மதத்தில் வினை குறித்த சிந்தனை இருக்க வேண்டிய அவசியமில்லை. தனக்கென்று எந்தத் தினத்துவமும் இன்றி, காலத்துக்குக் காலம் மேல் நாட்டில் உருவாகும் தத்துவங்களை உள்வாங்கி வளர்ந்தது கிறிஸ்தவ மதம்.

இந்திய தத்துவங்கள் வினைக் கொள்கையைக் கொண்டிருந்தாலும், அவற்றின் விளக்கங்கள் வேறுபடுகின்றன. ஞானம் கிட்டியபோது பிரார்த்த வினை தவிர்ந்த மற்றைய வினைகள் தீர்ந்துவரும் என்பது வேதாந்தக் கருத்துள்ளதாகவுள்ளது. ஆன்மா பிரமத்தின் ஒரு கூறு என்று நம்பும் வேதாந்திகளுக்கு வினையை ஆன்மாவுடன் சேர்ப்பதற்கு இறைவன் வேண்டும் என்ற வள்ளுவரின் கருத்து ஒத்ததாக இல்லை.

சமணமும் பௌத்தமும் வினை தானாகவே சென்று செய்தவனைச் சேர்ந்து அனுபவத்திற்கு வருமென்று நம்புகின்றன. அதனைச் சேர்க்க எந்த ஒரு ஆற்றலோ தெய்மோ தேவையில்லை என்பது இவற்றின் கருத்து. இதனைச் சிறந்த ஒரு உதாரணம். மூலம் அவை விளக்குகின்றன. பல எணணிக்கை கொண்ட பசுக்கள் கூட்டத்தில், ஒரு பசுக்கன்று தானாகச் சென்று பிற பசுக்களைத் தவிர்த்தது. அதன் தாய்ப் பசுவை இனங் கண்டு

பால் பருகுகிறது. இது போன்றதே வினையின் சேர்க்கையும். பசுக்கன்று போன்று வினையும், பலரைத் தவிர்த்து, அதற்குரியவரையே மறு பிறப்பில் சென்றடைகிறது. சமண நூலான நாலடியாரில் வரும் பின்வரும் பாடல் இதனை விளக்குகிறது.

***"பல்ஆவுள் உய்த்து விடினும் குழக்கன்று வல்லதாம் தாய்நாடிக் கோடலை - தொல்லைப் பழவினையும் அன்ன தனகத்தே தற்செய்தே கிழவனை நாடிக் கொளகு"*** நாலடியார்: 101

இந்திய தத்துவமான மீமாம்சையும் இதே கருத்தைக் கொண்டுள்ளது. ஆனால் இந்த விளக்கம் குறையுடையதாக உள்ளது. பசுக்கன்று ஒரு அறிவுடைப் பொருள். அதனால் அது தானாகச் சென்று தன் தாய்ப் பசுவைக் கூட்டுகிறது. கன்மம் அல்லது வினை அறிவற்ற பொருள். அது எப்படித் தானாகச் சென்று உரியவரைக் கூடும்? இந்தக் கேள்விக்கு இந்தத்தத்துவங்களில் ஏற்ற விளக்கம் இல்லை. வள்ளுவரின் வினைப் பயனை வகுப்பவன் பற்றிய கருத்துக்கும் பொருந்துவதாக இல்லை.

**சித்தாந்த விளக்கம்**

வினையின் சேர்க்கை பற்றிய சைவ சித்தாந்த விளக்கம் அறிவு சார்ந்ததாக உள்ளது. உயிர் புரியட்டகாயம் என்னும் நுண்ணுடலுடன் பிறவிகள் தோறும் செல்கிறது. புரியட்டகாயம் என்பது எட்டுத்துத்துவங்களின் கூட்டாக அமைந்தது. புத்தி தத்துவம் அவற்றில் ஒன்று. ஒருவன் செய் யும் வினைப்பலன் புண்ணிய பாவப்புதிவு களாக இப்புத்திதத்தில் இருந்து பிறவிகள் தோறும் உயிரைத் தொடர்கின்றன. மாணிக்கவாசகர் இதனை "அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி" என்று கூறி விளக்குகிறார். (அறம் - புண்ணியம்) உரிய காலத்தில் இவ்வினைப் பலனின் (சஞ்சித வினையின்) ஒரு பகுதியை இறைவன் உயிருக்கு ஊட்டுகிறான். ஒருவன் இன்ப துன்ப நுகர்வு இந்த அடிப்படையிலேயே உண்டாகிறது.

இருவினைப் பயனாக இன்ப துன்ப அனுப வங்கள் உண்டாகின்றன. பிறப்பு, இறப்பு வரு கின்றன; வினையை உயிருக்கு ஊட்டுபவன் இறைவனே என்ற கருத்துக்களைச் சித்தாந்த நூல்களிலே பரக்கக் காணலாம். சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த நூலில் வரும் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டு.

***"இருவினை இன்ப துன்பத்து இவ்வுயிர் பிறந்திறந்து வருவது போல தாகும் மன்னிய வினைப் பயன்கள் தருபரன் தரணயோடு தராபதி போலத் தாமே மருவிடா வடிவும் கன்ம பயன்களும் மறுமைக் கண்ணே."***

(சித்தியார் 94)

ஒரு வைத்தியன் மருந்து கொடுத்துப் பிணியை மாற்றுவது போலவும், ஒரு மன்னன் (தராபதி) கொடியவரைத் தண்டித்துத் திருத்துவது போலவும் இறைவன் இன்ப துன்பமாக இரு வினைப் பயன்களைக் கொடுத்து உயிருக்கு உதவுகிறான் என்ற கருத்து இதில் தரப்பட்டுள்ளது.

வினைப்பயன் அல்லது ஊழை வகுத்து உயிர்களுக்குச் சேர்ப்பவன் இறைவனே என்ற கருத்தை திருவருட்பயன் என்ற சித்தாந்த நூலும் உணர்த்துகின்றது.

***செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும் உய்வான் உளன் என்று உணர்"***

(திருவருட்பயன்: 53)

இத்திருவருட் பயன் பாடலுக்கு விளக்கம் போல் பரிமேலழகரின் குறிப்பிட்ட குறள் குறித்த சொறகள் உள்ளன. "ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரின் கண் சொல்லாமல் அவ்வுயிர்க்கு வகுத்தலின் "வகுத்தான்" என்றார்.

வள்ளுவரின் "வகுத்தான் வகுத்த வகை" என்று தொடங்கும் குறள் விளக்கமாக இச்சித்தாந்த நூற் பாடல்கள் உள்ளன. வள்ளுவத்திலுள்ள குறிப்பிட்ட குறள் சைவ சித்தாந்தக் கருத்தை வலியுறுத்துவதாகவுள்ளது; பிற மதத் தத்துவங் களுக்குப் பொருந்துவதாக இல்லை.

# நிறைவான வாழ்வை அளிக்கும் சைவ சமயம்

பேராசிரியர் பொன். சக்திவேல்

20ம் நுற்றாண்டில் உலகில் வேகமாக நடந்தேறும் விடயங்களைக் கவனிக்கும் போது பொருளாதார மற்றும் விஞ்ஞான முன்னேற்றங்கள் மிகக் குறுகிய நேரத்தில் வேகத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவே வளர்ந்து வருகின்றன. எனவே தான் பண்டைக்காலம் போல் அல்லாது இந்த விஞ்ஞான யுகத்தின் அவசரத்திற்கும் ஆற்றலுக்கும் எதிராக முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இன்றைய இளைய தலைமுறையினர் இருக்கின்றனர். இந்த நிகழ்கால நிகழ்வுகளினூடே சைவ சமயத்தின் இளைய தலைமுறையின் மத ஈடுபாட்டைக் கருத்தில் கொண்டால் அது மிகவும் குன்றிவருவது கவனத்திற்குரிய ஒன்று.

மனிதனுடைய வாழ்க்கை முறைகள் வளரும் விஞ்ஞான உலகிற்கேற்ப மாறிவரினும் மனிதன் எப்பொழுதும் புதுமையை விரும்புவதாலேதான் இம்மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. ஆனால் மனிதனது ஆயுட்காலம் ஆயிரம் ஆண்டுகளானாலும் இந்தப் பிரபஞ்சத்தின் உண்மைத் தன்மையை அவனால் அறிந்து கொள்ள முடியாது. எனவேதான் மனிதன் வாழும் காலத்தினுள் சமூகத்தோடு ஒத்துப் போகும் வழியில் இணைந்து. செயற்படும் விதத்தில் ஒழுக்கம் கட்டுப்பாடு நற்பண்புகளுடன் சமுகத்தில் நல்ல வரவேற்பைப் பெற்று வாழ்வதற்கு மதம் தனது இன்றியமையாத் தன்மையை உணர்த்தி நிற்கிறது. இதனால் மனிதன் ஆயுள் சில காலமேயெனினும் இதன் அடிப்படையில் வாழ்ந்த உதாரண புருஷர்களின் வாழ்க்கை முறைகள் அவர்கள் பல காலத்திற்கும் போற்றப்படுவதற்கு ஏதுவாய் இருக்கின்றன.

ஆக்குவதற்கும் ஆறுதலுக்கும் ஆன்மீகத் திற்கும் உருவாக்கப்பட்ட சமயங்களை. இன்றைய உலகில் பார்த்தால் எவ்வளவு தூரம் மனிதர்கள் அதைத் தமது சுயநல நோக்கங் களுக்காக பயன்படுத்த துணிந்து விட்டார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மதத்தின் அடிப்படையில் பிரிவுகள், பிளவுகள், சண்டைகள், சச்சரவுகள், மனிதன் மதத்தின் தத்துவங்களை தவறான பாதையில் இட்டுச் செல்கிறான் என்பதை வெளிப்படுத்துகிறது. மதத்தின் பெயரால் பழைய கறைபடிந்த அத்தியாயங்களை மனதில் கொண்டு இடம்பெறும் புதிய கறைபடிந்த நிகழ்வு சரித்திரத்தின் புதிய பக்கங்களுக்கு இடம் கொடுக்கின்றன. இது எதை எடுத்துக் காட்டுகிறது என்றால் பலர் தாம் எம்மதத்தைச் சார்ந்தவர் என்பதை அறிந்திருக்கின்றனர் எனினும் அதன் உண்மையான கொள்கைகளை உணராதவர்களாக இருக்கின்றனர் என்பதைத் தான். இத்தகைய மத வெறித் தன்மைகளைக் களைய வேண்டுமெனின் மதம் தனது சித்தாந்தங்களை சிறந்த முறையில் இலகுவாக்கி இளைஞர்களைச் சென்றடைய வழி அமைக்க வேண்டும். பேராசிரியர் ஹக்ஸ்லியின் கூற்றுப்படி மதங்கள் காலத்திற்கேற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ள வேண்டுமேயன்றி பாரம்பரிய சம்பிரதாயங்கள் சடங்குகள் என்று உயிரை விடக் கூடாது. இந்த இடத்தில் இன்றைய இளைய தலை முறையினரின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த மதங்கள் தயாராக வேண்டும்.

இயற்கை ஜீவராசிகளாகப் படைக்கப்பட்ட எல்லாவற்றிற்குமே உணர்வுகளையும் அதனை தத்தமது நிலைகளுக்கேற்ப தரம்பிரிக்கும் ஆற்றலையும் கொடுத்திருக்கிறது. விசேசமாக மனிதர்களுக்கு பகுத்தறிவு என்ற ஒன்றும் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்த தரம் பிரித்தலில் தான் சிலர் தவறுகள் நடைபெறுவதற்கு ஏதுவாகிறது. இந்த இடத்தில் மதம் மனிதனை உணர்வுகளுக்கு அடிமை என்ற நிலையில் இருந்து உணர்வுகளை அவன் நெறிப்படுத்தி வாழக் கற்றுக் கொடுக்கிறது.

சமூகம், கலை, கலாச்சார, இலக்கிய பாரம்பரியங்கள், நாகரிக முன்னேற்றங்களை எடுத்துப் பார்த்தால் எங்கும் போட்டி எதிலும் முன்னேற்றங்கள் வெற்றி, தோல்விகள் எனும் பக்கங்கள் இருப்பதைக் காணலாம். இவற்றில் ஒப்பீட்டு ரீதியில் தான் வெற்றிதோல்விகள் நிர்ணயிக்கப்படுகின்றன: பௌதிகம் சமபந்தமான தனிப்பட்ட மனிதனின் பிரச்சனைகள் ஒவ்வொரு சராசரி மனிதனின் வாழ்விலும் எட்டிப்பார்க்கின்றன. இங்குதான் மதமும் இறை நம்பிக்கையும் மனிதனில் இயலாமையை விலக்கி வைப்பதோடு அவன் தன்னம்பிக்கைக்கும் ஓர் திறவுகோலாக இருக்கின்றது என்பது ஒரு தெளிவான உண்மை, எனவே தான் இன்றைய இளைய தலைமுறையின் விரக்தி நிலைகளை மதங்கள் தமது அரிய செயற்பாடுகளின் மூலம் ஓரளவுக்கேனும் குறைக்க முடியும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய வாதம்.

தற்போது உலகில் பல நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தின் முன்னணியில் இருக்கின்றன. அவ்வந் நாடுகளில் வாழும் மக்கள் எவ்வளவு வசதிகளை அனுபவிக்கிறார்கள். ஆனால் அந்த மட்டத்தில் கூட அதிருப்தி, குறைகள் மீண்டும் நிவர்த்திகள், முன்னேற்றங்கள் இப்படியே தொடர்கின்றன. முடிவு நிச்சயமாக நாம் சொல்ல முடியாது. ஆனால் உலகில் மனிதன் திருப்தி என்ற ஒரு நிலையை அடைய முடியும் என்றால் அதற்கு ஆன்மீக ஈடுபாடு ஒன்றுதான் வழி. ஆன்மீக கருத்துக்களும், சிந்தனைகளும், மனிதனுக்கும் இடையே ஓர் நீண்ட இடைவெளியை ஏற்படுத்தக் கூடியன. இத்துன்ப துயரங்களில் இருந்து அவனின் விடுதலை அவன் எவ்வளவு தூரம் ஆன்மீக நெறிப்படுகிறான் என்பதில்தான் தங்கியிருக்கிறது. அந்த வகையில் ஒரு நிறைவான வாழ்வை அளிக்க சைவசமயம் தன்னகத்தே பல விளக்கங்களைக் கொண்டுள்ளது. இத்தகைய விளக்கங்களைக் காண்பதற்கு எமது இளைய தலைமுறையினரின் மனக்கண்ணாடிகள் துலக்கப்பட வேண்டும். சைவ சமயம் எல்லா வகையான தர்மங்களையும் தன்னகத்தே கவர்ந்து, பொது தர்மத்தைப் போதிக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. இதன் பெருமையை பாதுகாத்து பணிபுரிய, இன்றைய நவீன உலகின் முன்னோடிகளான இளைஞர்களை ஊக்குவிக்க, மதத்தலைவர்கள், அபிமானிகள் யாவரும் ஒன்று சேர்ந்து முன்வரவேண்டும். இறைவன் சேவையாகவே கருதி இதன் தத்துவங்களை இன்றைய தலைமுறையின் உணர்வுகளுக்கு ஏற்றவாறு மெருகூட்டி புனரமைப்பதன் மூலம் இன்றைய உலகின் அனேகரின் ஈடுபாட்டை அதிகரிக்க முடியும்.

சைவ மதக்கருத்துகள் பெருந்தொகையான நூல்களில் பரந்து விரிந்து கிடக்கின்றன அதே வேளை ஓரிருவர்களில் தன்னை உணர்த்தும் தன்மையுடையதாகவும் சைவசமயம் விளங்குகிறது. சைவசமயம் மதத்தைப் பொறுத்தவரை அதன் புராண, இதிகாச, வழி, துணை நூல்கள் தத்துவார்த்த ரீதியில் மிகவும் பழமையானதாக இருப்பது இந்த நவீன யுகத்தின் இளைய தலைமுறையினரின் ஈடுபாடு குறைவாய் இருப்பதற்குரி காரணங்களில் ஒன்றாகக் கூறமுடியும்.

சைவ சமயத்தின் புராண, வழி நூல்களில் நேரடியான ஈடுபாட்டையும் அறிவையும் கொண்டிருப்போர் மதத்தின் உண்மையான அபிமானிகளாக சேவை மனப்பான்மையுடன் முன்வந்து இந்த நவீன யுகத்திற்கு ஏற்றவாறு, புதிய தலைமுறை ஏற்றுக் கொண்டுபல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் புதியதோர் அணுகுமுறையினைத் தோற்றுவிக்க வேண்டும்.

இது மட்டுமல்ல மதம் அன்பு என்ற உணர்வை எல்லா ஜீவராசிகளிடத்தும் வெளிப்படுத்தக் கற்றுக் கொடுக்கும் ஒன்று. எனவே அன்பு தான் தெய்வம், அன்புதான் வாழ்க்கை, அன்புதான் உலகம் ஈன்ற சைவ சமயத்தின் நிலைநிறுத்த இளைய தலைமுறையினரும் சிரத்தையுடனும் ஈடுபாட்டுடனும் முன்வரவேண்டும்.

# SIVA WEDS UMA

- V. Sivarajasingam

Finding it an opportune moment Rathi approached Siva and begged Him to give back the life of cupid. Siva granted her request with some limitation "He will come into life on the day when I wed Umadevy. His appearance will be visible to you but invisible to others ".

Then he addressed the four ascetic disciples " Listen O sages. Sivagnanam which is Divine know ledge is beyond expression and book learning. It can be attained only through deep meditation which should focus on my name"The four disciples fell at his feet saying " we are now embued and enlightened with real knowlege" and left for their places to resume their penance Now Lord Siva bethought Himself of his promise to the Devas and it came upon his gracious mind that for the promise to be fulfilled, He should wed Umadevi He felt inclined on a sportive way to show to the world Umadevi's devotion to Him. He took the form of an old sanyasi and suddenly appeared at the entrance of Uma's penance grove. The bevy of girls in attendance on Umadevi became alert and questioned him about the cause of his visit. "The lovely daughter of Himalayan King, I am told, is engaged in vigorous penance. I would like to have a glimpse of the nature and style of her performance" said the hermit. The girls took him to Umadevi. On seeing him , Umadevi got up from her seat and paid obeisance due to a revered sanyasi. Casting a benign glance on the young damsel. He said," you appear to be the most lovely maiden on earth, but why torture yourself thus in the name of Penance ? Your body does not deserve such suffering". Uma kept silent. "Venerable Sir, she is engaged in this ascetic exercise with the noble intention of attaining Lord Siva's lotus feet and making him her consort" said, the chief chaperron.On hearing these words the venerable sage laughed aloud and said," It is the height of folly on the part of your mistress to aspire for the unattainable. The whole world knows that Lord Siva is beyond reach of even Brahma and Vishnu."

The enraged Umadevi broke her silence and replied vehemently, "I will not be deterred from my pursuit by such words. Even if the immortal Lord does not condescend to appear and fulfil my ambition ,I will continue my penance in more severe and painful way till the very end of my life."

" Young maiden , you are not perhaps aware of the nature of your so called God of gods," the hermit went on unmindful of Umadevi's wrath. " He wears poisonous snakes for ornaments and has elephant's hide and bloody tiger's skin for dress and resides in cremation grounds. He is so poor that he has a bull for his vehicle and goes begging from rishi's wives. Besides he is of unknown birth." Biting her lip to control her rising rage Parvathy vehemently defended her Lord, finally declaring that her love could never be altered whatever was said of him- true or false. Then the hermit threw off his disguise and revealed himself as no other than Siva .Parvathy was taken aback with pleasant surprise. At the same time she shuddered with fear at the thought of her disrespectful talk she had had with him. She fell at his feet and craved his indulgence." Forgive me O Lord for my insufferable rudeness in addressing you in the most

improper and impolite way". The Lord lifted her and cuddling her with his chest said. "Devi don't be agitated. It's only to show to the world the depth of love you have towards me.. Now that your love is proven, we shall be wedded soon. Then releasing her from His
embrace, Lord Siva went to kailas where he summoned the seven sages and ordered them to go to the king of Himalayas and express his desire to wed Umadevi. The King was immensely pleased to hear of this proposal. Meanwhile Parvathy returned home to tell her father of her happy fortune. The Himalayan King was busy engaging himself in making arrangements for his daughter's wedding. He summoned Viswakarma the celestial architect and directed him to renew and adorn the city and construct a wedding hall using his divine skill and architectonics. Viswakarma put up a magnificient hall embellishing it with artistic tapestries.

At that moment the Queen - wife felt a little sad and reluctantly spoke to her husband, "Forgive me my Lord if my words sound out of tune. I have been told that Lord Siva after marrying the daughter of Daksha, Brahma's son decapitated his head. My body shivers with fear at the very thought of this incident.

How can we give away our daughter to such a character? "Don't be disturbed my love" returned the king. You have not been properly told of the actions of our Lord. Indeed it is hard to comprehend the why and the wherefore of His actions. Dakshsa was given due punishment for his misdeeds. He performed a Yaga in which he ignored Lord Siva to whom the offering ought to be provided. Besides he abused the Lord in the most ignoble and irreverent terms. That was why Daksha suffered the loss of his head." On hearing these words the Queen felt relieved.

When the celestial architect informed that the task had been completed, the king felt pleased and sent messages of invitation to all the celestials.
beginning with Brahma, Vishnu and Indira, and to the rishis such as Narada, Agastia and Vasistha
On the appointed day, the celestial damsels with great eagerness gathered round Parvathy and displayed their skill and adroitness in adorning the bride. The ascetic appearence was done away with. Now Parvathy glowed with scintillating beauty her companions now having given the final touches of embellishment. Luxmi, Saraswathi, Menaka and other chosen chaperons took Uma who appeared an embodiment of modesty to the nuptial dais. Meanwhile the Himalayan king proceeded with his retinue to mount Kailas. With the permission of Nandideva, the guardian of the sanctorum, the king entered the shrine and making obeisance with all humility requested the Lord that He be graciously pleased to set out to the Himalayan abode to accept the hand of the divine maiden Parvathy. The Lord of Kailas acceded to the king's request. Then summoning Nandhi, Lord Siva bid him inform all celestials, rishis and dwarf demons to accompay Him to the place of wedding. The Celestials were highly pleased. Brahma and Vishnu came forward with a golden plate filled with dazzling jewels and paying homage to the Lord said, " We are not unware Oh Lord of the fact that you are devoid of likes and dislikes. You consented to marry only to promote our welfare. It is our earnest wish that you put on these ornaments and appear in the true form of a royal bridegroom. Touching the jewels Lord Siva said with gentle smile. " I am pleased at your request. It is as good as wearing them. Then he thought for a moment that the snakes on his body be turned into ornaments and the celestials were overjoyed to find the jewels twinkling on his body.

When Lord Siva appeared, attired and adorned as bridegroom in the Himalayan Palace. all the Ladies in and around the city were enhralled by his astounding beauty and different women seemed to have different thoughts and feelings that ran amok in their swelling hearts. " Who has done this foolish thing to our beloved Lord? In the name of adornment some thoughtless fools have heaped upon him numerous ornaments that have hidden his natural radiant beauty", murmered some maidens. Some stood with melting hearts unaware of their clothes slipping down. " What a pity we have only one pair of eyes that is hardly enough to drink deep with the ambrosia of his beauty", moaned some.

"We have not done sufficient penance as Umadevy to win Him " wailed some wanton women.

As the Lord moved on in procession , the inhabitants of different worlds flocked the city to have a glimpse of the bridegroom. Mount Himalayas quaked and shook in consequence of over crowding and inordinate weight. The northern hemisphere sank while the southern part went up. People panicked with fear imagining a deluge to be in the offing. Even the rishis were alarmed " Save us , O Lord from the catastrophe " cried all in one voice. The great god, as the protector of living beings he was, signalled to Nanthideva to beckon sage Agasthia. The sage came and fell at the feet of Siva and stood up with great anxiety. " Listen my devout Ascetic" said the Lord, "people from all parts of the globe have thronged here and the northern side of the mountain has sunk low while the southern side of the mountain has shot up. I request you to go to the south and settle on the slope of mount Pothikai. This will help to set the globe on proper footing." Agastya was saddened by the proposal." Forgive me my merciful Lord. I don't remember to have committed any crime to be punished like this. I have been most eagerly awaiting to witness your Lord's wedding . Will I not be deprived of the rarest opportunity if I am sent away ? ". So saying the sage again fell prostrate before Lord Shiva . " We are not unmindful of your desire . But there is not anyother person ,not even Brahma , so powerful and capable as you are to perform this feat. Proceed to the South , therefore, without protest . We will provide you with the vision of our wedding in Mount Pothikai itself". Now the sage readily agreed and making obeisance set outison his errand.

At the appointed hour Parvathy Devi surrounded by the godesses, Indrani bearing the beteurn Saraswathi rendering Ganga and Yamuna holding the wisks and Luxmi chaperoning, set foot on the ground and tracing her steps gently like a swan reached the wedding hall. With due respect , love and modesty battling in her heart the bride fell at the Lord's feet. Eswara with a gentle smile signalled to her to sit beside Him on the bridal pedestal. She bowed with curtsy and throwing a quick glance at her Lord, sat as directed.

The Himalayan King coming forward took the left hand of the bride and delivered it into the right hand of the bridegroom . It is with all humility and greatest pleasure I give unto thee Oh Lord my most cherished and beloved daughter, whom you be graciously pleased to accept as thy consort". So saying he poured a little perfumed water into the hand of the Lord, signifying his gift.

Meanwhile the Gantharvas (the Celestial Musicians) played music to whose tunes the dancers , Ramba, Menaka, Urvasi and Thilothama danced like plumed peacocks . As soon as the ceremony was over Bramha made his obeisance to the divine couple. Vishnu and Indira then paid their respects to Lord Shiva and consort Parvathy devi . Taking leave of the Himalayan King the couple set off to Mount Kailas accompanied by the celestials the dwarf demons and devotees. (to be continued)

## திருநாவுக்கரசு நாயனார் அருளிய - 6ஆம் திருமுறை

# திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வடிவேறு திரிசூழந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 1

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றும்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 2

கல்லாலின் நீழற் கலந்து தோன்றும்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றும்
சூழரவம் மான்மறியுந் தோன்றுந் தோன்றும்
அல்லாத காலனைமுன் அடர்த்தல் தோன்றும்
ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 3

படைமலிந்த மழுவாளும் மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையி னொலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்
மூரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 4

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல் மதியந் தோன்றும்
இயல்பாக இடுபிச்சை ஏற்றல் தோன்றும்
இருங்கடல்நஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றும்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானில் தோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 5

பாராழி வட்டத்தார் பரவி இட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்
ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்
உடல்துணித்த இடர்பாவங் கெடுப்பித் தன்று
பேராழி முன்னீந்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 6

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றும்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்பும்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 7

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றும்
திரிபுரத்தை எரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேல் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளும் மலிந்து தோன்றும்
பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 8

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்
அணிகிளரும் உருமென்ன அடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றும்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 9

ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி யன்று
தன்முடிமேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமும் மதமத் தம்மும்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவேள் உருவழித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 10

ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவுந் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை அரக்கர் கோனை
நெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

# நினைவிற் கொள்வதற்கு...

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனி | 1 | 15-06-2001 | வெள்ளிக்கிழமை | மாதப்பிறப்பு |
| | 5 | 19-06-2001 | செவ்வாய்க்கிழமை | பிரதோஷ விரதம்<br>கார்த்திகை விரதம் |
| | 7 | 21-06-2001 | வியாழக்கிழமை | அமாவாசை விரதம் |
| | 10 | 24-06-2001 | ஞாயிற்றுக்கிழமை | சதுர்த்தி விரதம் |
| | 11 | 25-06-2001 | திங்கட்கிழமை | மாணிக்கவாசகர் குருபூசை |
| | 12 | 26-06-2001 | செவ்வாய்க்கிழமை | அமர்நீதியார் குருபூசை |
| | 13 | 27-06-2001 | புதன்கிழமை | இரவு நடேசர் அபிஷேகம் |
| | 14 | 28-06-2001 | வியாழக்கிழமை | உதயம் நடேசர்<br>ஆனி உத்தர தரிசனம் |
| | 19 | 03-07-2001 | செவ்வாய்க்கிழமை | பிரதோஷ விரதம் |
| | 21 | 05-07-2001 | வியாழக்கிழமை | பூரணை விரதம் |
| | 25 | 09-07-2001 | திங்கட்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 29 | 13-07-2001 | வெள்ளிக்கிழமை | கலிக்காமர் குருபூசை |
| | 32 | 16-07-2001 | திங்கட்கிழமை | கார்த்திகை விரதம் |



Regd. No. QD / 19 / News 2001 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் இல.195, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13, லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 02-06-20001 இல் வெளியிடப்பட்டது.